விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 79 வள்ளுவர் ஆண்டு 2047 மாசி 01, சனிக்கிழமை 13.02.2016

கொவிசெத
அடுத்த நான்கு கோடியின் உரிமையாளர் நீங்களே
இன்றைய சூப்பர் பரிசு
ரூபா 48,360,868.40
நம்பிக்கையுடன் வாங்குங்கள்



## யாக்கரு சந்தி கோர விபத்தில் இளைஞர் சாவு

வடமராட்சி, பெப்.13
வடமராட்சி - யாக்கருச் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பக். 24

# இனவாதம் தூண்டுவோரை முடக்க ஒன்றிணையுங்கள்

## யாழ்ப்பாணத்தில் அமைச்சர் மங்கள அழைப்பு



யாழ்ப்பாணம், பெப்ரவரி 13
நாட்டில் வங்குரோத்துக் குணம் கொண்ட அரசியல்வாதிகள் சிலர் மக்களைக் குழப்பி இனவாதத்தைத் தூண்ட நினைக்கின்றனர். அவர்களின் செயற்பாட்டை முடக்கி ஒடுக்குவதற்கு அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்று நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து அழைப்பு விடுத்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.
நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஆலோசனை பெறும் அமைப்பின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.scrm.gov.lk அறிமுக நிகழ்வு யாழ். பக். 25



## நல்லிணக்கப் பொறிமுறைக்கான இணையத்தளம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 13
நல்லிணக்கப் பொறி முறைகளுக்கான ஆலோசனை பெறும் அமைப்பின் உத்தியோகபூர்வ இணையத்தளம் யாழ்.மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று மு.ப. 11 மணிக்கு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
வெளிவிவகார அமைச்சர் மங்கள பக். 22

## வழங்கப்படும் அதிகூடிய தண்டனையே ஏனைய சாரதிகளுக்கு படிப்பினையாகும்

### வலியுறுத்தி நேற்று மனுக் கையளிப்பு



யாழ்ப்பாணம், பெப். 13
விபத்தை ஏற்படுத்தும் சாரதிகளுக்கு வழங்கும் தண்டனையானது ஏனைய சாரதிகளுக்கும் படிப்பினையை உண்டுபண்ணுமளவுக்குக் கடுமையானதாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. வாகன விபத்துக்களினால் சாவு ஏற்படுவதைத் தடுத்துநிறுத்துமாறு பக். 25




அப்ப இரண்டு பேரின் மோதலும் வீதிக்கு வந்துட்டுது என்றியளோ...

## மரணச் சான்றிதழுக்குப் பதில் காணாமற்போனோர் படிவம்

### சபையில் அறிவித்தது அரசு

கொழும்பு, பெப்.13
காணாமற்போனோருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கும் முறைமை ஐ.நாவால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அத்துடன், இலங்கைச் சட்டத்திலும் இதற்கு இடமில்லை. அதற்கான அதி பக். 25

## மகிந்த தரப்புக்கு வாய்ப்பூட்டு போட்டார் ஜனாதிபதி மைத்திரி

### கட்சியை விமர்சித்தால் கடும் நடவடிக்கை

கொழும்பு, பெப்.13
சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் அதன் தலைவரான மைத்திரிபால சிறிசேனவையும் விமர்சிக்கும் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகத் தராதரம் பாராது கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு சு.கவின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. பக். 22

## தமிழரசுக் கட்சி அலுவலகத்துக்கு நேற்று நேரில் சென்றார் மங்கள

### கூட்டமைப்பு எம்.பிக்களுடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், பெப். 13
யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்கு நேரில் சென்று, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.
அரசினால் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கச் செயற்பாடுகளை ஆரம்பித்து வைப்பதற்காக, யாழ்ப்பா பக். 22

## மக்கள் எங்கோ அங்கே மகிந்த

### அவரே நேற்றுத் தெரிவிப்பு



கொழும்பு, பெப்.13
தமது நலன்களைக் காப்பதற்கு தலைவன் வேண்டும் என்று முழுநாடுமே கேட்டு நிற்கின்றது. அந்த வகையில், மக்கள் எங் பக். 24

## என் வேலையை நான் காட்டுவேன்

### ஜனாதிபதி மைத்திரிபால சீற்றம்

கொழும்பு, பெப்.13
மகிந்த ராஜபக்சவின் செயற்பாடுகள் தொடர்பில் என்னிடம் அழுது புலம்பி விமர்சனங்களைத் தொடுத்தவர்களே இன்று அவர் பின்னால் வலம் வருகின்றனர். புதிய கட்சி ஆரம்பித்தால் ஆரம்பிக்கட்டும். எனது வேலையை நான் காட்டுவேன். அவர்கள் பாற்சோறு சமைத்த பக். 24

## மாவீரர்களை நினைவுகூர அனுமதி வழங்கவேண்டும்

### அரசமைப்புக் கருத்தறியும் குழுவிடம் முல்லைத்தீவு மக்கள் கருத்து முன்வைப்பு

முல்லைத்தீவு, பெப். 13
இனப் பிரச்சினைக்கு தனித் தமிழீழம் தான் தீர்வு எனவும், போரில் உயிர்நீத்த எங்களுடைய உறவுகளையும் மாவீரர்களையும் நினைவு கூருவதற்கும் எந்தவித தடைகளும் இன்றி அங்கீகரிக்க வேண்டும்.
அரசமைப்பு உருவாக்கம் தொடர்பாகக் கருத்தறியும் குழுவிடம் இவ்வாறு கருத்துத் தெரிவி பக். 24

## ஆயுதங்கள் உள்ளதாக விசுவமடுவில் தேடுதல்



கிளிநொச்சி, பெப். 13
ஒரு தொகுதி ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்து கொழும்பில் இருந்து வருகை தந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால், கிளிநொச்சி - விசுவமடுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஒன்று பக். 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அசமந்தமாக வாகனம் ஓட்டும் சாரதிகளுக்கு கடும் தண்டனை

## வேண்டும் என்கிறார் வடக்கு போக்குவரத்து அமைச்சர்

கிளிநொச்சி. பெப். 13
அசமந்தப்போக்கில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும். அத்துடன் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொலிஸாரும், நீதித்துறையும் மிகவும் சரியான முறையில் இவர்களுக்குத் தண்டனை வழங்கும் பட்சத்தில் இவ்வாறான விபத்துக்களைக் குறைத்து உயிர்களைக் காக்க முடியும் என வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் இடம்பெற்ற பஸ் நிலையத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

எந்த ஒரு விடயத்தை நாம் செய்வதானாலும் சட்டத்தைக் கடைப்பிடித்தே செய்யவேண்டும். ஒரு நாட்டில் ஒரு நிமிடம் சட்டம் செயலிழக்குமானால் அந்த நாட்டின் அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளும் தலைகீழாகும் என்பது அனைவரும் அறிந்ததே.

ஆகவே ஒரு நாட்டின் சகல துறையினரும் அந்தந்த துறை சார்ந்த சட்டங்களைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே இது தொடர்பில் சாரதிகள் மிகவும் அவதானமாக ஒவ்வொரு வீதி சமிக்ஞைகளையும் கடைப்பிடித்து வீதியில் செல்லும் ஏனைய பொதுமக்கள் நலனில் அக்கறை உள்ளவர்களாக இருக்கவேண்டும். எமது மாகாணத்தில் கடந்த ஆண்டு இயற்கைச் சாவை விடவும் வீதி விபத்துக்களாலேயே அதிக சாவுகள் இடம்பெற்றுள்ளதாகத் தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதற்குச் சாரதிகளின் அசமந்தப்போக்கே பிரதான காரணம்.

இன்று இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கும் தனியார் பஸ்களுக்கும் இடையில் காணப்படும் போட்டித் தன்மையால் அவர்கள் வீதிகளில் போட்டியிட்டுச் சமாந்தரமாகச் செல்வதைக் காணமுடிகின்றது. இந்தப் போட்டித் தன்மை வீதியில் சென்றுகொண்டிருக்கும் பொதுமக்களினதும், பஸ்களில் பயணம் செய்யும் பயணிகளினதும் உயிர்களையே அநியாயமாகக் காவுகொள்ளும் சந்தர்ப்பத்தை தோற்றுவிக்கின்றது.

அண்மையில் யாழ்ப்பாணம் பலாலி வீதியில் இடம்பெற்ற விபத்திலும் பாடசாலைக்குச் சிட்டாய் சென்று வீட்டுக்கு உயிரின்றிக் கொண்டு செல்லப்பட்ட சிறுவன் சுவஸ்திகனுக்கு ஏற்பட்ட விபத்துக்கும் சாரதிகளின் போட்டித் தன்மையே பிரதான காரணமாக இருக்கின்றது. உயிர்போன பின்பு சிந்திக்காமல் முன்னரே சிந்தித்திருந்தால் அந்தச் சிறுவன் இன்று உயிரோடு இருந்திருப்பான். இன்று அந்தச் சின்னஞ் சிறுவனைப் பறிகொடுத்துவிட்டு அந்தப் பெற்றோர் படும் அளவற்ற துன்பத்துக்கு யார் ஆறுதல் கூறமுடியும்?

சாரதிகளே உங்களுடைய குழந்தைகளுக்கு இவ்வாறு ஒரு நிலை ஏற்பட்டால் உங்களால் அதை ஏற்றுக்கொள்ளமுடியுமா? அந்தச் சாரதி சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டனைக் காலம் முடிந்து வீடு திரும்பிவிடுவார். ஆனால் சென்ற அந்தச் சிறுவனின் உயிர் மீண்டும் வருமா? சாரதிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாகின்றது.

இவ்வாறு அசமந்தப்போக்கில் வாகனத்தைச் செலுத்தும் சாரதிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்படவேண்டும். இந்த விடயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் காவல் துறையினரும், நீதித்துறையினரும் மிகவும் சரியான முறையில் சாரதிகளுக்குத்தண்டனைகளை வழங்கும் பட்சத்திலேயே இவ்வாறான விபத்துக்களை இனி வரும் காலங்களில் குறைத்து உயிர்களைக் காக்கமுடியும் என்றார். (த-21)

# முதலமைச்சர் அலுவலகம் நேற்று கைதடியில் திறப்பு



யாழ்ப்பாணம், பெப். 13
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் அலுவலகம் மற்றும் முதலமைச்சர் அமைச்சு அலுவலகம் ஆகியவற்றுக்கான நிரந்தரக் கட்டடம் நேற்றுக் கைதடியில் பொங்கலுடன் திறந்து வைக்கப்பட்டது.

கைதடி பேரவைச் செயலக வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடமே இவ்வாறு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. முதலமைச்சரின் அலுவலகம் தற்போது யாழ்.சோமசுந்தரம் அவனியூ பகுதியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நிலையில் தற்போது நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆரம்ப நிகழ்வானது முதலமைச்சரின் செயலாளர் வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதலமைச்சர் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்கள், பேரவைத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-101)

# யாழ். பல்கலைக்கழகத்தில் மாணவரிடையே கைகலப்பு

## மூன்று பேர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 13
யாழ்.பல்கலைக்கழகத்தில் இரண்டுமாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் மூன்று மாணவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தின் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வணிகபீடப் பெரும்பான்மை இன மாணவர்களே இவ்வாறு கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். 2 ஆம் வருட வணிகபீட மாணவர்களுக்கான விரிவுரை ஒரு மணியளவில் முடியவேண்டிய நிலையில் அன்றையதினம் 12.45 க்கு முடிவடைந்துள்ளது. அந்த நேரம் வகுப்பறைக்குள் அத்துமீறி நுழைந்த 3 ஆம் வருட மாணவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் மூன்று மாணவர்கள் அடிகாயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-107)

# பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 13
வனவிலங்குத் திணைக்களத்தினால் இன்று சனிக்கிழமை நடத்தப்படவிருந்த ஆட்சேர்ப்புப் போட்டிபரீட்சை இன்று நடைபெறாதெனப் பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்

இந்தப் போட்டிப்பரீட்சை நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார். (த-402)

# 2 வாகனங்களில் 12 மாடுகள் கடத்தியோருக்கு அபராதம்

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சட்டவிரோதமாக 12 மாடுகளை 2 வாகனங்களில் ஏற்றிச்சென்ற இரு சாரதிகளுக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமாக தீர்ப்பளித்தார் சாவகச்சேரி நீதிவான் எம்.எச்.எம்.ஹம்சா. அந்த 2 வாகனங்களையும் கைதடியில் மறித்துச் சோதனையிட்டபோது 12 மாடுகள் சட்டவிரோதமான முறையில் கொண்டுசென்றமை கண்டுபிடிக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு வாகனத்தில் 9 மாடுகளும், மற்றைய வாகனத்தில் 3 மாடுகளுமாக இவை எடுத்து செல்லப்பட்டிருந்தன. இதன்போதே இரண்டு சாரதிகளுக்கும் சாவகச்சேரி நீதிமன்றம் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது. மேலும் குறித்த மாடுகளை உரிமையாளரிடம் ஒப்படைக்கு மாறு நீதிவான் உத்தரவிட்டார். (த-4-107)

# கெக்கிராவையிலும் சிங்க லே; முஸ்லிம் வர்த்தகர்கள் அச்சம்

யாழ்ப்பாணம், பெப். 13
கெக்கிராவை நகரில் சிங்க லே என்ற பெயரில் நகரிலுள்ள முஸ்லிம் கடைகளை அகற்றுமாறு கோரிச் சுவரொட்டிகள் நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் ஒட்டப்பட்டுள்ளதாக அங்குள்ளவர்கள் தெரிவித்துள்ளனர்.

அவற்றை ஒட்டும்போது பொலிஸார் தடுக்காது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சுவரொட்டிகளில், முஸ்லிம் கடைகளை கெக்கிராவையிலிருந்து அகற்றவேண்டும். முஸ்லிம்களை விரட்ட வேண்டும் என்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுரொட்டிகள் ஒட்டும்போது பொலிஸாரிடம் மக்கள் முறைப்பாடு தெரிவித்தபோதும் பொலிஸார் எந்த நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், சுவரொட்டிகள் ஒட்டும்போது பொலிஸார் ப்கிரங்கமாக பார்த்துக் கொண்டு நின்றுள்ளனர் எனவும், அதனால் பொறுமை இழந்த, நகரிலுள்ள முஸ்லிம் கடை வியாபாரிகள் பொலிஸ் நிலையம் சென்று தமது பகுதியில் ஒட்டப்பட்டுள்ள அந்தச் சுவரொட்டிகளை அகற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தனர் என்றும். அதன்பின்னரே நகரிலுள்ள சில சுவரொட்டிகள் இரவோடு இரவாக பொலிஸாரால் அகற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் சுவரொட்டி ஒட்டியவர்கள் பேருவளை மற்றும் அளுத்கம போன்ற இடங்களில் நடந்ததுபோன்றே இங்கும் நடக்கும் என்று கூறி எச்சரிக்கை விடுத்துச் சென்றுள்ளதாகவும் அதனால் அச்சமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-4)

# தமிழ்ப் பொலிஸாருக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக வவுனியா தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

வவுனியா பஸ் நிலையத்துக்கு முன்னால் நகர சபையினால் முறைப்படி வழங்கப்பட்ட கடை ஒன்று உள்ளது. இதனை மேற்படி நபர் நடத்தி வருகின்றார்.

இந்தநிலையில் வெளிநாட்டில் இருந்து வந்த குறித்த தமிழ்ப் பொலிஸ் உத்தியோகத்தரின் சகோதரன் செல்வாக்கைப் பயன்படுத்திக் கடைக்காரரை அச்சுறுத்திச் சட்டத்தரணி ஊடாக அந்தரப்படுத்தப்பட்டு ஆவணம் ஒன்றைத் தயாரித்துக் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், இதற்காக 47 இலட்சம் ரூபா பணம் தருவதாகக் கூறியே இந்தக் கையொப்பம் பெறப்பட்டதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது,

ஆனால் கடையைக் கைப்பற்றியவர்கள் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குவதாகக் கூறியிருந்த பணத்தைக் கொடுக்கவில்லை என்றும், கடையைப் பெற்றவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் கடையைக் கொடுத்துவிட்டு மீண்டும் வெளிநாடு திரும்பியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

அவர் அங்கு சென்று திடீர் சுகவீனமுற்றுப் பின்னர் இறந்துள்ளார். ஆரம்பத்தில் இந்தக் கடையை அடாத்தாகப் பெறுவதற்கு முயற்சித்த குறித்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரே தற்போது அதனை நடத்தி வருகிறார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் பாதிக்கப்பட்ட கடை உரிமையாளர் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

இதன் பிரகாரம் விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக் குழுவுக்கு வடமாகாண பணிப்பாளர் ஊடாக 18-08-2015 எனத் திகதியிடப்பட்ட முழுவிவரம் அடங்கிய அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. எனினும் பாதிக்கப்பட்டவர் தொடர்பில் சுயாதீன விசாரணை மேற்கொள்ளப்பட்டும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பில் வடமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் பாதிக்கப்பட்டவரால் கோரப்பட்டுள்ளது. (த-4-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத்தால் சபையில் மூண்டது கடும் சர்ச்சை

கொழும்பு, பெப்.13

தமிழீழத்தையும் உலகத் தமிழர் பேரவையையும் ஒப்பிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில எழுப்பிய கேள்வியால் நாடாளுமன்றத்தில் நேற்று பெரும் சர்ச்சை ஏற்பட்டது. அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவுக்கும் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வாவுக்கும் இடையில் கடும் சொற்போர் மூண்டது.

நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல் ஆகியன முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.

இதன்போது உலகத் தமிழர் பேரவை தொடர்பிலும் அதன் தலைவர் சம்பந்தமாகவும் ஏழு வினாக்களை வெளிவிவகார அமைச்சரிடம் உதய கம்மன்பில தொடுத்திருந்தார். இவற்றுக்கு பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா பதில்களை வழங்கினார்.

பிரதியமைச்சர் இவ்வாறு பதில்களை வழங்கிய பின்னர் இடையிட்டுக் கேள்விகளை எழுப்புவதற்குத் தயாரானார் உதய கம்மன்பில.

சபாநாயகரே, நான் தொடுத்திருந்த வினாக்களுக்கு அமைச்சர் உரிய பதில்களை வழங்கவில்லை. வட்டுக்கோட்டைக்கு வழி கேட்டால்துட்டுக்கு இரண்டுகொட்டைப்பாக்கு என்பதுபோல்தான் பதிலளித்துள்ளார் என்று சிரித்தபடியே கூறினார் கம்மன்பில.

இதனால் ஆத்திரமடைந்தார் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா. கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சரியான பதில்கள் வழங்கப்பட்டுள்ளன. உலகத் தமிழர் பேரவை பற்றியே இவர் கேட்டுள்ளார். தமிழீழம் பற்றி கேட்கவில்லை. அதுபற்றி எதுவும் இங்கு குறிப்பிடப்படவும் இல்லை. எனவே, இல்லாத விடயமொன்றுக்கு எப்படி பதிலளிக்கமுடியும் என்று ஹர் வாதிட்டார்.

இந்தநிலையில், மீண்டும் குறுக்கீடுசெய்த கம்மன்பில, பிரதியமைச்சரே, முதலில் கேள்வியை தெளிவாக வாசித்துவிட்டுத் தர்க்கங்களை முன்வையுங்கள் என்றார்.

உலகத் தமிழர் பேரவை என்றுதான் வினா ஆரம்பமாகிறது. ஆனால், இவர் தமிழீழம் என்று கேள்வியை தொடங்குகிறார். அவ்வாறு எதுவும் இங்கு இல்லை. இல்லாதவொன்றுக்கு எப்படி பதிலளிக்கமுடியும் என பதிலடி கொடுத்தார் ஹர் டி சில்வா.

சபாநாயகரே பிரதியமைச்சர் தெளிவின்றிக் கதைக்கிறார். 'ஆ' பகுதியின் நான் எழுப்பியுள்ள கேள்விக்குப் பதிலளிக்காது வேறெதையோ கூறுகிறார் என்றார் கம்மன்பில.

இதற்குப் பதிலளித்த பிரதியமைச்சர் அ, ஆ, இ, ஈ என்ற கிரமத்தின்படிதான் கேள்வி தொடுக்கவேண்டும் என விளக்கமளித்தார். ஆனாலும் ஓயவில்லை கம்மன்பில. தான் எழுப்பிய கேள்விக்கு ஆம்" அல்லது இல்லை" என பதிலளிக்குமாறு ஒற்றைக் காலில் நின்றார்.

இதன்போது குறுக்கீடு செய்தசபாநாயகர், நீங்கள் இருவருமே கற்றறிந்தவர்கள். எனவே, விடயம் அறிந்துசெயற்படுங்கள் என ஆலோசனை வழங்கினார். எனினும், சர்ச்சை ஓயவில்லை. அனைத்து கேள்விகளுக்கும் பதிலளித்துவிட்டார் என அடித்துக் கூறினார் ஹர் டி சில்வா. தெளிவில்லையென்றால் செவிகளை சுத்தம் செய்யுமாறு கம்மன்பிலவுக்கு அவர் கிண்டலடித்தார்.

மறுபுறத்தில் தனது கேள்விக்குப் பதிலளிக்கவில்லை என்று தொடர்ச்சியாக வாதிட்டார் கம்மன்பில. இதனால் சொற்போர் நீடித்தது. சபை முதல்வரும், அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்லவுக்கும் தலையிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

பிரதியமைச்சர் வழங்கும் பதிலை ஏற்க வேண்டும். அதை சவாலுக்குட்படுத்த முடியாது என்றார் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல. எனினும், தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை உதய கம்மன்பில. கேட்கப்படுவது ஒன்று. சொல்லப்படுவது ஒன்றாகவே இருக்கிறது என்றும் சுட்டிக் காட்டினார்.

சர்ச்சை நீடித்ததால், மூன்றாவது இடையீட்டுக் கேள்வியை எழுப்புமாறு உதய கம்மன்பிலவுக்கு பணிப்புரை விடுத்தார் சபாநாயகர்.

சபாநாயகரே, நான் இன்னும் ஓர் இடையீட்டுக் கேள்வியைக்கூட எழுப்பவில்லை. ஆனால், கேட்கப்பட்டதாக நீங்கள் சொல்கின்றீர்கள். இதை ஏற்கமுடியாது. உங்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் இடையீட்டுக் கேள்விகள் கேட்கப்படுவதை நான் நிறுத்திக் கொள்கிறேன் எனக் கூறிவிட்டு அமர்ந்தார் கம்மன்பில.

(த-சி)

# 19 லட்சம் பெறுமதியான தங்க நகைகள் திருட்டு

## திருமண வீட்டுக்கு வந்த பெண்ணிடம்

திருமண வீட்டுக்கு வந்த பெண்ணின் 19 லட்சம் பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளதென்ற முறைப்பாட்டைப்பதிவு செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

யாழ். கொக்குவில் குளப்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் வடக்கு, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி தங்கராணி என்பவர் தனது உறவினரின் வீட்டுக்குத் திருமணத்துக்கு வருகை தந்துள்ளார். தனது தாலிக்கொடி உட்பட பல நகைகளையும் பணத்தையும் தனது கைப்பையில் வைத்திருந்துள்ளார்.

அந்தவேளையில், கைப்பையில் இருந்த 19 லட்சத்து ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

வீட்டில் வைத்து தனது கைப்பையைப் பார்த்தபோது அதற்குள் இருந்த நகை மற்றும் பணத்தைக் காணவில்லை என உறவினர் வீட்டில் தேடிப் பார்த்துவிட்டு, நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுபதிவுசெய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்.பொலிஸார் திருமண வீட்டில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (த-106)

# வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நாளை

வட மாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தனால் கடந்த வருட மாகாண பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட வாழ்வாதாரஉதவிகளுக்குத்தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான உதவிப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நாளை பி.ப. 3 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலை மன்றக் கலாசார மண்டபத்தில் இடம் பெறும்.

மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமை யில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மைவிருந்தினராக நாடாளுமன்றஉறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் கலந்து கொண்டு உதவிப் பொருள்களை வழங்கவுள்ளார்.

வாழ்வாதார உதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அறிவுறுத்தல்கள், கடிதங்கள் மற்றும் அலைபேசி மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-9)

**வீடு வாடகைக்குத் தேவை**

மாநகர சபை எல்லை OΓ அதனை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை

தொடர்புக்கு: 077 3484 837 (68917)(15.17)

**LAPTOP SALE**

Core 2 HP / DELL LAPTOP

மலிவு விலையில்

19,750/- மட்டுமே

(ஒரு வருட உத்தரவாதம்) (c/29109) (15.17)

ST.ANTONY'S
187, KKS Road, Jaffna Town.
021 222 4865
075 069 8608

இம்முறை தனயோகம் உங்களுடையதா?

திகதி 12.02.2016 | வெற்றி வாரம் 1941 | வர்ணம் சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

13 35 43 52

ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி

ரூ. 2,000,000/-

Web: www.dlb.lk

1919

நியத்த ஜய

வெற்றி வாரம் : 436

திகதி : 12.02.2016

வர்ணம் : நீலம்

விஷேட வெற்றி இலக்கம்

1053

ஜக்பொட் பரிசுத்தொகை

ரூ 11,441,700/-

வெற்றி இலக்கங்கள்

19 56 58 65

ஆங்கில எழுத்து

F

Web: www.dlb.lk

1919

Tel: 011 4 824 824

**அவசர ஒன்று கூடல்**

மார்ச் 20 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளதால் B.B.M - 1st Batch, B.A- 2011, B.Com - 2010, 2011 ஆகிய கல்வியாண்டு பட்டச்சான்றிதழ் பெறும் பட்டதாரி மாணவர்களை நிகழ்வு ஒழுங்கமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாட வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

✱ திகதி:14.02.2016 ✱ நேரம்: 11.30 மணி

✱ இடம்: நாவலர் கலாசார மண்டபம்

(68900)(13.18.20.17)

வெளிவாரி பட்டதாரி மாணவர் ஒன்றியம் யாழ். பல்கலைக்கழகம்

**விற்பனைக்கு**

ஜேமன்சப் பேட் நாய்க்குட்டி (60 நாள்) (c/29110)(15.17)

தொடர்புக்கு: பருத்தித்துறை - 077 9048 404

**விற்பனைக்கு**

1. அரிசிக்குறுணி விற்பனைக்கு உண்டு.
2. மில் வேலை தெரிந்தவர்களும் தேவை.

மாப்பியன் மில், சுதுமலை, மானிப்பாய்.

(68912)(15.17) T.P: 077 7722 215

**விற்பனைக்கு**

ஒரு வயது நிரம்பிய ஜேமன் செப்பேட ஆண் நாயும் பொமேரியன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும் பொக்கட்ஸ்பெனியர் நாய்க்குட்டிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு: வி. மயூரன் T.P: 077 015 8690

மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசுவாமி கோயில் பின் வீதி (68908) (15.17)

**தவறிவிட்டது**

தங்கவடிவேல் பிரகாஷ் ஆகிய எனது 880193899V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் மற்றும் வாகனங்களின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேஸ் யாழ்ப்பாணத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P: 077 7905 977 (68918) (15.17)

**தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் விஷேட பொதுக் கூட்டம்**

இடம்: இந்து இளைஞர் சங்க பணிமனை

நேரம்: மாலை 6.00 மணி | காலம்: 2016.02.14

2014- 2015 ஆம் ஆண்டிற்கான கணக்கறிக்கையினை சமர்ப்பித்தல் தொடர்பான இக்கூட்டங்களிற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம். (68911) (15.17)

இணைச் செயலாளர் - தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு வேலையாள்கள் தேவை.

1. அனுபவம் உள்ள கணக்காளர் (Experienced Accountant)
2. உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Technical Assistant )
3. அலுமினிய பிற்றிங் வேலை தெரிந்தவர்
4. வெல்டர்
5. மேசன்மார்
6. தச்சுவேலை

தொடர்புகளுக்கு: T.P: 0777 245399

e-mail: beststarcon@hotmail.com (68915) (10.17.20)

**வேலணை பிரதேசசபை**
**பகிரங்க அறிவித்தல்**
**உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகள் ஏல விற்பனை**

வேலணை பிரதேசசபையினால் பிடிக்கப்பட்ட உரிமை கோரப்படாத கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 15.02.2016 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வேலணை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள பராமரிப்பு நிலையத்தில் ஏலத்தில் விற்கப்படும் (மாடுகள் எக்காரணம் கொண்டும் இறைச்சிக்கு விற்பனை செய்யப்படமாட்டாது இது விடயமாக பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு அமைப்பு யாழ்ப்பாணம் செயலாளர் / அமைப்பாளர் தொலைபேசி எண் 0771611865 இற்கு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தி வரவேண்டும்.)

**நிபந்தனை**

ஏலத்தில் கலந்து கொள்பவர்கள் தேசிய அடையாள அட்டையையும், அதன் நிழல் பிரதியையும் சமர்ப்பிப்பதுடன் தங்கள் பகுதி கிராம அலுவலரிடம் மாடுகள் வளர்ப்புக்காக மட்டுமே பெறுகின்றோம் என்பதை உறுதிப்படுத்திய கடிதம் இணைக்கப்பட வேண்டும். அத்துடன் ரூபா 100.00 செலுத்தி விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலும் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 500.00 15.02.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தில் செலுத்துதல் வேண்டும். சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினம் ஒப்புக் கொண்ட ஏலத்தின் முழுத் தொகையினையும் செலுத்தி மாட்டினைக் கொண்டு செல்லல் வேண்டும்.

**குறிப்பு:-**

01. சித்தி பெற்ற ஏல தாரர்கள் மாடுகளை வெளியிடங்களுக்கு கொண்டு செல்வதற்கு முன்னர் பிரதேச செயலர் தீவகம் தெற்கு அவர்களின் அனுமதியும்
02. கால்நடை வைத்திய அதிகாரி வேலணை அவர்களின் அனுமதியும் பெற்றுக் கொள்ள வேண்டும்.
03. வேலணை பிரதேச மக்களுக்கு ஏலத்தின் போது முன்னுரிமை வழங்கப்படும்.

**அ.குருநாதன்**
**செயலாளர்**
**வேலணைப் பிரதேச சபை,**
**வேலணை.**

(C/29107)
(10.17.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்டர் டெலான் அடிகளாரின் உருவச்சிலை குருநகரில் திறப்பு

கொழும்புதுறை.பெப்.13

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்னாள் பங்குத் தந்தையும், பாஷையூர் கடற்றொழிலாளர்களுக்குச் சிறகுவலைத் தொழிலை அறிமுகம் செய்த வருமான ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த அருட்திரு விக்டர் டெலான் அடிகளாரின் உருவச்சிலை கடந்த வெள்ளிக்கிழமை பாஷையூர் கடற்றொழிலாளர் சங்க முன்றிலில் திறந்து வைக்கப்பட்டது.

பங்குத் தந்தை அருட்திரு லியோ ஆம்ஸ்ரோங் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினரான அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு எட்வின் வசந்தராஜா அடிகளார் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைத்தார். உருவச் சிலைக்கான மலர்மாலையை வடமாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட் அணிவித்தார்.

கடற்றொழிலாளர் சங்கமும், மின்னல் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் டெலான் அடிகளார் ஞாபகார்த்தமாக கடற்றொழிலாளரின் மீன்பிடி உபகரணங்களை பாதுகாப்பாக வைக்கும் களஞ்சிய அறைகளும் திறந்து வைக்கப்பட்டன. நிகழ்வில் கடல்சார் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பும் இடம் பெற்றது.

(த-ஐ-135)




## விற்பனைக்கு

கணக்காய்வு நிறுவனம் ஒன்றின் பாவனையிலிருந்த 4 பேர் தனித் தனியாக இருந்து கணினியில் புணியாற்றக் கூடிய மேசை (தம்ரோத்தயாரிப்பு) உடன் விற்பனைக்குண்டு. தனியார் நிறுவனங்களிற்கு ஏற்றது.

**077 007 8802**

(68846) (13.18

## Study in Latvia ( Europe)
Schengen Visa( Valid for 25 Countries)



Why Study In Latvia?

* Bachelors / Master / Doctoral level
* Government Approved University
* English Medium
* IELTS Not Required
* Easy Visa procedures
* Very low course fee
* Low cost of living
* 20 Hours part time Allowed

Admission open for Sep-2016 intake

ics Study Overseas

Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road, Colombo - 06


# கொலைக் குற்றச்சாட்டிலிருந்து ராணுவ அதிகாரிகள் விடுதலை

## யாழ்.மேல்நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், பெப். 13

மயிலிட்டி இராணுவ காவலரணுள் இராணுவச் சிப்பாய் ஒருவரைக் கொலை செய்ததாக, சக இராணுவ கனிஷ்ட அதிகாரிகள் இருவருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் 22 வருடங்களாக நடைபெற்று வந்த நிலையில், குற்றம் நிரூபிக்கப்படாததால் அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த 1994 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மயிலிட்டி முன்னரங்கக் காவலரண் ஒன்றில் குசும்சிறி என்ற இராணுவச் சிப்பாய் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டார்.

அதன்பின்னர் அவருடைய நேரடி உயரதிகாரிகளான சுமதிபால மற்றும் ஜயசுந்தர ஆகிய இரண்டு இராணுவ கனிஷ்ட அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு எதிராகச் சட்டமா அதிபர் கொலைக்குற்றம் சுமத்தி யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்திருந்தார்.

கடந்த 22 ஆண்டுகளாக யாழ். நீதிவான் நீதிமன் று மற்றும் யாழ்.மேல் நீதிமன்று ஆகியவற்றில் இந்த வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்ட தினத்தன்று எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி தனது தொகுப்புரையில், குறித்தநபர் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று ஆரம்பத்தில் முடிவுக்கு வரப்பட்டது.

ஆயினும், 2, 3 மாதங்களின் பின்னர் அதில் சந்தேகம் இருப்பதாக முறைப்பாடுகளும் தகவல்களும் கசிந்ததையடுத்தே, குற்றச்செயல் இடம் பெற்றதா என்று விசாரணை நடத்தப்பட்டது. அந்த விசாரணையின் பின்னர், 2 கனிஷ்ட அதிகாரிகளுக்கு எதிராகக் குற்றம் சாட்டப்பட்டு இந்த வழக்கு ஆரம்பிக்கப்பட்டது-என்றார்.

இராணுவக் காவலரணுக்குள் நின்றபோது நடுநிசி நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. கொலைக் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள் இருவரும் காவலரணுக்கு வெளியில் இன்னுமொரு இராணுவச் சிப்பாயுடன் தமது துப்பாக்கிகள் சகிதம் நின்றிருந்தனர். வழக்குத் தொடுநர் தரப்பு இராணுவச் சிப்பாய் ஒருவரின் சாட்சியத்தின்படி, இது நீதிமன்றத்தில் உறுதிப்படுத்தப்பட்டது.

சூடு நடத்தப்பட்ட துப்பாக்கி இறந்துபோன இராணுவச் சிப்பாய்க்கு அலுவலக ரீதியாக வழங்கப்பட்ட துப்பாக்கி என்பதும் அவர் இராணுவக் காவலரணுக்குள் சென்றபோது அந்தத் துப்பாக்கியைத் தன்னுடன் எடுத்துச் சென்றிருந்தார் என்பதும் சாட்சியங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது.

அதேநேரம் குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகளின் வசமிருந்த துப்பாக்கிகளில் எதுவும் துப்பாக்கிப் பிரயோகத்திற்குப் பயன்படுத்தப்படவில்லை என்பதும் விசாரணையின்போது நிரூபணமாகியிருந்தது.

இறந்தவரின் சாவுக்குக் காரணமாகிய துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகக் கருதப்படும் துப்பாக்கியைப் பகுப்பாய்வு செய்த அரச இரசாயன பகுப்பாய்வாளர் அது இறந்தவரின் துப்பாக்கி என்பதையும், அந்தத் துப்பாக்கியில் இருந்தே மரணத்தை ஏற்படுத்திய துப்பாக்கிக் குண்டு புறப்பட்டிருந்தது என்பதையும் ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தி அறிக்கை சமர்ப்பித்து சாட்சியமளித்திருந்தார்.

எனவே, இறந்தவருடைய துப்பாக்கியே மரணத்தை ஏற்படுத்துவதற்கு சூடு நடத்திய துப்பாக்கி என்பது இரசாயனப்பகுப்பாய்வாளரினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த வழக்குத்தொடர்பான தீர்ப்பை வழங்கியபோது, நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்ததாவது:-

கொலைக்குற்றம் சுமத்தப்பட்ட எதிரிகள்தான் நேரடியாகத்துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்பதற்கு இந்த வழக்கில் கண்கண்ட சாட்சியில்லை. அத்துடன் சந்தர்ப்ப சூழ்நிலை சாட்சியமும் இல்லை. எதிரிகளின் துப்பாக்கிகளில் எதுவும் கொலைக்குப் பயன்படுத்தப்படவில்லை. எதிரி களுக்கு எதிராக சாதாரண சந்தேகமும்கூட வழக் குத் தொடுநரினால் எண்பிக்கப்படவில்லை. எனவே இரண்டு எதிரிகளையும் இந்த நீதிமன்றம் விடுதலை செய்கின்றது என்றார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருந்த முதலாவது எதிரி சுமதிபாலவின் மனைவி நீதிபதியின் விடுதலைத் தீர்ப்பைக் கேட்டவுடன், புத்தம் சரணம் கச்சாமி எனக் கத்திக் குழறித் திறந்த நீதிமன்றில் நிலத்தில் விழுந்து தனது நன்றி வணக்கத்தைத் தெரிவித்தார்.

இவ்வாறு விடுதலை பெற்ற தினத்தன்று முதலாவது எதிரிக்கு 64 வயது என்பதும் இரண்டாம் எதிரிக்கு 48 வயது என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-4)

# காணொலி பாடல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம். பெப். 13

காதலர் தினத்தை முன்னிட்டு நாளை சப்தமி கலையகத்தால் காணொலி பாடல் வெளியிடப்படவுள்ளது. நாளை மாலை 6 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் குறித்த பாடல் வெளியீடு இடம்பெறும்.

காதல் குறித்த பல்வேறு படைப்புக்கள் வெளிவரும் இந்த நாளில் காதலர் தினம் என்பது வெறுமனே ஆண்களும் பெண்களும் காதலிப்பது மட்டுமல்ல. எங்களை, எங்கள் உடலை, எங்கள் குடும்பத்தை, நாம் சார்ந்த சமூகத்தைக் காதலிப்பதும் அதற்காக நாம் செய்யும் நல்ல விடயங்களும் காதல் தான். இதனை வெளிப்படுத்தும் வகையில் இது அமைந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (த-21)


## PROJECT OFFICER – 1 POSITION (MALE / FEMALE)

**Base station : Mullaitivu**
**Contract period: Six Months (may be more)**

PARCIC is looking for a suitable person as a Project Officer in Mullaitivu.

**Essential Qualifications & Experience**

- Age below 35.
- Degree holder or with 3 passes in GCE A/L
- Preferably from Mullaitivu District
- 3-4 years experience in similar capacity.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities
- Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**

- **Closing date for applications will be 20th February 2016**
- **The contract will be renewed depending on the project budget allocation as well as the applicant's working performance.**
- **Please send in your application together with the names of two non-related referees to;**

Regional Director,
PARCIC
No28, Temple Road,
Jaffna
021 222 7897 or slproject1@parcic.org

**Only applicants selected for the interview will be contacted.**

(68902)(10,18,20)

## PROJECT OFFICER – 1 POSITION (FEMALE)

**Base station : Jaffna**
**Contract period : One Year (may be more)**

PARCIC is seeking a dynamic personal as a Project Officer for Sari Recycle project in Jaffna.

**Essential Qualifications & Experience**

- Age below 40.
- G.C.E A/L with minimum 2-3 years experience in similar capacity.
- Sewing ability will be an added advantage.
- Good analytical skills and computer literacy in Microsoft Office.
- Strong interpersonal and liaison skills with the ability to network with diverse stakeholders.
- Good command of written and spoken English with fluency in Tamil.
- Ability to work independently using own initiative within the scope of responsibilities
- Ability and willingness to travel to all parts of the country.

**Please note:**

- **Closing date for applications will be 20th February 2016**
- **The contract will be renewed depending on the project budget allocation as well as the applicant's working performance.**
- **Please send in your application together with the names of two non-related referees to;**

Regional Director,
PARCIC
No28, Temple Road,
Jaffna
021 222 7897 or slproject1@parcic.org

**Only applicants selected for the interview will be contacted.**

(68901)(10,17,18,20)


# டிராக்டர் சாரதிக்கு ரூ.15,000 அபராதம்

யாழ்ப்பாணம், பெப். 13

வழித்தடம் மாறிக் கண்டாவளைப் பகுதியில் இருந்து வல்வெட்டித்துறைப் பகுதிக்கு மணல் ஏற்றி வந்த டிராக்டர் சாரதிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிவான் பெ.சிவகுமார். தொண்டமானாறு பகுதியில் வீதிக் கடமை யில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மணல் ஏற்றி வந்த டிராக்டரைச் சோதனையிட்டனர். இதன்போது மணல் ஏற்றி வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தும், வழித்தடத்தை முறைகேடாகப் பயன் படுத்தி வல்வெட்டித்துறை பகுதிக்கு அதனை எடுத்து வந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

குறித்த சாரதிக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சாரதியைக் கடுமையாக எச்சரிக்கை செய்து நீதிவான் அபராதம் விதித்தார். (த-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலகச் சைவ மாநாடு யாழ். பல்கலையில் ஆரம்பம்





யாழ்ப்பாணம்,பெப். 13
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சமூகத்தினர் சிவாகமங்களும் திருமுறைகளும் புலப்படுத்தும் சைவப் பண்பாட்டுக் கூறுகளும் சமூக நல்லிணக்கச் சிந்தனைகளும் என்ற கருப்பொருளை முன்னிலைப் படுத்தியும், இந்து நாகரிகத்துறை சமூகத்தை நோக்கி பயணிக்கின்றது என்பதைத் தெளிவுபடுத்தும் விதமாகவும் ஏற்பாடு செய்துள்ள முதலாவது அனைத்துலகச் சைவமாநாட்டின் ஆரம்பநாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நேற்று இடம்பெற்றன.

இந்துநாகரிகத்துறை பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெற்ற ஆரம்பநாள் நிகழ்வுகளின்போது பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ண மும், சிறப்பு விருந்தினர்களாகக் கலைப்பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் நா.ஞானக்குமரன், இந்திய துணைத்தூதுவர் ஆ.நடராஜன் ஆகியோரும், விருந்தினர்களாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன், அகில இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆதார சுருதி உரையினை தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் க.பாஸ்கரன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வுகளில் பல்கலைக்கழக பேராசிரியர்கள்,துறைசார் விரிவுரையாளர்கள்,மாணவர்கள்,சைவ ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டின் சமகால ஆய்வு அமர்வுகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரையும் நாளை 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளன.நிறைவு நாள் நிகழ்வுகள் 14 ஆம் திகதி மாலை 2 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன.

அதேபோன்று ஆன்மீகச் சுற்றுலா நிகழ்வுகள் 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளனம குறிப்பிடத்தக்கது.

(த-ரி2)

## மாடு வெட்டியோர் பொலிஸாரை கண்டு ஓடித் தப்பினர்

வடமராட்சி, பெப். 13
துன்னாலை வேருண்டை மயானத்துக்கு அருகில் உள்ள காட்டில் நேற்று அதிகாலை 3 மணியளவில் சட்டவிரோதமாக மாட்டிறைச்சி வெட்டிக்கொண்டிருந்த சிலர் பொலிஸாரைக் கண்டதும் ஓடித் தப்பியுள்ளனர்.

நெல்லியடிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்பேரில் குறித்த மயானத்துக்குப் பொலிஸார் சென்றபோது களவாக மாட்டிறைச்சி வெட்டிக் கொண்டிருந்த சிலர் தப்பிச்சென்றுள்ளனர்.

இறைச்சி வெட்டியோரால் கைவிடப்பட்ட சுமார் 50 கிலோ மாட்டிறைச்சி மற்றும் கத்திகள் தப்பிச் சென்றோரால் கைவிடப்பட்ட சைக்கிள்கள் என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றினர். பின்னர் பிரதேச சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுறுத்தலின்பேரில் வெட்டப்பட்ட மாட்டிறைச்சி அப்புறப்படுத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

(த-173)

## கொடியேற்ற உற்சவம்

சுழிபுரம், பெப்.13
சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயில் உற்சவம் இன்று முற்பகல் 11.15 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

20 ஆம் திகதி சனிக்கிழமை புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் பகல் 10.30 மணி முதல் ஒரு மணி வரை நடைபெறும்.

புதிய சித்திரத் தேரில் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.30 மணிக்கு சுவாமி எழுந்தருளி வீதியுலா வருவார். அடுத்த நாள் திங்கட்கிழமை பகல் 11மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சங்காபிகேம் திருக்கல்யாணம் நடைபெறும்.

(த-28)

# மன்னார் பகுதிக் கடலில் கணவாய் அழியும் நிலை

*குழைக் கட்டிப் பிடிப்பதே காரணம் என்று மீனவர்கள் குற்றச்சாட்டு*

மன்னார் பகுதிகளிலுள்ள கடலுக்கு அடியில் மரம், குழை வைத்து கணவாய் பிடிப்பதால் விரைவில் கணவாய் இனம் அழியும் நிலை காணப்படுவதாக தெரிவித்த மன்னார் மீனவர்கள், இது தொடர்பாக கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டினர்.

குழை வைத்து கணவாய் பிடிக்கும் தொழில் சட்டத்துக்கு முரணானது அல்ல எனவும், அது அங்கீகரிக்கப்பட்ட தொழில் எனவும் தெரிவித்த மன்னார் கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், கணவாய் பிடிப்பதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும் இந்த ஆண்டுக்கான அனுமதிகள் இதுவரை வழங்கப்பட்டவில்லை எனவும் தெரிவித்தார்.

மன்னார் கடற்பரப்பில் நீண்டகாலமாகக் குழை கட்டிக் கணவாய் பிடிக்கும் தொழில் இடம்பெற்று வருகின்றது. இதனால் கடலில் உள்ள கணவாய் இனங்கள் வேகமாக அழிக்கப்படுகின்றன. கணவாயை பிடிப்பதற்காகக் கடலுக்கு அடியில் குழைகளை வைக்கும் போது, கடற்கரையிலுள்ள மண்களை உரப்பைகளில் அடைத்து அதனையும் கடலுக்குக் கீழ் பற்றைக்கு பாரமாக வைக்கின்றார்கள்.

இதனால் கடற்கரையில் மணல் குறைவடைந்து மண் அரிப்பு ஏற்படுவதற் கும் வாய்ப்பு உள்ளது என மன்னார் மீனவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்தச் செயற்பாட்டைத் தடுக்கக் கடற்றொழில் திணைக்களம் நடவடிக்கை எடுக்காமை கவலை அளிப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கடலுக்கு அடியில் வைக்கப்படும் பற்றைப் பகுதிக்குள் கணவாய்கள் இனப்பெருக்கத்துக்காக அதிகமாக வருதாகவும் இதன்போது, கணவாயைப் பிடித்து செல்லும் மீனவர்கள் குஞ்சுக் கணவாயையும் பிடித்துச் செல்வதாகவும், இதனால் எதிர் கால்த்தில் கணவாய் இனம் அழிந்துபோகும் நிலை உருவாகி வருவதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வள திணைக்கள பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது,

குழை வைத்துக் கணவாய் பிடிப்பது சட்டத்துக்கு முரணான தொழில் அல்ல. இது கடற்றொழில் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட தொழில். ஆனால் இந்தத் தொழிலால் ஏனைய சிறு தொழில் செய்யும் மீனவர்களுடைய தொழிலுக்கு ஆபத்து என்றால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஆயினும் அது போன்ற முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கவில்லை.

அத்தோடு கடலில் எந்தத் தொழில் செய்வதாக இருந்தாலும் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் அனுமதி பெறப்பட வேண்டும். அப்போதுதான் அந்தத் தொழில்களை மேற்கொள்ள முடியும். எனவே கணவாய் பிடியில் ஈடுபடுபவர்களும் இந்த ஆண்டுக்கான அனுமதியைக் கோரி விண்ணப்பித்துள்ளார்கள். ஆனால் அவர்களுக்கான அனுமதி இன்னும் கொடுக்கப்படவில்லை. இவ்வாறு அனுமதி இல்லாமல் தொழில் செய்யப்பட்டால் அதை ஆராய்ந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-21)

# வடக்கு பனை, தென்னைச் சங்கம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு

வடக்கு மாகாணப்பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து கள்ளுக்கான அனுமதிப் பத்திர உற்பத்தி வரியைக் குறைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் மனோகணேசனின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்றது.

வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என்.கணேசன் தலைமையில் சென்ற குழுவினர் ஜனாதிபதியைச் சந்தித்து இந்தக் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் கையளித்தனர்.

இதன்போது, பனை தென்னைவள கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு விரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

கள்ளுக்கான அனுமதிப் பத்திர வரியைக் குறைப்பதற்கு நிதி அமைச்சுடன் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தரப்படும்.வடக்கு மாகாணத்தின் பதநீர் உற்பத்தியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. வரியைக் குறைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி வடமாகாண பனை தென்னைவள கூட்டுறவு அபிவிருத்தி சங்கப் பிரதிநிதிகளிடம் உறுதியளித்தார். (த-17)

**யாழ்.சுண்டுக்குளியில் வீடு விற்பனைக்கு**
யாழ்.சுண்டுக்குளி பாடசாலைக்கு அண்மையில் ஈச்ச மோட்டையில் 1 ½ பரப்புக் காணியுடன் கூடிய வீடுவிற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 614 6434

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு விற்பனை உதவியாளர் தேவை.
குறிப்பு: ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும் (ஆண்கள் மட்டும்)
(68906) (11,17,18,20) 021 492 3724

**வீடு வாடகைக்குத் தேவை**
சிறிய குடும்பம் ஒன்றிற்க்கு நல்லூர், கந்தர்மடம், திருநெல்வேலி, கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 075 521 5478

**வீடு வாடகைக்கு உண்டு**
கந்தர்மடம் மணல்தறைலேன் நல்லூரடியில் புத்தம்புதிய வீடு சகல வசதிகளுடன் வாடகைக்குண்டு. குடும்பத்தினர் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 116 3247

**வாடகைக்கு**
சாவகச்சேரி ஏ-9 வீதி பழைய பொலிஸ் நிலையத்திற்கு அருகில் மூன்று இணைந்த குளியலறை ... உடைய வீடு வாடகைக்கு உண்டு. அரச அரசசார்பற்ற, தனி யார் நிறுவனங்கள், கல்வி நிலையங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 077 738 5999
077 322 3058

**தேவை**
கொழும்பு நகரில் பெயின்ட் வேலைக்கு பொட்டி வேலையில் அனுபவமுள்ளவர்கள். உதவியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 470 7511

**வாடகைக்கு**
யாழ்ப்பாணத்தில் பருத்தித்துறை வீதிக்கு அண்மையாக தனியான அறை. சமையலறை. இணைந்த குளியலறை வசதியுடன் வாடகைக்கு உண்டு. பணிபுரியும் பெண்கள் இருவர் தங்கலாம்.
தொடர்பு: 077 007 8802

**மணமகள்கள் தேவை**
* 83 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 53 ¼ பாவமுடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 7 இல் சூரியனும் செவ்வாயும் 46¾ பாவ முடைய MBBS டாக்டர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 13¾ பாவ முடைய சைவ போசனமான சட்டத்தரணி மணமகனுக்கு பட்டதாரி சைவபோசன மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 30¼ பாவ முடைய MSC இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி ஆசிரியை மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 19 ¼ பாவ முடைய MBBS டாக்டர் மணமகனுக்கு டாக்டர் அல்லது BSC பட்டதாரி மணமகள் தேவை.
* 84 இல் பிறந்த 1இல் செவ்வாய் 73 பாவமுடைய இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர் அல்லது BSC பட்டதாரி மணமகள் தேவை.
தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
பூங்கனிச் சோலையடி, முடமாவடி.
தொ.பே. 077 607 0862
(68898) (13.18.20.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சிப்படுத்தலும் சான்றிதழ் வழங்கலும்

கனடா இராமன் அறக்கட்டளை நிறுவனத்தினால் சாவகச்சேரியில் நடத்தப்பட்ட இலவச தையல் பயிற்சி வகுப்புகளில் பங்குபற்றியோரின் ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தலும் பயிற்சிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மதியம் 2 மணிக்குச் சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெறும்.

தையல்பயிற்சி ஆசிரியை செல்வி கௌந்தினி மகேந்திரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன். வட மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் கலந்துகொண்டு ஆக்கப் பொருள்கள் காட்சிப்படுத்தல் கூடத்தை ஆரம்பித்து வைப்பர். (த-4 - 9)

**கண்ணீர் அஞ்சலி**

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில்
காவலாளியாகக் கடமையாற்றி வந்த
**வேலுப்பிள்ளை அருளானந்தர்** (வட்டு.தென்மேற்கு, வட்டுக்கோட்டை)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(சி/29078) (11,17,18,20) **பணியாளர் நலன்புரிசங்கம், வலி.மேற்கு பிரதேசசபை.**

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

மண்ணில்
24 . 12 . 1953



விண்ணில்
14 . 01 . 2016

**அமரர் ஜோசப் பீற்றர் ஜேசுராஜன்**
(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி)

அகம் விளைந்த அன்பு ஆறாய் பெருக்கெடுக்கும்
அழகுணர்ச்சி ஆடையணி கம்பீரக் காட்சி தரும்
நேர முகாமைத்துவம் நின் கடமைக்குச் சாட்சி சொல்லும்
ஊரவரின் புகழ் மொழியோ ஒற்றுமையின் பலம் கூறும்
எம்மதமும் சம்மதமாய் இணைந்த குணம் இனிமை தரும்
துன்பத்தில் உதவுகின்ற தூயமனம் பண்பு சொல்லும்
விண்ணுலகை அழகாக்க விரைந்தங்கு போன அப்பா
கண்ணீரை எமக்காக்கி காதவழி போனதென்ன?

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி.
(60731)(11,18,20)
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்.

**37 ஆவது பிறந்த தினமும் 9 ஆம் ஆண்டு நினைவு தினமும்**

**நவரட்ணம் மனோராஜ் (ராஜ்)**

தோற்றம்
13.02.1979

மறைவு
05.01.2007



முழு நிலவை விழிகளாய் இறகிரண்டை இமைகளாய்
ஒளி மிகுந்த சூரியன் போல் பகல்நிலவாய் வந்துதித்தீர்
சட்டென்று கோபமும் பட்டென்று பாசமும்
அகிலமும் தலைவணங்கும் அளவில்லாக் கொடையும்
அரண்மனையோ குடிசையோ தாம் இருந்தால் இன்பமே
ஆண்டுகள் போனாலும் தம் நினைவு போதுமே
காலனுக்கும் ஆசையோ உம் உருவைக் காணவே
பூவனத்தில் வசித்த நீர் பூலோகம் பிரிந்ததேன்?
கண் இரண்டும் துடிக்குது உம் உருவைக் காணவே
தேவலோகம் சென்றதால் எம்மை நீர் மறந்தீரோ?
இப்புவிக்கான தம் மரணம் விதியிட்ட விளையாட்டு
பாரிருக்கும் வரையிலும் நாம் இருப்போம் உம் நினைவில்...

38, அம்மன் கோயில் வீதி.
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
குடும்பத்தினர்.

# நீதிமன்ற உத்தரவைப் பூரணப்படுத்தாது கடை திறக்க கோரியவருக்கு எச்சரிக்கை

வவுனியா,பெப்.13

ஏ - 9 வீதியில் 10 வகையான சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிய உணவகத்தை நீதிமன்று மூடியதோடு, குறைபாடுகளைச் சீர்செய்யுமாறு கூறிய போதும், அதன் நடத்துநர் அவற்றை உரியமுறையில் சீர் செய்யாமல் மீளத் திறக்க நீதிமன்றம் சென்றதால் மன்று எச்சரிக்கை செய்ததுடன் வழக்கைக் கால வரையின்றி ஒத்திவைத்தது.

இந்தச் சம்பவம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட கனகராயன்குளம் பிரதேசத்தில் யாழ்–கண்டி வீதியில் அமைந்துள்ள குறித்த உணவகம் புளியங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகரின் எச்சரிக்கையையும் மீறி தொடர்ந்தும் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து சுகாதார வைத்திய அதிகாரி க.செந்தூர் பதிராஜா தலைமையில் மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யா. நக்கீரன் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான சூ.குணசாந்தன் மற்றும் அ.சுரேஸ்குமார் அடங்கிய குழுவினால் திடீர்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, வியாபார உரிமம் இல்லாமல் இயங்கியமை, வண்டு பிடித்த கடலைப் பருப்பு மற்றும் அழுகிய உருளைக் கிழங்கு என்பவற்றை உணவு தயாரிக்கும் நோக்கத்துடன் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, யூரியா பசளை, ஒயில் கான் என்பவற்றை உணவுப் பொருள்களுடன் சேர்த்து ஒரே அறையில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, உணவுப் பொருள்களை மாசடையும் வகையில் வைத்துத் தயாரித்தமை, உபகரணங்கள் மற்றும் பாத்திரங்களைச் சுத்தமாகப் பேணாமை, உணவகச் சுற்றாடலில் நாய்கள், கோழிகள் வைத்திருந்தமை, கழிவு நீரைத் திறந்த வெளியில் விட்டமை, உணவக சுற்றாடலில் கழிவுகள் திரள அனுமதித்தமை, போதியளவு தனிநபர் சுகாதாரம் பேணாதவர்களை வைத்து உணவு தயாரித்தமை, காலாவதித் திகதி கடந்த உணவுப் பொருள்களை விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருந்தமை ஆகிய 10 குறைபாடுகள் குறித்த குழுவினால் அடையாளங்காணப்பட்டன.

இதனால் குறித்த உணவகத்தின் நடத்துநருக்கு எதிராக உரிய ஆதாரங்களுடன் வவுனியா நீதிவான் நீதிமன்றில் புளியங்குளம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த வழக்கை விசாரித்த நீதிமன்று தண்டப் பணமாக 78 ஆயிரம் ரூபா விதித்ததுடன், உடனடியாக உணவகத்தை மூடிப் பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிவுறுத்தலுக்கமைவாகத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு உணவக நடத்துநருக்குக் கட்டளை இட்டதுடன், திருத்த வேலைகள் பற்றிய அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குமாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகரைப் பணித்திருந்தது.

இதன் தொடர்ச்சியாக மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது சம்பந்தப்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகரினால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளில் சில இன்னும் சீர்செய்யப்படவில்லையென மன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இதனால் உணவகத்தை மீளத் திறப்பதற்கு அனுமதி வழங்க மறுத்ததுடன் வழக்கை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்தது நீதிமன்று. (த-4-ஐ-422)

# கைபேசியைத் திருடியவருக்கு ஆறு மாத கடூழியச் சிறை

யாழ்ப்பாணம் பெப்ரவரி 13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக தங்கியிருந்த நோயாளிடம் இருந்து அறுபதாயிரம் ரூபா பெறுமதியுடைய கையடக்க தொலைபேசியை களவாடிய ஒருவருக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார் யாழ்ப்பாண நீதிவான் எஸ்.சதீஸ்கரன்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக தங்கியிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த நோயாளி ஒருவர், மின்னேற்றுவதற்காக அலைபேசியை வைத்து விட்டு குளியலறைக்கு சென்றிருந்த வேளை, அந்த விடுதியில் நின்ற சங்குவேலியைச் சேர்ந்த நபரினால் குறித்த கையடக்க தொலைபேசி களவாடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது. சந்தேகநபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டிருந்தார். வழக்கு விசாரணைக்கு எடுக்கபட்டபோது, சந்தேகநபர் குற்றத்தை ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு நீதிமன்றத்தினால் நேற்று ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை தண்டனை விதிக்கப்பட்டது. (வ-103)

# இளவாலையில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

2 கிலோ 35 கிராம் எடை கொண்ட கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவரை நேற்று கைது செய்துள்ளதாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.மஞ்சுல.டி.சில்வா தெரிவித்தார்.

இளவாலை பனிப்புலம் சந்தியில் வைத்து, குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவர் தெல்லிப்பழை குஞ்சங் கலட்டி பகுதியைச் சேர்ந்தவர் என்றும், தற்போது கொழும்பு கொலன்னாவை பகுதியில் வசித்து வரும் 38 வயதுடைய நபர் என பொறுப்பதிகாரி குறிப்பிட்டார்.

குறித்த சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (வ-4,107)

# அரச அலுவலரான பெண்ணை ஏமாற்றிப் பணம் பறிக்க முயற்சி

## சாதுரியமான செயற்பாட்டால் முறியடிப்பு

சாவகச்சேரி,பெப்.13

அரச பணியாளரை ஏமாற்றி 18 ஆயிரம் ரூபாவைப் பெற முயன்ற மர்ம தொலைபேசி அழைப்பாளர் பெண்ணின் சாதுரியத்தினால் ஏமாற்றமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியில் உள்ள அலுவலகமொன்றுக்கு நேற்று முன்தினம் முற்பகல் 10 மணியளவில் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தப்பட்டது. அழைப்பை ஏற்றுக் கதைத்தபோது அண்மையில் சாவடைந்தவர்களின் மனைவி யாராவது அங்கு கடமையாற்றுகிறாரா என அவர் கேட்டுள்ளார்.

ஆம் எனக் கூறியபோது அவரை அழைக்குமாறு கூறியுள்ளார். குறித்த பெண் என்ன விடயமென வினவியுள்ளார்.

அப்போது தங்களது கணவன் இறந்ததால் தங்களுக்கு அரச பணியாளர்களுக்கான அக்ரஹாரா காப்புறுதியின் மூலம் 3 லட்சத்து 35 ஆயிரத்து 350 ரூபா இழப்பீடு வழங்குவதற்கான ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 11 மணிக்கு முன்னர் 18 ஆயிரம் ரூபாவை அங்குள்ள அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தினால் பகல் 12 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் தங்களது கோவையைச் சமர்ப்பித்து பணத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படுமென மறுமுனையில் பேசியவர் சிங்களத்தில் கூறியுள்ளார்.

ஓரளவு சிங்களம் தெரிந்ததாலும் சில விடயங்கள் புரியாததாலும் அருகில் உள்ள சிங்களம் தெரிந்தவரிடம் தொலைபேசியைக் கொடுத்து கதைக்குமாறு குறித்த பெண் கூறியுள்ளார்.

அந்தப் பெண்ணுக்கு கூறியது போன்று மற்றவருக்கும் கூறிய மர்ம நபர் பணத்துடன் புறப்பட்டுவிட்டாரா எனவும் கேட்டுள்ளார். பின்னர் தொடர்பு கொள்வதாகச் சிங்களத்தில் கூறித் தொடர்பைத் துண்டித்தார்.

குறித்த பெண்ணின் கணவன் மூன்று மாதங்களுக்கு முன்னர் சாவடைந்தபோதிலும் காப்புறுதி தொடர்பாக எந்தவொரு விண்ணப்பமும் செய்யாத நிலையில், தனக்குக் காப்புறுதித் தொகை வழங்க நிறுவனம் முன்வந்ததைக் கருத்தில் கொண்டு குறித்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டபோது குறித்த அக்ரஹாரா காப்புறுதியில் சாவுக்குக் கொடுப்பனவு வழங்கப்படுவதில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

மர்ம நபரின் அழைப்பை ஏற்று 18 ஆயிரம் ரூபா செலுத்தியிருந்தால் ஏமாந்திருக்கலாமென குறித்த பெண் தெரிவித்தார். (த-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# விவசாய உற்பத்திகளுக்கு இனிக் கழிவு கிடையாது

## சந்தை வியாபாரிகளுக்கு கரவெட்டி பிரதேச சபை கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம் பெப் 13

விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைகளில் உற்பத்தியாளர் மொத்தமாக விற்பனை செய்கின்றபோது கழிவுகள் கழிக்கப்படமாட்டாது எனக் கரவெட்டி பிரதேசசபை அறிவித்திருக்கிறது. அதனை மீறி யாராவது கழிவுகள் அறவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதன் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தமது பிரதேச சபை தீவிரமாகக் கண்காணிக்கும் என்று கரவெட்டி பிரதேச சபை அறிவித்துள்ளது.

சாதாரண விவசாயிகள் பாதிக்கப்பவதையும் அவர்களின் உழைப்பை வியாபாரிகள் சுரண்டிச் செல்வதையும் தவிர்க்கும் முகமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் மாவட்ட விவசாய கூட்டத்தில் குறித்த விடயம் பிரஸ் தாபிக்கப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கரவெட்டி பிரதேச செயலர்ஸ்சிவசிறிதெரிவித்துள்ளார் இது தொடர்பில் தெரிய வருவதாவது:-

சந்தைகளில் விவசாய உற்பத்திப்பொருள்களான மரக்கறிகள் உற்பத்தியாளரால்மொத்தமாக விற்பனை செய்கின்ற போது 10 வீத கழிவு அறவிடப்பட்டு 90 வீதத்துக்குரிய பணமே உற்பத்தியாளரான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதனால் விவ சாயிகள் மோசமாக பாதிக்கப் பட்டு வந்தனர். வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான சந்தைகளில் விவசாயி பாதிக்கப்பட விற்பனையாளர் அதிகளவான லாபத்தைப் பெறும் செயற்பாடுகள் தொடந்து வந்தன. தாங்கள் கொண்டு செல்லும் பொருள்களுக்குக் கழிவாக 10 வீதம் கழிக்கப்படுவதாகவும் வரியாக ஆறு வீதம் அறவிடப்பட்டு வரும் நிலை நீடித்து வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன்தம்புள்ளபோன்றவெளியிடங்களில் இருந்து வரும் மரக்கறிகளுக்கு இத்தகைய கழிவுகள் கழிக்கப்படுவதில்லை. உள்ளூர் விவசாயிகளே இதனால் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்ற னர்.

இது தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட விவசாய கூட்டத்திலும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டது. வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்துச் சந்தைகளிலும் இதே நிலை நீடிப்பதாக விவசாயிகளால் குற்றம் சாட்டப்பட்டது. இந்த நிலையில் விவசாய உற்பத்திப் பொருள்கள் உற்பத்தியாளரால்




மொத்தமாக விற்பனை செய்யப்படுகின்றபோது கழிவுகள் கழிக்கப்படமாட்டாது என நேற்று முன்தினம் முதல் நெல்லியடிப் பொதுச்சந்தையில் அறிவிப்புப்பலகைஒன்று நடப்பட்டிருக்கின்றது.

இந்த அறிவித்தல் கரவெட்டி பிரதேச சபை செயலாளர் திருமதி எஸ்.ஜெகநாதனின் ஒப்பத்துடன் சந்தையில் போடப்பட்டிருக்கிறது.

இந்த அறிவித்தலை மீறுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இந்த அறிவித்தலின் நடைமுறை தொடர்பில் பிரதேச சபை தீவிரமாகக் கண்காணிக்கும் எனவும் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விவசாய அமைப்புகளின் தலைவர்கள் சிலரை தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த அறிவித்தல் நேற்று முன்தினம் அறிவிப்புப் பலகையில் போடப்பட்ட தாகவும், நேற்றைய தினமும் அது தொடர்பில் ஆராய பிரதேச செயலர் மற்றும் அதிகாரிகள் சந்தைக்குவந்து பார் வை யிட்டுச் சென்றதாகவும்அவர்கள்தெரிவித்த னர். (த-109)

# திருத்தலங்களுக்கு இடையிலான பாத யாத்திரை மீள ஆரம்பம்

## முதலில் நல்லூரிலிருந்து கேதீஸ்வரத்துக்கு

சாவகச்சேரி பெப் 13

கடந்த 40 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த திருத்தலங்களுக்கு இடையிலான பாத யாத்திரையை மீண்டும் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி சிவராத்திரியையொட்டி நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்தது மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கான பாத யாத்திரை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பூநகரி வேரவில் வெள்ளிப்பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் இந்துமாமன்றத்தின் செயலாளர் சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு இறைவன் கருணை தான் தேவை.வேறு எவ்வழிகளிலும் மீள முடியாத நிலையை எல்லோராலும் உணர முடிகிறது.எனவே நல்லூர் கந்தசுவாமி கோவிலிலிருந்து பாடல் பெற்ற தலமான திருக்கேதீச்சரம் பாத யாத்திரை மேற்கொண்டு திருவருள் பெற்று இலங்கையில் சாந்தி சமாதானம் நிலைக்கவும் மக்கள் அனைவரும் காமம், குரோதம், லோபம், மோகம், மத மாச்சரியம் என்னும் ஐம் பெரும் பேய்களிலிருந்து விடு பட சரியான பாதை இதுவே யாகும். இதனைக் கருத்திற் கொண்ட பூநகரி வேரவில் வெள்ளிப் பள்ளத்து வீரகத்திப் பிள்ளையார் இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் இந்தப் பாத யாத்திரை இடம்பெறவுள்ளது.

முதற்கட்டமாக எதிர்வரும் சிவராத்திரியை முன்னிட்டு நல்லூரிலிருந்து திருக்கேதீச்சரம் வரையிலான தலங்களுக்கிடையிலான பாத யாத்திரை எதிர் வரும் மார்ச் இரண்டாம் திகதி நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஆரம்பித்து சிவராத்திரி தினமான மார்ச் ஏழாந் திகதி திருக் கேதீச்சரத்தை சென்றடைவதென நல்லூர் 63 நாயன்மார் மடத் தில் இடம் பெற்ற ஆலோசனைக் கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் இரண்டாம் திகதி கதிர்காமம் பாத யாத்திரைக் குழுத் தலைவர் வேல்சாமி ஐயா தலைமையில் நல்லூரிலிருந்து ஆரம்பித்து நாவற்குழி- கேரதீவு-பூநகரி-நாலாம் கட்டை- செம்பன்குன்று- பல்ல வராயன் கட்டு-முழங்காவில்-வெள்ளாங்குளம்- கட்டாடிவயல் பள்ள மடு- பாப்பாமோட்டை ஊடாக திருக்கேதீச்சரத்தை அடைவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாத யாத்திரையில் கலந்து கொள்ளவுள்ள அடி யார்கள் காலை 8.00 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி திருத்தலத்திற்கு வருகைதருமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-4-9)

# சங்கங்களின் வளர்ச்சிக்காக பொருள் கொள்வனவு செய்க

## உதவி ஆணையாளர் கோரிக்கை

குருநகர்,பெப்.13

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் வியாபாரம் வளர்ச்சியடைவதற்கு அங்கு சேவைபுரியும் பணியாளர்களும் கிளைக் குழு உறுப்பினர்களும் அந்தச் சங்கங்களில் உள்ள பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும் என்று யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன் தெரிவித்தார்.

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் இந்த வருடத்துக்கான பாதீட்டை அங்கீகரிப்பதற்கான பொதுச் சபைக் கூட்டம் யாழ்.காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச் சபைப் பிரதிநிதிகள், இயக்குநர் சபை உறுப்பினர்கள், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கணக்காளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்புரையாற்றிய யாழ். கூட்டுறவுஅபிவிருத்திஉதவிஆணையாளர் பொ.மோகன் மேலும் தெரிவித் ததாவது, வெளிப்படையாகத் தமது கருத்தைத் தெரிவிக்கும் சுதந்திரம் சமகாலத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட் டத்தில்ஒருகூட்டுறவுநிறுவனம் வளர்ச்சியடைய வேண்டுமாயின் கூட்டுறவாளர்களை இணைத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சங்கங்களில் இளையோர் பெருமளவில் அங்கத்தவர்களாக இணைய வேண்டும். இளைய வர்க்கம் வரும்போது சில அடிப்படைக்குணாதிசயங்கள் இருக்கும்.நேர்மை, ஆற்றலுள்ள சிந்தனை இருக்கும். எதிர்காலம் அவர்களால் நிரப்பப்பட வேண்டும். நாங்கள் எதிர்காலத்தில் செயற்பட கூட்டுறவு விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். பணியாளர்களுக்கு சம்பளத்தை முழுமையாக வழங்க வேண்டும். சங்கத்தின் செயற்பாட்டை கூட்டுறவுச் சங்கச் சட்டத்திற்கேற்ப நடத்த வேண்டும். சங்கங்களில்காசுக்கொள்வனவுசெய்யவேண்டும். பணியாளர்களை ஊக்குவிப்பதுடன் நம்பிக்கைக்குரியவர்களுக்குக் கடனுக்குப் பொருள்களை வழங்கி உரிய திகதியில் அந்தக் கடன்காசைப் பெற்றுக் கொள்ள சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கௌரவமானவர்களை வியா பாரத்தில் இணைக்க வேண்டும். நாம் விற்பனை செய்யும் பொருள்கள் தரமானதாக இருக்க வேண்டும். தரமான பொருள்களை பொதியிட்டு விற்பனை செய்ய நட வடிக்கை எடுக்க வேண்டும். சங்கங்களில் வியா பாரம் அதிகரித்தால் எல்லாப்பிரச்சினையும் தீரும். இளம் வர்க்கத்தை சங்கங்களில்இணைப்பதுடன் இளம் வர்க்கத்தினரை ஊக்குவிக்கவும், கௌரவிக்க வேண்டும். இலவசநிவாரணங்களைவழங்கு வதுடன் நில்லாமல் தமக்கான உற்பத்திகளை சேக ரித்து வியா பாரத்தையும் [illegible]
[illegible]
பின்பற்ற வேண்டும்-என்றார். (த-4-51)

# சுற்றுலா வழிகாட்டி பயிற்சிக்கான விண்ணப்பம் கோரல்

## முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கும் (UNDP) வடமாகாண சபைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஆவண நிபந்தனைகளின் அடிப்படையிலும் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட கொடை நிதியிலிருந்தும், வட மாகாண சுற்றுலாத்துறையினை ஊக்குவிப்பிற்கென சுற்றுலா வழிகாட்டிகளை (Tour Guides) பயிற்றுவிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இப்பயிற்சியில் இணையவுள்ள தனிநபர்கள் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

* இப்பயிற்சியினைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்கும் நபர் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன் இலங்கையின் வட மாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்டு குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது வட மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரி 31.01.2016 அன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
* க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் ஆங்கில பாடத்தில் திறமைச்சித்தி (C) பெற்றிருத்தல் வேண்டும்.
* மேற்குறிப்பிட்டவற்றுடன் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் அங்கத்தவர்கள் அல்லது தமிழ், ஆங்கிலம் தவிர்ந்த பிறிதொரு மொழியில் சரளமாக உரையாடும் திறன் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (இவற்றினை உறுதிப்படுத்தும் கடிதங்கள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்)

**சேவை நிபந்தனைகள்**

* பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு 04 மாதங்களுக்கு முழுநேர பயிற்சி, இலவசமாக, கொழும்பில் அமைந்துள்ள அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வழங்கப்படும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் அங்கீகாரம் பெற்ற சுற்றுலா வழிகாட்டியாகப் பதிவு செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
* இப்பயிற்சியினை நிறைவு செய்தவர்கள் தொடர்ந்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு வட மாகாணத்தில் சுற்றுலா வழிகாட்டியாகப் பணியாற்ற வேண்டியது கட்டாயமாகும். பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டவுடன் தனிநபர் பிணை ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது அவசியமாகும். மேலும் பயிற்சியின் போதோ அல்லது கட்டாயக் கடமைக் காலத்தின் போதோ இடைவிலகும் பட்சத்தில் பயிற்சிக்கான மொத்தச் செலவினையும் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
* பயிற்சி நிறைவில் வடமாகாணத்தில் காணப்படும் சுற்றுலா பிரதேசங்களுக்கு அல்லது சுற்றுலா தலங்களுக்கு வழிகாட்டிகளாக நியமிக்கப்படுவர்.
* இப் பயிற்சியினை பூர்த்தி செய்தவர்களின் தொடர்பு இலக்கங்கள் மாகாண சபையின் இணையத்தளத்திலும் மற்றும் சுற்றுலா தகவல் திரட்டுக்களிலும் வெளியிடப்படும். அதன் மூலம் பயண செயற்பாட்டாளர்கள் (tour operators) நேரடியான தொடர்புகளை சுற்றுலா வழிகாட்டிகளுடன் பேணுவதன் மூலம் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

**செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை, இல.26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'சுற்றுலா வழிகாட்டி பயிற்சிக்கான விண்ணப்பம்' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு எதிர்வரும் **29.02.2016** ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். மேலதிக தகவல்களுக்கு **021 205 7114** என்னும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**இ.வரதீஸ்வரன்**
**செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு,**
**வடமாகாண சபை.**

(சி/29091)(11.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுக் கலாசார விழா செவ்வாய் இடம்பெறும்

யாழ்ப்பாணம், பெப்.13
மடு பிரதேச கலாசார விழாவும், 'மடுக்கீற்று' மலர் வெளியீட்டு நிகழ்வும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மன்னார் தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

மடு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக மன்னார் அரச அதிபர் எம்.வை. எஸ். தேசப்பிரிய கலந்து கொள்வார். வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் மடு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது,

இந்த நிகழ்வில் மடு பிரதேசத்தின் வரலாறு, பண்பாட்டு அம்சங்களை ஆவணப்படுத்தும் முகமாக வெளியிடப்படுகின்ற மடுக்கீற்று 2015 இதழ் வெளியீடும், பிரதேச கலை, இலக்கிய வளர்ச்சிக்காகப் பாடுபட்ட கலைஞர்கள், எழுத்தாளர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளன.

விசேட கலை நிகழ்வுகளாக ஆண்டான்குளம் றோ.க.த.க பாடசாலை மாணவர்களின் இன்னிய ஆற்றுகையும், தட்சணாமருத மடுஅ.த.க. பாடசாலை மாணவர்களின் வரவேற்பு நடனமும், கிராமிய நடன மும், பெரியபண்டிவிரிச்சான் மகாவித்தியாலய மாணவர்களின் நடனமும், தம்பனைக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கலா மன்றத்தினரின் வேப்பிலை நடனம், கரகாட்டம் ஆகியனவும், செம்முகம் கலைக் குழுவினரின் வேடமுக ஆட்டமும், காக்கையன்குளம் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவர்களின் இஸ்லாமிய கீதமும், நாடகம் ஆகியனவும் நடைபெறவுள்ளன. (த-ஐ-ரி)

## புளொட்டின் காரியாலயம் திறப்பு விழா

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) வவுனியா மாவட்டத் தலைமைக் காரியாலயம் திறப்பு விழா நாளை காலை வவுனியா கோவில் குளம் பகுதியில் திறந்து வைக்கப்பட உள்ளது.

கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தனால் நாளை மு.ப. 10 மணிக்கு வவுனியா கோவில்குளத்தில் உள்ள தோழர் உமா மகேஸ்வரன் இல்லத்தில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. (த-21)

# முள்ளிவாய்க்காலுக்குள் ஊடுருவி தடயங்களை அழித்தனர் சீனர்கள்

## விசாரிக்கக் கோருகின்றார் சிவமோகன் எம்.பி.



முல்லைத்தீவு. பெப். 13
போர் முடிவடைந்த பின்னர் முல்லைத்தீவு நந்திக்கடலில் மீன்கள் விடுவதற்கு வருவதாகக் கூறி வந்த சீனர்கள் முள்ளிவாய்க்காலைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து தடயங்களை அழித்துள்ளனர். எனவே, ஐ.நா. விசாரணைக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஊடுருவிய சீனர்களும் அடையாளம் காணப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு உடையார்கட்டு தமிழ் மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டியில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக முன்னாள் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டதே இந்த மக்ஸ்வெல் பரணகமவின் தலைமையிலான ஆணைக்குழு. இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை உண்மைகளை மூடி மறைக்கும்-நீதியை மறுக்கும்-பக்கச் சார்பான ஒரு ஆணைக்குழு என்பது அவர்களின் பல நடவடிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 2013 ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படவேண்டிய மேற்படி ஆணைக்குழுவின் செயற்பாடு தற்போதைய அரசிலும் காலநீடிப்பு செய்யப்பட்டு வருகிறது. இவர்களது இழுத்தடிப்புகள் எமது தமிழ் மக்களின் நீதியைத் தரப்போவதில்லை என்பது திண்ணமாகிறது.

> ஐ.நா. சபையின் மனித உரிமை சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த ஆணைக்குழுவைக் கலைத்து சர்வதேச–உள்ளக நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றத்தை நியமித்து செயற்பட முன் வரவேண்டும்.

தீர்மானத்தின் படி கலப்பு நீதிமன்றம் மூலம் எமக்கான நீதியை உடன் நிலை நாட்ட நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஐ.நா. சபையின் மனித உரிமை சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய இந்த ஆணைக் குழுவைக் கலைத்து சர்வதேச-உள்ளக நீதிபதிகளைக் கொண்ட கலப்பு நீதிமன்றத்தை நியமித்து செயற்பட முன் வர வேண்டும்.

2009 இல் போர் முடிவடைந்த பின்னர் பெருந்தொகையான சீனர்கள் நந்திக்கடலில் மீன்கள் விட வருவதாகக் கூறித் தங்களது கட்டுப்பாட்டில் அந்தப் பிரதேசத்தை வைத்துக் கொண்டு, தடயங்களை அழிக்க முற்பட்டிருக்கின்றார்கள். எனவே, ஐ.நா. விசாரணைக்கு முன் முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் ஊடுருவிய சீனர்களும் அடையாளம் காணப்பட்டு விசாரிக்கப்படவேண்டும். அவர்களை அடையாளம் காண்பதற்கு உரிய சர்வதேச தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படவேண்டும். சீனர்களின் போருக்கு பின்னரான ஊடுருவல் எமது மக்களுக்குத் தெரிந்த விடயம்–என்றார். (த-21)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில்
24 . 08 . 1928



இறைவன் அடியில்
14 . 01 . 2016

அமரர் தெய்வானை வேலுப்பிள்ளை

கடந்த 14.01.2016 வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி தெய்வானை வேலுப்பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், இன்று (13.02.2016) சனிக்கிழமை நடைபெற்று, தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச் செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் மூலம் தொடர்பு கொண்டு துக்கம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் நேரடியாக வந்து சரீர உதவிகள் புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மரணச் செய்தி கேட்டு எம்மோடு கலந்துகொண்ட அந்தியேட்டிக் கிரியைக்குச் சொல்லத் தவறவிட்டவர்கள் மன்னித்து இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முல்லையடி, பளை. (6883)(11,17,18,20) குடும்பத்தினர்.


# உடற்கல்வி ஆசிரியரின் இடமாற்றத்தை நிறுத்துக

## வவுனியா தமிழ் மத்திய ம.வி மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



வவுனியா. பெப். 13
வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய உடற்கல்வி ஆசிரியரின் இடமாற்றத்தை நிறுத்துமாறு கோரி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் நேற்றுக் காலை வவுனியா தெற்கு கல்வி வலயத்தை முற்றுகையிட்டும் பாடசாலை முன்பாகவும் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் கடந்த மாதம் மாணவர் சிலர் கலாசாரத்துக்கு முரணாக காற்சட்டை அணிந்து பாடசாலைக்கு சமுகமளித்திருந்தனர். இதனை அவதானித்த உடற்கல்வி ஆசிரியர் குறித்த மாணவர்களை அழைத்து, ஏற்கனவே பாடசாலையில் அறிவித்தபடி உரிய அளவுப்பிரமாணத்தில் காற்சட்டையை தைத்து அணிந்து வரவேண்டும் எனக்கூறியதுடன், குறித்த மாணவர்களின் காற்சட்டையைக் கத்தரிக்கோலால் வெட்டியுள்ளார்.

இவ்விடயம் வடமாகாணகல்வியமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரனின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதையடுத்து அவரால் குறித்த ஆசிரியருக்கு மறுநாள் இடமாற்றக் கடிதம் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதனால் குறித்த உடற்கல்வி ஆசிரியர் மற்றும் சக ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்தனர்.

இதனையடுத்து ஆசிரியரின் இடமாற்றத்தை நிறுத்தவேண்டும் என்று கூறியே மாணவர்களால் நேற்றுக் குறித்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

நேற்று காலை 8 மணியளவில் வவுனியா தெற்கு வலயக்கல்வி வலயத்தின் முன்னும் தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னும் பதாகைகளை தாங்கி கோஷங்களை எழுப்பி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இதனால் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் உத்தியோகத்தர்கள் தமது வாகனங்களை உள்ளே கொண்டு செல்ல முடியாமல் வெளியே நின்றிருந்தனர். பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடும் பாதிப்படைந்திருந்தது. சுமார் இரண்டு மணித்தியாலங்களாக வீதியில் சனநெரிசல் ஏற்பட்டது. இதனால் பொலிஸார் அங்கு வந்தனர். பொலிஸாரின் வருகையை அடுத்து ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது. (த-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி அறுத்த சிறார்களை மன்னித்து விடுவித்த பெண்

## சாவகச்சேரி நீதிமன்றில் வழக்கு விசாரணையின்போது

யாழ்ப்பாணம். பெப். 13
வீதியால் சென்ற பெண்ணின் நகைகள், பணம் உள்ளிட்ட கைப்பையை பறித்துச் சென்றவர்களின் மோட்டார் சைக்கிள் இலக்கத்தை ஞாபகத்தில் வைத்திருந்தால் அவர்கள் மாட்டிக் கொண்டனர். பறிக்கப்பட்ட அனைத்தும் அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன. ஆனால் அதனைப் பறிகொடுத்த பெண் அவர்களை மன்னிக்குமாறு கோரியதனால் அபராதத்துடன் அவர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.
சாவகச்சேரி நீதிமன்றப் பதில் நீதிவான் எம்எச்.எம்.ஹம்சா முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டது.
கச்சாய் அம்மன் கோவில் வீதியில் கடந்த மாதம் 20 ஆம் திகதி சைக்கிளில் சென்ற பெண்ணை மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்த 18 வயதுக்குட்பட்ட 2 சிறுவர்கள் சைக்கிள் கூடைக்குள் வைக்கப்பட்டிருந்த கைப்பையை அபகரித்துச் சென்றுள்ளனர். கைப்பைக்குள் தங்க மோதிரம், தோடு, பணம் 3 ஆயிரத்து 200 ரூபா, கையடக்க அலைபேசி, வங்கி தன்னியக்கப் பணப் பரிமாற்ற அட்டை ஆகியவை இருந்துள்ளன.
கைப்பையைப் பறிகொடுத்த பெண் மோட்டார் சைக்கிள் இலக்கத்தைக் குறித்துக் கொண்டு சென்று கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியிருந்தார்.
இதனையடுத்து கொடிகாமம் பொலிஸார் மறுநாள் மந்துவில் மற்றும் மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு சிறுவர்களைக் கைது செய்து அவர்களிடமிருந்து தங்க மோதிரம், தோடு மற்றும் கையடக்க அலைபேசி, வங்கி தன்னியக்கப் பணப் பரிமாற்றஅட்டைஆகியவற்றையும் மீட்டதுடன் இருவரையும் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.
வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன்அன்றைய தினம் அடையாள அணி வகுப்பை நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

> வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் அன்றைய தினம் அடையாள அணி வகுப்பை நடத்த ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பெப்ரவரி முதலாம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கமுன்னர் மூடிய அறையில் அடையாள அணிவகுப்புநடத்தப்பட்டது. கைப்பையை பறிகொடுத்தபெண் இருவரையும் அடை யாளம் காட்டியதையடுத்து நேற்று வரை தொடர்ந்து விளக் கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிறுவர்கள் இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். இதனால் இரு வரையும் மன்னிக்குமாறு கைப் பையைப் பறிகொடுத்த பெண் கேட்டுக் கொண்டதையடுத்து இருவரையும் எச்சரிக்கை செய்த பதில் நீதிவான், இருவருக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்து பெண்ணின் கைப்பைக்குள்ளிருந்து எடுக்கப்பட்ட தங்க நகைகள், அலைபேசி, பணப் பரிமாற்ற அட்டை மற்றும் 3ஆயிரத்து 200 ரூபா ஆகியவற்றை பெண்ணிடம் ஒப்படைக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார்.
இவர்களிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிளையும் குறித்த சிறுவர்களிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (த-4 - 9)

# டாப்புக்கள் மீள்திருத்தம்

வரணி,பெப்.13
வடக்கு கிழக்கு மாகாணத்தில் நெற்காணிகள் இடாப்பு மீள்திருத்தம் தொடர்பில் கமநல சேவைகள் அபிவிருத்தி ஆணையாளர் எம்.ஏ .எஸ். வீரசிங்கவால் அவை தொடர் பான தகவல்கள் பொது மக் களுக்கு அறிவிக்கப்பட்டுள் ளது.
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்தில் அடை யாளம் காணப்பட்ட 17 கமநலசேவை நிலையங்களிலும் இவை நடைமுறைப் படுத்தப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நெற்காணி ஒன்றின் உரிமையாளர் அல்லது வாரப்பயிர்ச் செய்கை உரிமையாளர்கள் அவை தொடர்பான தரவுகளை பதிவுக்கு உட்படுத்தல் வேண்டும்.
பதிவு தொடர்பான விண்ணப்ப் படிவங்களைதங்கள் நெற்காணி அமைந்துள்ள அதிகாரப்பிரிவின் கமலநல அபிவிருத்தித் திணைக்களத்தின், விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியா ளர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
வயல் காணி ஒன்றைப் பதிவுக்குட்படுத்துவது, தமது உரிமையை உறுதிப்படுத்தும் சான்றாகவும் அரச அனுசரணைகள் வழங்கப்படும் போது முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-ஜ-122)

# வடக்கு பேரவைச் செயலகத்தின் செயலாளராகத் தெய்வேந்திரன்

## மரியதாசன் ஜெகூ இடமாற்றம்

யாழ்ப்பாணம், பெப்.13
வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தின் செயலாளராகக் கடமையாற்றிய மரியதாசன் ஜெகூ, வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். புதிய பேரவைச் செயலாளராக தெய்வேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.
பேரவைச் செயலகத்தின் செயலாளராகக் கடமையாற்றிய ஜெகூ, தனக்கு இடமாற்றம் வழங்குமாறு கோரி வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் விண்ணப்பித்திருந்தார். பேரவைச் செயலகத்தில் காணப்படும் நிர்வாக சிக்கல்களினால் தன்னால் தொடர்ந்து அங்கு பணியாற்ற முடியாது என்று பிரதம செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.
இந்த நிலையில் கடந்த 10ஆம் திகதி காலை வடக்கு மாகாண பிரதம செயலாளரினால், ஜெகூவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தில் அவர் நேற்று மாலையே கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
(த-5-101)

# விதி மீறிய 13 சாரதிகளுக்கு 73 ஆயிரம் ரூபா அபராதம்

சாவகச்சேரி. பெப். 13
போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனங்களைச் செலுத்திய 13 சாரதிகளுக்கு 73 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தது சாவகச்சேரி நீதிமன்று, சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவர்களுக்கு இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது,
ஆவணங்கள் எதுவுமின்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு 20 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நிலையில் சென்ற வாகனத்தைப் போக்கு வரத்துப் பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை காட்டியபோது நிறுத்தாமல் சென்றதால் துரத்திப் பிடித்துச் சோதனையிட்டபோது சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத சாரதிக்கு 9 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவருக்கு 6 ஆயிரம் ரூபாவும். வாகன வரிப்பத்திரமின்றி வாக னம் செலுத்திய இருவருக்கு தலா ஆயிரத்து 500 ரூபா வீதமும், ஒருவருக்கு ஆயிரம் ரூபாவும் இரு வாகனங்களில் கால்நடைகளைச் சித்திரவதைப்படுத்தும் வகையில் ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கு 5 ஆயிரம் ரூபாவும், மற்ற வாகனத்தில் கால்நடைகளுடன் பயணித்த இருவருக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதமும், அனு மதிப்பத்திர மின்றி விறகு ஏற்றிச்சென்ற வாகனச் சாரதிக்கு 4 ஆயிரம் ரூபாவும் நீதிமன்று அபராதம் விதித்தது. அத்துடன் அனுமதிப் பத்திரமின்றிஅரச சாராயம் வைத்திருந்த நபருக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. (த-4-9)

# பனை வளர்ப்போம் சங்கம் விரைவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.13
பனை அபிவிருத்திச் சபை பனை வளர்ப்போம் சங்கம் என்னும் அமைப்பை அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளது.
பனை வளத்தை ஊக்குவிக்கவும், அதனைப் பாதுகாக்கவும் மற்றும் அதனை மேம்படுத்தும் நோக்குடனும் இந்த பனை வளர்ப்போர் சங்கம் என்னும் அமைப்பு உருவாக்கப்படவுள்ளதாக சபையின் தலைவர் மா. கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.
குறிப்பாக நான்கு பரப்புக்கு மேல், அதில் பத்துப்பனை மரங்களை வைத்திருப்போரும் மற்றும் பனைச் செய்கையில் ஈடுபடுவோரும் இந்தப் பனை வளர்ப்போர் சங்கத்தில் இணைந்து கொள்ள முடியும்.
இந்த அமைப்பில் இணைவதன் மூலம் பயனாளிகள் பனை வளத்தில் இருந்து அதிக பயனைப் பெற முடியும்.
குறிப்பாக உற்பத்திக்கான சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படும். பனந்தோட்ட உரிமையாளர்களுடன் பனை அபிவிருத்திச் சபை கலந்துரையாடி அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும்.
அதனை விட பனை வளத்தை உற்பத்தித் திறனுடையதாக மாற்றுவதுடன் மக்களுக்குத் தொழில்வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்கப்படும். இந்தப் பனைவளர்ப்போர் சங்கத்தை விரைவாக ஆரம்பித்து வைப்பதற்கு துரித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அமைப்பில் [illegible] போர், பனை [illegible] வலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது. (த-ஜ-17)

25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
21 ☆ 11 ☆ 1933



மறைவு
20 ☆ 02 ☆ 1991

அமரர் தம்பிப்பிள்ளை இராசலிங்கம்
((முன்னாள் உடுப்பிட்டித்தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்
B.A (Econ), Dip. in Ed, M.A, SLEAS, Follow Ship in Educational Planning and Administration (A.I.E.P.A) New Delhi (unesco Sponsored))

எடுப்பான அழகும், மிடுக்கான ஆளுமையும்
இயல்பாகக் கொண்ட எங்கள் பேரொளியே!
தெள்ளு தமிழ் பேச்சாலே, சீர்மிகு சேவையாலே,
சமூகசிந்தனை மாற்றம் சிறப்பாகச் செய்தீரே!
மாண்பு சேர் ஆசானாய், கல்வி அதிகாரியாய்
நாடாளுமன்ற உறுப்பினராய், நாநிலம் போற்ற வாழ்ந்தீரே!!
ஆண்டுகள் எத்தனை சென்றாலும் உங்கள் நாமம்
அவனி தன்னில் வரலாறாய் ஒலித்திடுமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இராஜ் மஹால்,
அல்வாய்.

(65922) (13,18,20)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# இந்தியாவுடன் செய்யவுள்ள உடன்படிக்கை தயாரில்லை


## வருட இறுதிக்குள் அது கைச்சாத்திடப்படும்

கொழும்பு, பெப். 13
இந்தியாவுடன் கைச் சாத்திடப்படவுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்து ழைப்பு உடன்படிக்கை இன்னமும் இறுதிப்படுத்தப்படவில்லை என்றும், அது எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், தொழில்வாண்மையாளர்கள் ஆகியோரிடம் கலந்துரையாடப்பட்டு வருகின்றது என்றும் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

மேற்படி உடன்படிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், இவ்வருடத்துக்குள் கைச்சாத்திடுவதற்கு எதிர் பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல் ஆகியவை முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது.

இதன்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் கைச்சாத்திடப்படவுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் தொடர்பில் கேள்விகளை எழுப்பியிருந்தார். இவற்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மலிக் சமரநாயக்க மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.



உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. குறித்த உடன்படிக்கையை இந்த ஆண்டுக்குள் கைச் சாத்திடுவதற்கு எதிர்பார்க்கின்றோம்.

உடன்படிக்கை இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்பதால் சீபா ஒப்பந்தத்திலிருந்து எவ்வாறு அது வேறுபடுகின்றது என்பது குறித்துக் கூறமுடியாது. இலங்கைக்கு நன்மை பயக்கும் வகை யிலேயே உடன்படிக்கை கைச் சாத்திடப்படும். சகல தரப்பினருடனும் கலந்துரையாடப்படும். பொருட்கள் மற்றும் சேவைகளை மையப்படுத்தியே உடன்படிக்கை அமையும்-என்றார். (த-சி)

# சம்பளச் சபைகள் சட்ட விவாதத்தில் மனோ, திகா, ராதா பங்கேற்கவில்லை

கொழும்பு, பெப். 13
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி மீதான விவாதத்தில் மலையகத்தின் முக்கிய தலைவர்களும், அரசில் முக்கியபதவிகளைவகிப்பவர்களும், அமைச்சர்களுமான மனோ கணேசன், பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்கவில்லை.

அத்துடன், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்துசிவலிங்கம், செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் ஆகிய முக்கிய தலைவர்களும் இந்த விவாதத்தில் பங்கேற்கவில்லை.

இதேவேளை - பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. மற்றும் மகிந்த ஆதரவு தரப்பினர் ஆகியோர் மலையக மக்களுக்கு உரியசம்பளம்பெற்றுக்கொடுக்க வேண்டும் என அரசை வலியுறுத்தினர்.

தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் ஜோன் செனவிரட்னவால் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதி சட்டத்திருத்தம் மீதான விவாதம் இடம்பெற்றது.


இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய பிரதான எதிர்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் , சார்ள்ஸ் நிர்மலநாதன், ஜே.வி.பியின் விஜித ஹேரத் , ஐ.ம.சு.முன்னணியின் மகிந்த ஆதரவு தரப்பின் மகிந்தானந்த அளுத்கமகே , காமினி லொக்குகே ஆகியோர் மலையக மக்களின் சம்பளஉயர்வுகுறித்துகுரல்எழுப்பினர்.

இதையடுத்து ஆளுந்தரப்பில் அங்கம் வகிக்கும் மலையக நாடாளுமன்ற உறுப்பினர்களான அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ், திலகராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

மலையக மக்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும், இதற்காக காலாவதியாகியுள்ள கூட்டு ஒப்பந்தம் மீண்டும் கைச்சாத்திடப்படவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இருப்பினும், மலையகத்தின் முக்கியதலைவர்களான அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் விவாதத்தில் பங்கேற்கவில்லை. மேலும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பிலும் எவரும் விவாதத்தில் பங்கேற்கவில்லை.
(த-சி)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வித்தியாலயத்தின் மைதானத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது. வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி மேரி.றோசாநந்தினியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். இதில் இடம்பெற்ற சில காட்சிகளின் பதிவுகள் இவை. (ம-20)

# காணாமற்போனோர் குறித்து மீண்டும் யாழில் விசாரணை

## அடுத்த மாதம் நடத்த ஆணைக்குழு திட்டம்

கொழும்பு, பெப்.13
காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடு களை விசாரணை செய் யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் அடுத்தகட்ட அமர்வை யாழ்.குடாநாட்டில் முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதற்கமைய, எதிர்வரும் 27, 28, 29ஆம் திகதிகளிலும், மார்ச் முதலாம் திகதியும் சாட்சி விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றுஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குண தாச தெரிவித்துள்ளார்.
கோப்பாய், வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, சாவகச்சேரி, காரைநகர் மற்றும் நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் நடைபெறவுள்ளன.
மேலும், யாழ்.குடாநாட்டில் கடந்த அமர்வில் கலந்துகொள்ளாத

> ஆணைக் குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், 15ஆம் திகதிக்குள் ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ் வெல் பரணகம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்குக் கோப்பாய் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ள அமர்வில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் ஆணைக்குழுவின் செயலாளர் கூறியுள்ளார்.
யாழ். குடாநாட்டிலிருந்து கிடைத்துள்ள 12 ஆயிரம் முறைப் பாடுகள் தொடர்பில் விசார ணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எனினும், காணாமற்போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் ஆயுள் காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.
இந்த நிலையில், ஆணைக் குழுவின் ஆயுட்காலத்தை நீடிக்குமாறு ஜனாதிபதிக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும், 15ஆம் திகதிக்குள் ஜனாதிபதியிடமிருந்து சாதக மான பதில் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் ஆணைக் குழுவின்தலைவர்மக்ஸ்வெல்பரணகமநேற்றுமுன்தினம்தெரிவித்தார்.
ஆணைக்குழுவின் ஆயுட்காலத்தை ஜனாதிபதி நீடித்தால் திட்டமிட்டவாறு எதிர்வரும் 27, 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் அமர்வுகள் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-சி)

# அடுத்த மாதம் மைத்திரி பங்களாதேஷ் பயணம்



கொழும்பு, பெப்.13
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் பங்களாதேஷுக்குப் பயணம் செய்யவுள்ளார்.
பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவின் அழைப்புக்கமைய, ஜனாதிபதி இந்தப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.
ஜனாதிபதியின் பங்களாதேஷ் பயணம் தொடர்பில் இரு நாட்டு வெளிவிவகார அமைச்சுக்களும் ஏற்கனவே ஆயத்தங்களைச்செய்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.
இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் சில உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
அமைச்சர் என்ற ரீதியில் 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் மைத்திரிபால சிறிசேன பங்களாதேஷுக்குப் பயணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-சி)

# சீனா தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் மாற்றம்

கொழும்பு, பெப்.13
சீனா தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாடு முற்றுமுழுதாக மாற்றமடைந்துள்ளது என ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.
எதிர்வரும் காலங்களில் சீனாவிடமிருந்து அதிகளவான முதலீடுகளை எதிர்பார்ப்பதாக அமைச்சர்ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மிகச் சிறந்த நட்புறவு காணப்பட்டது. எனினும், புதிய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் சீனாவின் அனைத்துத் திட்டங்களும் மீளாய்வு செய்யப்பட்டன.
சீனாதொடர்பானநிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
மேற்குலக நாடுகள் கடுமையான நிபந்தனைகளை விதிக்கும்போது சீனா முதலீடு செய்யத் தயாராக இருக்கின்றது என்று அவர் கூறியுள்ளார்.
சீனா விசேட பொருளாதார வலயமொன்றைக் கோருவதாகவும் அதற்கு அனுமதியளிக்கப்படும் என்றும் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்துள்ளார்.
சீனா தனது பணத்தை முதலீடு செய்து இந்தத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதேவேளை, குறைந்த வட்டியின் அடிப்படையில் சீனாவிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ளவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். இதேவேளை, சீனாவுடனான அரசியல் கூட்டுறவை இலங்கை அதிகரித்துக்கொள்ளும் என சீன வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.(தி)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு உரிய சம்பளம் வழங்கவேண்டும்

## *கூட்டமைப்பு சபையில் வலியுறுத்து*

கொழும்பு, பெப்.13
தோட்டத் தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற சம்பளம் வழங்கவேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது என நேற்று முன்தினம் சபையில் வலியுறுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், ஏனையோருக்கு நிகராக மலையக மக்களுக்குச் சம்பளம் வழங்குவதுடன் அவர்களின் நல்வாழ்வுக்கும் வழி செய்யவேண்டும் என்றும் தெரிவித்தார்.
ஊழியர் ஒருவரின் சம்பளம் தங்கத்தின் அடிப்படை விலைக்கேற்ப அமையவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்ட விடயங்களைக் குறிப்பிட்ட அவர், மேலும்குறிப்பிடுகையில்,
வீட்டு வசதி, சரியான வாழ்வாதார முறை இன்றி மலையகத் தோட்டத்தொழிலாளர்கள் லயன் அறைகளில் இன்னமும் துன்பமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போதும் 500 ரூபா சம்பளமே நாளொன்றுக்கு வழங்கப்படுகிறது.
இவர்களுக்குச் சம்பள அதிகரிப்பைச் செய்யவேண்டிய கடப்பாடு அரசுக்கு உள்ளது. ஏனைய தரப்பினருக்கு நிகராகத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவேண்டும். அவர்களின் உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படவேண்டும்.
இதேவேளை, 10,000 ரூபா சம்பளம்பெறும்ஆசிரிய உதவியாளர்களுக்கும் உரிய சம்பளம் வழங்கப்படவேண்டும். தங்கத்தின்அடிப்படைவிலைக்கு ஏற்ப ஊழியர்களின் சம்பளம் இருக்கவேண்டும்–என்றார். (த-சி)

# சிசிலிக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, பெப்.13
பினான்ஸ் அன்ட் கிரடிட் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களின் பணத்தை மோசடி செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிசிலி கொத்தலாவலவுக்கான விளக்கமறியல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இவருக்கான விளக்கமறியல் நீடிப்பு உத்தரவைக் கொழும்பு பிரதான நீதிவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று முன் தினம் பிறப்பித்தார்.
இவர், சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்புக்கு மத்தியில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சைபெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-13)

# சபையில் பொன்சேகாவை எதிர்கொண்டார் மகிந்த

கொழும்பு, பெப்.13
பொது எதிர்க்கட்சியாகத் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் மகிந்த ஆதரவு தரப்பினர் சுயாதீனமாகச் செயற்படுவது தொடர்பான சர்ச்சை நீடிக்கின்ற நிலையில், நேற்று முன்தினம் சபைக்கு வந்தார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. இதன்போது பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவும் சபையில் பிரசன்னமாகியிருந்தார்.
சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்திருத்தம் மீதான விவாதம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த விவாதம் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் சுமார் 3 மணியளவில் மகிந்த சபைக்கு வந்தார்.
பின்னர் தமது ஆசனத்தில் அமர்ந்தவாறு தமது அருகில் இருந்தவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்த அவர், 3.20 மணியளவில்சபையிலிருந்துவெளியேறினார். அவருடன்சேர்ந்து அவரது ஆதரவுதரப்பினரும்சபையிலிருந்துவெளியேறினர். மகிந்த சபையில்இருந்தசந்தர்ப்பத்தில்முன்னாள் இராணுவத்தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும் சபையில் இருந்தார். (த-சி)


# மரண அறிவித்தல்



தோற்றம் 11.07.1945 மறைவு 10.02.2016

## வைரமுத்து இராசையா சிவபாலசிங்கம் (V.R.S)

(முன்னாள் பங்காளர் இராசையா அன்சன்ஸ். ஆனமடுவ Transport)
(உரிமையாளர் V.R.S. Stores - ஆனமடுவ)

யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோயிலடி மற்றும் ஆனமடுவை வதிவிடமாகவும் கொண்ட இராசையா சிவபாலசிங்கம் 10.02.2016 புதன்கிழமை ஆனமடுவில் காலமானார்.

அன்னார் வைரமுத்து இராசையா - சிவபாக்கியம் (நல்லபிள்ளை) தம்பதியரின் மகனும், சுப்பையா சதாசிவம் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திரவதனா (சந்திரா) அவர்களின் அன்புக் கணவரும், ரிசிகேசன், ஆரணி, கஜந்தன் (MGM - ஆனமடுவ), கஜானன் (V.R.S - ஆனமடுவ), காலஞ்சென்ற கௌரீசன் ஆகியோரின் தந்தையும் ஜெயவாணி, சிவபிருந்தன் ஆகியோரின் மாமனும், சிவராசசிங்கம், குபேந்திரசிங்கம் (R.K.S/MATA-ஆனமடுவ), செல்வராணி, ரவீந்திரசிங்கம்,தயாபரசிங்கம், இராஜகுலசிங்கம், நிரோஜினி மற்றும் காலஞ்சென்றவர்களான ஜெயகுலசிங்கம், குமாரகுலசிங்கம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம் (Auditor-Hatton), தயாளமலர், சுந்தரலிங்கம், தேவகி (இணுவில்), கருணா, ஜெகதீஸ்வரி (ஹற்றன்), சிவனேஸ்வரலிங்கம், உமா, சற்குணலிங்கம் ( S.S.Traders - ஹற்றன்) ஆகியோரின் மைத்துனரும், நேத்திரா, ஷஷாங் ஆகியோரின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.02.2016) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஆனமடுவ பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தொடர்பு
077 778 5782, 077 324 7436

தகவல்:
குடும்பத்தினர்.

(68882) (13.20.17.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இறுதிக் கட்டப் போர்க்குற்ற விசாரணை நீர்த்துப் போகுமா...

இலங்கையில் நடைபெற்ற போரின் இறுதிக் கட்டங்களின்போது, பாரதூரமான மனித உரிமை மீறல்கள், நிகழ்ந்ததாகக் கூறப்படும் விவகாரத்தில் விசாரணைகளை மேற்கொள்வதில்--

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை, அனைத்துலகப் பங்களிப்புடன் கூடிய கலப்பு வகை சார்ந்த பொறிமுறையையே விரும்புகிறது.

ஆரம்பத்தில் இருந்து இப்போதுவரை, ஐ.நா.மனித உரிமைகள் சபையின் நிலைப்பாடு அதுவே. அந்த நிலைப்பாட்டில் இருந்து எமது சபை (ஐ.நா.ம.உ. சபை) ஒரு துளியும் மாறவில்லை; நிலைப்பாட்டை மாற்றவில்லை.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு, இங்குள்ள களநிலைமைகளை நேரில் தாம் கண்டறிந்ததுடன், பாதிக்கப்பட்டவர்களிடம் கேட்டறிந்ததன் பின்னர், அனைத்துலகப் பிரசித்தி பெற்ற ரொய்ட்டர் செய்திச் சேவைக்குத் தமது கருத்தை-ஐ.நா.ம.உ.சபையின் கருத்தை--

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் சார்பில், அதன் ஆணையாளர் கனகச்சிதமாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாக, வெளிப்படுத்தி உள்ளார்; பகிரங்கப்படுத்தி உள்ளார் என்றும் கொள்ளலாம்.

இது விவகாரத்தில், விடயத்தில், பக்கச் சார்பற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு, முன்னெடுப்பதற்கு அனைத்துலகத்தின் பங்களிப்பு-சேவை-தேவை இல்லை என்று எங்கள் நாட்டின் ஜனாதிபதியும் மற்றும் அரச பிரதானிகளும் தெரிவித்துவரும் நிலையில்-

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் வெளிப்படுத்தி உள்ள கருத்து, இருதரப்பார் மத்தியிலும் ஒரு முறுகல் நிலையை உருவாக்க வாய்ப்பு உண்டு என்பதை உள்ளூர உணர்த்துகிறது.

இலங்கை அரசு தீர்மானிப்பது எதுவாக இருப்பினும், பாதிப்புற்றோரின் ஆதரவு அதற்கு இருக்குமாயின்-

பொறிமுறை பக்கச்சார்பு அற்றதாகவும், சுயாதீனமானதாகவும் அமையும் பட்சத்தில்-ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவுக்கு இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறை யோசனை ஏற்புடையதாக அமையும்-என்று ஆணையாளர்-அல்ஹுசேன் தமது செவ்வியில் தெரிவித்திருக்கிறார் என்பதும் இங்கு ஊன்றிக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

எனினும், ஐ.நா.மனித உரிமைகள் சபைக்குழு, அனைத்துலக விசாரணையை நீர்த்துப்போகச் செய்யுமோ என்ற அச்சம் மேலோங்குகின்றது. அதனைத் தவிர்க்கவோ, தணிக்கவோ இயலாது.

மொத்தத்தில், இறுதியில் ஐ.நாவும், உனக்கும் பேப்பே, உன் அப்பனுக்கும் பேப்பே-என்று தமிழர்களுக்குக் கை அசைத்துக் காட்டுமோ, என்னவோ?

அது குறித்து, இப்போது எவரும் ஆருடம் சொல்ல இயலாதே!

தொட்டால் பூ மலரும்
தொடாமல் நீ மலர்ந்தாய்
சுட்டால் பொன் சிவக்கும்
சுடாமல் நீ சிவந்தாய்-என்ற சினிமாப்பாடலைப் பொருத்திப் பார்க்க வைத்துள்ளார் ஐ.நாவின் மனித உரிமைகள் உயர் அதிகாரி ஹுசேன்.



# சையிட் அல் - ஹுசேனின் வருகையால் வேறுபட்ட மன உணர்வுகள்

எம்.ஐ.முபாறக்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் - ஹுசேனின் இலங்கைக்கான வருகை சிலருக்கு மகிழ்ச்சியையும் சிலருக்குக் கவலையையையும் சிலருக்கு ஆப்பையும் கொடுத்து நிறைவடைந்துள்ளது.

குறிப்பாக, இவரது வருகையின் முடிவு அரசுக்கு வெற்றியையும் தமிழர் தரப்புக்கு ஏமாற்றத்தையும் மகிந்த தரப்புக்கு ஆப்பையும் கொடுத்துள்ளது என்றே சொல்ல வேண்டும். நான்கு நாள் பயணம் மேற்கொண்டு ஆணையாளர் இலங்கை வந்தபோது அவருக்கு இலங்கையில் எதிர்ப்பும் ஆதரவும் தெரிவிக்கப்பட்டன.

இலங்கை அரசும் தமிழர் தரப்பும் அவரது வருகையைப் பெரிதும் விரும்பின. ஆனால், மகிந்த தரப்பு அவரது வருகையை எதிர்த்து அரசியல் நடத்தியது. போரை வென்று கொடுத்த படையினரைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்தி அவர்களைத் தண்டிப்பதற்காகவே அவர் இலங்கை வருகின்றார் என்றும், சர்வதேச விசாரணைக்கு இலங்கை அடிபணியப் போகின்றது என்றும் அவர்கள் கூறித் திரிந்தனர்.

மறுபுறம், தமிழர் தரப்பு, மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியே ஆணையாளரின் வருகையை வரவேற்றது. இன்னொருபுறம், இலங்கை அரசு இராஜதந்திர ரீதியில் காய் நகர்த்தியது. இறுதியில் இந்த இராஜதந்திரமே வெற்றி பெற்றுள்ளது.

இலங்கைக்கு நான்கு நாள் பயணம் மேற்கொண்டிருந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தமது பயணத்தின் இறுதியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தினார். இலங்கை வருகையின் போதான அவரது அவதானிப்புக்கள் மற்றும் மனித உரிமை மீறல் விசாரணை தொடர்பான ஐ.நாவின் நிலைப்பாடு போன்றவற்றை அவர் அங்கு தெரிவித்தார்.

**கவனிக்கத்தக்க இரண்டு விடயங்கள்**

அவர் அங்கு தெரிவித்தவற்றுள் இரண்டு விடயங்கள் கவனிக்கத்தக்கவை. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளகப் பொறிமுறை விசாரணையை ஏற்றுக்கொண்டமையும், போர்க்குற்ற விசாரணைகளை நிராகரித்து மனித உரிமை மீறல் பதத்தை மாத்திரம் ஏற்றுக்கொண்டமையும் இங்கு கவனிக்க வேண்டிய இரண்டு முக்கிய விடயங்களாகும்.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் பேரவை மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் இருந்தே கூறி வந்தது.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும் இந்த விசாரணைகளுக்காக உள்ளகப் பொறிமுறை ஒன்று அமைக்கப்படும் என புதிய அரசு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு வாக்குறுதியளித்தது. இதனை மனித உரிமைகள் பேரவை ஏற்றுக் கொண்டது.

இந்த நிலையில், மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருகைதந்த நேரம் பார்த்து இலங்கை அரசு உள்ளகப் பொறிமுறையை உருவாக்குவதற்கான குழுவை அறிவித்தது.

இதன் விளைவாக ஆணையாளர் சர்வதேச விசாரணையை நிராகரித்து உள்ளகப் பொறிமுறையை ஏற்றுக்கொண்டார் என்று சொல்லலாம். இந்த விடயத்தில் இலங்கையின் இறைமையைப் பாதிக்கும் வகையில் ஐ.நா. நடந்து கொள்ளாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விசாரணை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளமையும் கவனிக்கத்தக்கது.

இதில், முக்கியமானது போர்க் குற்ற விசாரணையை அவர் ஏற்றுக்கொள்ளாமைதான்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவிசாரிக்கும் நீதிமன்றம் மனித உரிமை மீறல்களைக் கண்டறிந்தால் அவை போர்க் குற்றங்களா, இல்லையா என்று தீர்மானிக்கும் என அவர் அங்கு கூறி இருந்தார்.

**தமிழருக்கு ஏமாற்றம்**

இது தமிழருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது என்றே சொல்ல வேண்டும். உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கை வைக்காத தமிழர்கள் அன்று முதல் இன்று வரை சர்வதேச விசாரணைகளையே கோரி வருகின்றனர். அது மாத்திரமன்றி, போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்று தமிழர் தரப்பு கூறி வருகின்றது. சனல் - 4 தொலைக் காட்சியில் அவ்வப்போது ஒளிபரப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பான ஆவணத் திரைப்படங்கள் உள்ளிட்ட பலவற்றை அவர்கள் ஆதாரங்களாகக் கொண்டுள்ளனர். ஆனால், மனித உரிமைகள் ஆணையாளர் அவற்றையெல்லாம் போர்க்குற்றங்களா, இல்லையா என்று தீர்மானிக்கும் அதிகாரத்தை இலங்கை நீதிமன்றத்திடமே விட்டுச் சென்றுள்ளார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரொஹான் எதிரிசிங்க

# நீதித்துறை மற்றும் நீதி நிறுவனங்களின் உயர்வான சுயாதீனமும் சுதந்திரமும்

*('இலங்கைக்குப் பொருத்தமில்லாத ஜனாதிபதி ஆட்சிமுறை' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளிவந்த கட்டுரையின் தொடர்ச்சி)*

அரசமைப்புக்கான உத்தேச 20 ஆவது திருத்தம் பெரிய அரசியல் கட்சிகளுக்கு அனுகூலமான விதத்தில் உருவாக்கப்பட்டிருந்ததுடன், எளிமையான பெரும்பான்மை முறை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவம் என்பவற்றுக்கிடையிலான ஒரு பொருத்தமான கலவையை வழங்குவதற்கும் அது தவறியிருந்தது. ஏனெனில், அது விகிதா சார பிரதிநிதித்துவதற் குப் பதிலாக எளிமையான பெரும்பான்மை முறைக்கு சாதகமானதாக இருந்து வந்தது.

**உரிமைகள் சாசனம்**

இலங்கையின் உரிமைகள் சாசனம் சர்வதேச ஒழுங்குகள் மற்றும் தர நியமங்கள் என்பவற்றிலும் பார்க்க குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. எடுத்து விளக்கப்பட்டிருக்கும் உரிமைகள் தொடர்பாக அடிப்படைக் குறைபாடுகள் காணப்படுகின்றன. கட்டுப்படுத்துதல், வரையறை செய்தல் பிரிவு, அரசியல் பிரிவுகள் அத்தகைய உரிமைகளை கட்டுப்படுத்துவதனை இலகுவாக்குகின்றது.

அ) உரிமைகள் மற்றும் அவற்றின் வீச்செல்லை என்பவை, குறைந்தபட்சம் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயங்களுடன் பொருந்திச் செல்லுதல் வேண்டும்.

ஆ) கட்டுப்படுத்துதல் அல்லது வரையறை செய்யும் பிரிவு (உறுப்புரை 15), சீர்த்தூக்கிப் பார்த்தல் மற்றும் விகிதாசார நிலை என்பவற்றைக் கொண்ட எத்தகைய அளவுகோல்களும் இல்லாத விதத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் ஆகிய தரப்புக்கள் கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடிய சாத்தியப்பாட்டுடன் கூடிய விதத்தில் வரையப்பட்டுள்ளது. பல வருட காலம் இந்தக் குறைபாடு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 1990களின் தொடக்கத்தின் போது ஜனாதிபதி பிரேமதாசவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அனைத்துக் கட்சி மாநாடு கலந்தாராய்வுகளிலும் இது எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

இ) முதலாவது மற்றும் இரண்டாவது குடியரசு அரசமைப்புக்கள் இரண்டும், உரிமைகள் சாசனம் மற்றும் தற்போதைய அரசமைப்பின் உறுப்புரை 16 என்பவற்றுடன் இணங்கிச் செல்லாத சட்டங்களையும் கூட செல்லுபடியாக்கும் ஒரு சில ஏற்பாடுகளைக் கொண்டிருந்தன. அரசமைப்புவாதத்தின் முதலாவது கோட்பாடுகளுடன் இணங்கிச் செல்லாத இந்த முரண்படும் அம்சம் அகற்றப்படுதல் வேண்டும்.

ஈ) நிறைவேற்று அதிகாரத் தரப்பினாலும் மற்றும் நிர்வாகத் தரப்பினராலும் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில், தாக்கல் செய்யப்படும் அடிப்படை உரிமைகள் தொடர்பான விண்ணப்பம் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்ற ஏற்பாட்டைக் கொண்டிருக்கும் (உறுப்புரை 126), நீதியை அணுகுதல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகிய கோட்பாடுகளுக்கு முரணானதாக இருந்து வருகின்றது. கொழும்புக்கு வெளியில் வாழ்ந்து வரும் நபர்கள் இந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லையைப் பயன்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த ஏற்பாடு, உச்ச நீதிமன்றம் நாட்டின் இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றம் என்ற முறையில் வகித்து வரும் பாத்திரத்தை உதாசீனம் செய்கின்றது. அதாவது, உச்ச நீதிமன்றம், விடயங்களிலும் பார்க்க சட்டம் தொடர்பான கேள்விகளை கவனத்தில் எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அது நீதித்துறையின் ஒரு முக்கியமான ஒரு துறையில் மேன் முறையீடு செய்யும் ஒரு வாய்ப்பை வழங்காத முரண்பாட்டை உருவாக்கின்றது. அது சட்டத்தின் ஆட்சியை மீறும் ஒரு செயலாகக் கருதப்பட முடியும். மாகாண உயர் நீதிமன்றங்களில்அடிப்படை உரிமைவிண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு அனுமதியளித்தல், அத்தகைய பலவீனங்களைப் போக்குவது மட்டுமன்றி, மனித உரிமைகள் பெரும் போக்குப் படுத்தப்படுவதற்கு உதவ முடியும். நீதித்துறை மற்றும் ஏனைய நீதி நிறுவனங்கள் என்பவற்றின் சுயாதீனம்

> "சீர்தூக்கிப் பார்த்தல் மற்றும் விகிதாசார நிலை என்பவற்றைக் கொண்ட எத்தகைய அளவுகோல்களும் இல்லாத விதத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றம் ஆகிய தரப்புக்கள் கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடிய சாத்தியப்பாட்டுடன் கூடிய விதத்தில் வரையப்பட்டுள்ளது."

நீதித்துறையின் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான தற்போதைய அரசமைப்பு ஏற்பாடுகள், குறிப்பாக ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களின் நீதிபதிகளை நீக்குதல் என்பவை தொடர்பாக மேலும் பலப்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறிருப்பினும், கடந்த 20 வருட காலத்துக்கும் மேலாக மிக முக்கியமான நிறுவனத்தின் மீது ஏற்படுத்தப்பட்டிருக்கும் சேதம், இந்த நிறுவனத்தின் நற்பெயர் மற்றும் நம்பகத்தன்மை என்பவற்றை மீள ஸ்தாபிப்பதற்கு அரசமைப்புச் சீர்த்திருத்தத்திலும் பார்க்க, மேலும் பல விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதை எடுத்துக் காட்டுகின்றது.

நம்பகத் தன்மை குறைந்திருக்கும் மற்றொரு நிறுவனம், சட்டமா அதிபர் திணைக்களமாகும். அது குறிப்பாக, சட்ட வரைவுகள் அரசமைப்புடன் இணங்கிச் செல்பவையா என்பதனை மீளாய்வு செய்யும் அதன் பாத்திரத்தையும், அரசின் செயற்பாடுகளின் அரசமைப்புப் பொருத்தப்பாடு குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்கும் பாத்திரத்தையும் வகிப்பதற்கு தகுதியற்றது என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளது. உண்மையிலேயே சட்டமா அதிபர் திணைக்களம் அரசமைப்பைப் பாதுகாத்து, அரசமைப்புக்கு முரணான சட்டங்களையும், செயல்களையும் நியாயப்படுத்தி வரும் ஒரு நிறுவனமாக நோக்கப்படுகின்றது. பொதுமக்களின் முன்முயற்சிக்கு ஊடாக நீதிமன்றங்களினால் சட்டவாக்கங்களின் அரசமைப்பு ரீதியான பொருத்தப்பாடு தொடர்பான மீளாய்வு முறையை மீண்டும் அறிமுகம் செய்து வைப்பதானது, அரசியலமைப்பின் அதியுயர் தன்மையைப் பாதுகாப்பது மட்டுமன்றி, இந்தத் துறை தொடர்பான தனது செயலாற்றுகையை விருத்தி செய்து கொள்வதற்குச் சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு ஒரு தூண்டுகோலாகவும் இருந்து வர முடியும்.

(தொடரும்)

## மருத்துவமனைப் பணிப்பாளருக்கு ஒரு தயவான வேண்டுகோள்

யாழ்.போதனா மருத்துவமனை, நோயாளர்களுக்கு வழங்கி வருகின்ற சேவைகளை எவ்வாறு புகழ்ந்தாலும் தகும். அதிலும் புதிய பணிப்பாளரின் வருகையின் பின்னர் நோயாளர்களின் இடர்களைப் போக்கும் வகையிலான பல நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமை பாராட்டுதற்குரியது.

முன்பெல்லாம் கிளினிக்குகளுக்கு வருகின்ற நோயாளர்கள் இருப்பதற்கு இடமில்லாது கால்கடுக்க நின்று சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர். தற்போது இந்தக் குறைபாடு நீக்கப்பட்டு நோயாளர்கள் அமரக் கூடிய வகையில் ஆசன வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன. மருந்து வழங்கும் இடத்திலும் ஆசனங் கள் போடப்பட்டுள்ளதால் மிகவும் பயனுள்ளதாகக் காணப்படுகின்றது.

மேலும் நோயாளரைப் பார்வையிடுவதற்கென இருந்த பாஸ் முறை நீக்கப்பட்டதால் பார்வையாளர்கள் சிரமமின்றிச் சென்று வரமுடிகின்றது. இதற்கும் எனது பாராட்டுக்கள்.

இதேவேளை அங்கு காணப்படுகின்ற சிறிய குறைபாடுகளையும் இங்கு குறிப்பிடுவதன் மூலமாக அவற்றை நிவர்த்தி செய்துவைக்க முடியுமென நம்புகின்றேன்.

விடுதி இல.24 மிகவும் முக்கியமான நோயாளர் விடுதியாகும். ஆரம்பத்தில் நோயாளர்கள் இங்கு சேர்க்கப்படுவதும், பின்னர் வெவ்வேறு விடுதிகளுக்கு மாற்றப்படுவதும் வழக்கம். இந்த நிலையில் விடுதியின் பெண் நோயாளர்களை அனுமதிக்கின்ற பகுதியில் உள்ள மலசலகூடம், குளியலறை ஆகியவற்றின் கதவுகள் பாதுகாப்பு இல்லாத நிலையில் காணப்படுகின்றன. மலசலகூடம் ஒன்றின் கதவு கழன்று தொங்கிக் கொண்டிருக்கின்றது. குளியலறைக் கதவும் இதே நிலையில்தான் காணப்படுகின்றது. வேறொரு மலசலகூடத்துக்கு கதவே இல்லாத நிலை காணப்படுகின்றது. இதனால் விடுதியில் தங்கி நிற்கும் பெண் நோயாளர்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். மருத்துவமனைப் பணிப்பாளர் இதைக் கவனத்தில் கொண்டு உரியவர்கள் மூலமாக சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ம.பத்மினிதேவி
கொக்குவில்

## கோயில்களும் ஒலிபெருக்கிகளும்

கோயில் திருவிழாக்கள், கும்பாபிசேகங்கள் என்றால் முன்பெல்லாம் மக்கள் அவற்றை ஆவலோடுஎதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள். மக்களைப் பக்தியோடுகோயில்களுக்குவரச்செய்யவும், மனதில்உற்சாகத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டு வரவுமே எமது முன் னோர்கள் திருவிழாக்களை உருவாக்கி அங்கு பக்தியை ஊக்குவித்தது மட்டு மன்றி கலை நிகழ்ச்சிகளையும் உரு வாக்கினார்கள். தற்போது வெளிநாட்டுப் பணம் காரணமாகவும், தமது வருமானத்தை அதிகரிப்பதற்காகவும் முன்பு சிறிய, சிறிய குடிசைகளில் இருந்த கோயில்களைப் பெரிதாகக் கட்டி அவற்றுக்கு. ராஜகோபுரம் கட்டி ஒரு தெருவிலேயே நான்கு, ஐந்து கோயில்களைக் கட்டி வைத்துள்ளார்கள்.

அதன் பின்பு திருவிழாக்கள், கும்பாபிசேகம், சங்காபிசேகம் என்று கூறி குறைந்தது எட்டு ஒலிபெருக்கிகளையாவது கட்டி இரவு, பகல் என்று பாராது பாடலை ஒலிபரப்புவார்கள். மக்கள் அசந்து தூங்கும் நேரத்தில் அதிகாலையிலேயேபாடல்களை ஒலிபரப்புச் செய்ய ஆரம் பித்து விடுவார்கள். சுன்னாகத்தில் உள்ள ஒரு கோயிலில் இப் படித் தான் கும்பாபிசேகம், மண்டலாபிசேகம் எனத் தொடர்ந்து இரண்டுவாரங்களுக்குமேலாக ஒலி பெருக்கித் தொல்லை தாங்க முடியவில்லை.

வயோதிபர் கள், மாணவர்கள், கைக்குழந்தைகள், இருதய நோயாளிகள் அருகில்உள்ள வீடுகளில் இருக்கிறார்கள். அதை விடவும் தொலைபேசியில் உரையாட முடியாலும் வீட்டுக் குள்ளேயே ஒருவரோடு ஒரு வர் கதைக்க முடியாமலும் சிரமப்படுகிறார்கள்.

குறைந்த பட்சம் இரவிலாவது ஒரு நேரக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர வேண்டியது உடனடித் தேவையாகும்.

அ.புண்ணியமூர்த்தி
சுன்னாகம்

## பொறுப்பற்ற பஸ் சாரதி

இரண்டொரு தினங்களுக்கு முன்னர் பளைக்குச் செல்ல வேண்டிய தேவையிருந்ததால் யாழ்.நகரிலிருந்து மல்லாவிக்குச் செல்லும் தனியார் பஸ்ஸில் பயணித்தேன்.

அந்த பஸ்ஸின் சாரதி காதில் செல்போனை வைத்துக் கதைத்தவாறு பஸ்ஸை ஓட்டிச்சென்றார். அத்துடன் மிகவும் மெதுவாகவே பஸ் சென்று கொண்டிருந்தது. இதனால் அந்த பஸ்ஸின் நடத்துநர் பயணிகள் இறங்க வேண்டிய இடங்களில் பஸ் நின்றபோது பயணிகளை அவசரமாக இறங்குமாறு வற்புறுத்திக் கூறிக்கொண்டிருந்தார். இதனால் வயது போனவர்களும், இயலாதவர்களும் அதிக சிரமங்களை எதிர்கொண்டதை அவதானிக்க முடிந்தது.

மேலும், பஸ் சாரதியின் பொறுப்பில்லாத இந்த நடவடிக்கை பயணிகள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அத்துடன் அந்த பஸ் விபத்தை எதிர்கொண்டு விடுமோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியது.

கு.நகுலா, கொட்டடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் போர் நிறுத்தம்

## அமெ. ராஜாங்கச் செயலாளர் அறிவிப்பு

டமஸ்கஸ், பெப்.13
சிரியாவில், போர்நிறுத்தத்தை மேற் கொள்ளவுள்ளதாக அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஜோன் கெரி நேற்று தெரி வித்தார்.

ஜேர்மனியில் முனிச் நகரில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் ஏனைய நாட்டு அதிகாரிகளுடன் சந்தித்து ஆலோ சனை நடத்தி, பெறப்பட்ட போர் நிறுத்த முடிவை அவர் அறிவித் தார்.



மனிதாபிமானம், போர்நிறுத்தம் என்பவற்றைமுன் வைத்து இந்தப் போர் நிறுத்த ஒப்பந்தத்தைமேற் கொண்டுள்ள தாக அறிவிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் சிரிய மக்களின் வாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்கோடு முழுமையான போர் நிறுத்தம் கடைப்பிடிக் கப்படவுள்ளதாக ஜோன் கெரி கூறுகிறார். முதலாவதாக மனிதாபிமானச் செயற் பாடுகளை நாம் ஆரம்பிக்க வேண்டும். ஒரு கிழமை கால அளவில் நாடு முழுவதும் போர் நிறுத்தத்தைச் செயற்படுத்தவேண்டும். இவற்றைச் செயற்படுத்த அனைவரும் முடிந்த அளவில் வேகமாகச் செயற் படவேண்டும் எனக் கெரி மேலும் தெரி வித்தார்.

இந்த நகர்வு தனித்துவமானது, நுட்ப மானது என நிபுணர்கள் கருத்து தெரி வித்தள்ளனர்.
ஆனால் இந்த போர்நிறுத்த ஒப்பந்தம் சிரியாவில் இயங்கும் போராளிகள் அமைப்பினருடன் செய்யப்படவில்லை என்பதை அழுத்தமாகத் தெரிவித்தார் கெரி.
இடம்பெறும் உள்நாட்டுப் போரைத் தடுத்து, போராளிக் குழுக்களின் செயற்பாட்டைத் தணிப்பதே இதன் நோக்கமாகும். 5 வருடங்களாக நிகழும் உள்நாட்டுப் போரைக் கட்டுக்கள் கொண்டு வருவதற்கு இரு தரப்பினருடனும் பேச்சு நடத்த வேண்டும் எனவும் கெரி தெரிவித் தார். (த-ரி4)

## கிளிநொச்சி விவசாயத் துறையில் வேலை வாய்ப்புக்கள்

இலங்கையிலும் இந்தியாவிலும் இயந்திர பொறி யியல் தொழில் துறையில் முதலிடம் வகிக்கும் ISF வர்த்தகக் குழுமத்தின் ஒரு அங்கமான HERI TAGE AGRI ( ஹெரிடேச் அக்ரி) ஒரு நவீன பண் ணையாகும். வடமாகாணத்தின் முதலாவது வர்த் தகப் பெயரான 'இயக்கச்சி' என்னும் பெயரின் கீழ் இப்போது எங்கள் உற்பத்திகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள பல்பொருள் அங் காடிகளில் (supper market) சந்தைப்படுத்தப்படு கின்றன. விரைவில் இவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளன. எங்கள் பண்ணை முகாமைத்துவக் குழுவில் இணைந்து கொள்ள விவசாயத்தில் ஆர்வமுள்ளவர்களுக்குக் கீழ்வரும் பதவிக்கு வாய்ப்பு உள்ளது. தகுதி உடையவர்கள் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

FARM SUPERVISOR

1) இலங்கை விவசாயத் திணைக்கள விவசாயக் கல்லூரியில் டிப்ளோமா பட்டம்.
2) விவசாயத் துறையில் அனுபவம்.
3) வயதெல்லை 35
4) இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விளம்பரம் வெளியாகி 7 நாள்களுக்குள் பதிவுத் தபால் மூலம் விண்ணப்பிக்கவும், முன்னர் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.**

HERITAGE AGRI
VAZHAITHOTTAM
YMCA VILLAGE ROAD, IYAKACHCHI
Email: admin@heritage-agri.com

(64254)(11,17,18,20)

# போர்க் குற்ற[ம்] புரிந்துள்ளத[ு] சிரிய அர[சு]

## ஐ. நா. உறுதி

ஜெனிவா, பெப்.13
சிரியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் உண்மை அறியும் ஆணைக்குழு கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட தனது அறிக்கையில், பார் அஸத் தலைமையிலான சிரிய அரசு மற்றும் ஐ. எஸ். தீவிரவாதிகள் போர்க் குற்றம் புரிந்துள்ளதாக உறுதிப்படுத்தியுள்ளது.
கடந்த 2011 இல் இருந்து சிரிய அரசு, எதிர்ப் பாளர்கள் மீது எதேச்சதிகார கைது நடவடிக்கைகள் நடத்திய தோடு, தடுப்புக் காவலில் உள்ளவர்க மிட்டுச் சித்திரவதை செய்து சாவடைய அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டு நெருக்கடிக்கான அரசியல் தீர்வுக் கால நிபந்தனையாக போர்க் குற்றம் விசாரிக்கப்படுவதும், பொறுப்புக் அவசியம் எனவும் அந்த அறிக் வலியுறுத்தி உள்ளது.

## உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி ஆலை அமைகின்றது சகாராவில்



ஒவுவர்சசாட்டே, பெப்.13
உலகின் மிகப்பெரிய சூரிய சக்தி அலை சகாராவில் ஆரம் பிக்கப்படவுள்ளது. 2018 ஆம் ஆண்டில் ஒரு மில்லியன் வீடுகளுக்கு மின்சாரம் வழங் கும் திட்டத்துக்காக இந்த முயற்சி செயற் படுத்தப்படவுள் ளது.
இதன் மூலம் நிலக்கரி காபன் நுகர்வு வருடத்துக்கு 760 ஆயிரம் டொன் அளவுக்குக் குறைக்கப்படும் என கால நிலை முதலீட்டு நிதியத்தினர் தெரிவித்துள்ளனர். கால நிலை மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுக்கிணங்க இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
மூன்று கட்டங்களாக வகுக்கப் பட்ட இந்தத் திட்டத்தில், முதல் கட்டம் கடந்த வியாழக்கிழமை செயற்பட ஆரம் பித்தது. சூரிய சக்தியைச் சேகரிக்கும் செயற் பாட்டுக்கு அதிக முதலீடு தேவைப்படுகின்றது. ஆனா லும் இவற்றைச் சேமித்து இரவிலும், மந்தமான கால நிலையிலும் பயன்படுத்த முடியும். விசேடமாக வடிவ [illegible]ணாடி சூரி [illegible] திசை திருப்பப் படும். பின்னர் சூரியனில் இருந்து கிடைக்கப்பெறும் வெப்பம் கண்ணாடியின் மேற்பரப்பில் உள்ள திரவத்தால் உறுஞ் சப்படும். பின்னர் இந்தத் திர வம் நீருடன் கலக்கப்பட்டு 400 பாகை செல்சியசுக்கு வெப்பமேற்றப்படும். பின்னர் இந்தத் திரவத்தைத் தொடர்ச் சியான செயற்பாடுகளுக்கு உட்படுத்துவதன் மூலம் மின்சாரம் உருவாக்கப்படு கிறது.
இந்தத் திட்டத்துக்காக உலக வங்கியும் முதலீடு செய் துள்ளது. உலக வங்கி இயக் குநர் மரி பிரர்கோயிஸ் தெரி வித்ததாவது:-
சூழலுக்குப் பாதுகாப்பான விதத்தில் சக்தியை உற்பத்தி செய்யும் முயற்சி, உலகின் பசுமையைப் பாதுகாக்கச் சிறந்த திட்டமாகும். இந்த முயற்சியில் நாடுகள் முதலீடு செய்யும்போது நாட்டின் தூய்மை பாதுகாக்கப்படும் அதே வேளை சக்தியும் பெற்றுக்கொள்ளக் கூடிய தாவுள்ளது. புதிய தொழில் துறையை உருவாக்குவதுடன், புதிய வேலைவாய்ப்புகளை யும் ஏற்படுத்தக் கூடியவாறு அமைந்துள்ளது எனத் தெரி வித்தார். (த-ரி4)

## இராணுவ அதி[காரி] சாவுத் தண்ட[னை] வழங்கிய வட[…]

சியோல், பெப்.13
வட கொரியா இராணுவ அ அதிகாரத்தைத் தவறாக யதற்காகவும், ஊழல் குற் றும்பக்கம் சார்ந்து செயற்ப சாவுத் தண்டனை வழங்க வட கொரியாவின் விவ அறிந்த தென் கொரிய அ ஒருவர் நேற்று முன்தினம் றி- யொங்- ஜில் என்ற வட ணுவ அதிகாரியே இவ்வா டனைக்கு உட்படுத்தப்பட் அது எப்போது, எப்படி என்ற தெரிவிக்க அவர் மறுத்து 2013 ஆம் ஆண்டு றி- பதவி வழங்கப்பட்டது. க அதிகாரத் துஷ்பிரயோகத்த தண்டனைக்கு உட்படுத்த தெரிவிக்கப்பட்டது. உ இருந்த அதிகாரி ஒருவ தண்டனை வழங்கப்பட் வலைகளைத் தோற்று அனுபவம் வாய்ந்த உ ஒருவருக்குச் சாவுத் தண்ட பட்டமை வட கொரியாவின் யொங் உன்னின் கொடு ஆணித்தரமாக வெளிப்படு அமெரிக்கா தெரிவித்துள் சர்வதேச அரசியல் உற யும் பேராசிரியர் டேவிட் செயற்பாடு வடகொரியாவி காட்டுவதாக அமைந்துள்ள கின் ஆளுமையும், அவரு னவர்கள் யார் என்பதை ணையும் கொண்டுள்ளார் எ படையாக காண்பிக்கிறது வித்தார்.

## இறுதிச் சட[…]

ஹொங்கொங், பெப்.13
சீனாவில் இறந்ததாகத் குழந்தை இறுதிச் சட உயிருடன் மீண்டசம் பவ ஏற்படுத்தியுள்ளது. சீஜிய பனான் பகுதியில் இந்தச் றுள்ளது.
இறுதிச் சடங்குகள் நட நாளுக்கு முன்னர் குழந் அறிவிக்கப்பட்டதுடன், 15 ம 12 பாகை செல்சியஸ் வெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும்
து
சு

வர்களைத் திட்ட
டையச் செய்ததாக
பட்டுள்ளது. சிரிய
கான அடிப்படை
றம் புரிந்தோர்
புக் கூறுவதும்
றிக்கை மேலும்
(து

அதிகாரிக்கு
டனையை
டகொரியா

வ அதிகாரி ஒருவர்
றாக பயன்படுத்தி
குற்றச்சாட்டு மற்
யற்பட்டதற்காகவும்
ழங்கப்பட்டது என
விவகாரங்களை
ரிய அரச அதிகாரி
னம் தெரிவித்தார்.
ற வட கொரிய இரா
வ்வாறு சாவுத்தண்
ப்பட்டார் ஆனால்
ன்றதகவல்களைத்
த்து விட்டார்.
றி-யொங்குக்கு
து. கடந்த கிழமை
ாகத்துக்காக சாவுத்
டுத்தப்பட்டார் எனத்
உயர் பதவியில்
ருவருக்குச் சாவுத்
ப்பட்டமை அதிர்
ற்றுவித்துள்ளது.
த உயர் அதிகாரி
ண்டனை வழங்கப்
ாவின் தலைவர் கிம்
காடூர உணர்வை
ரிப்படுத்துகிறது என
ந்துள்ளது.
உறவுகளை ஆரா
விட் காங், இந்தச்
யாவின் பலத்தைக்
துள்ளது. கிம் யொங்
அவருக்கு ஆதரவா
பதை அறியும் திற
ார் என்பதை வெளிப்
கிறது எனத் தெரி
(து-ரி4)

# இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தும் ஐ.எஸ்.

## அமெரிக்க உளவுத்துறை தகவல்




வொஷிங்டன், பெப்.13

ஐ.எஸ் அமைப்பினர் இரசாயன ஆயுதங்கள், வெடிபொருள்களை பாவிப்பதாகவும், உற்பத்தி செய்வதாகவும் அமெரிக்க உளவுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தேசிய உளவுத்துறை பணிப்பாளர் ஜேம்ஸ் கிளப்பர் தெரிவிக்கையில், சிரியா மற்றும் ஈராக்கில் இடம் பெற்று வரும் மோதலில் உலர் கந்தகம் உள்ளடக்கிய ஆயுதங்கள் பாவிக்கப்படுகின்றன. இதனைத் தவிர இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படுவதாகப் பல குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.எஸ் அமைப்பினர் நடத்திய தாக்குதலில் இரசாயன தாக்குதல் தொடர்பான குற்றங்கள் ஆராயப்படவுள்ளன-என்றார்.

பாதுகாப்பு உளவுத்துறை தலைவர் தெரிவிக்கையில், கடந்த வருட அறிக்கையில் இருந்து, இரசாயன ஆயுதங்களின் பாவனை வெகுவாக அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது எனத் தெரிவித்தார். இதனை உறுதிப்படுத்தவும், ஆராயவும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என வும் அவர் கூறினார்.

கடந்த வருடங்களில் ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பிரதேசங்கள், தற்போது படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன. இந்தப் பகுதிகள் அமெரிக்க அதிகாரிகளால் தற்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. (து-ரி4)

# நகருக்குள் புகுந்த காட்டுயானை

புதுடில்லி, பெப்.13

காட்டு யானை நகருக்குள் புகுந்து பெரும் அட்டகாசம் புரிந்துள்ளது. மேற்கு வங்காளத்தில், நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.



நகருக்குள் புகுந்த யானை, வீடுகளை இடித்துக் கொண்டு பிரதான வீதகளில் ஓடியது. இதனால் அச்சமடைந்த மக்கள் ஓட்டம் எடுத்தனர். மக்களின் செயற்பாட்டைப் பார்த்து அச்சமடைந்த யானை நகரின் பல பகுதிகளிலும் தாறுமாறாக ஓடியது. நிறுத்தி வைக்கப்பட்ட கார்களை சேதப்படுத்தியதுடன், இதர வாகனங்களையும் மிதித்துப் போட்டது. யானையைக் கட்டுப்படுத்த வனத்துறை அதிகாரிகள் மருந்து ஊசித் துப்பாக்கியைப் பிரயோகித்தனர். மாடி வீடுகளில் இருந்து மக்கள் இந்தச் சம்பவத்தை நேரில் பார்த்தனர்.

பைகந்தாபூர் காட்டில் இருந்து வந்த யானை வீதியைக் கடக்க முற்பட்டது. இதன்போது அருகில் இருந்த கிராமமான சிலிகுரியில் புகுந்து அட்டகாசம் செய்தது. பெண் யானையான இது, உணவுக்காக நகரில் புகுந்தது என வனத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

வனத்துறை அதிகாரிகள் மருந்து ஊசியை ஏற்றி அதனைச் சாந்தமடையச் செய்தனர். பின்னர் அதனை ட்ரக்கில் ஏற்றி காப்பகத்தில் சேர்த்தனர். (து-ரி4)

# நாய் குதறியதால் பெண் ஒருவர் சாவு

வொஷிங்டன், பெப்.13

அமெரிக்காவின் வேர்ஜீனியா மாகாணத்தில் பெண் ஒருவரைக் கடந்த புதன்கிழமை நாயொன்று கடித்துக் கொன்றுள்ளது.

சூசன் எனும் பெண்ணே நாயொன்றின் தாக்குதலுக்கு இலக்கானவர் ஆவார். இவர் 2 பிள்ளைகளுக்குத் தாய் ஆவார். ஒரு வாரத்துக்கு முன்னர் நாயை வேறொரு உரிமையாளரிடம் இருந்து இலவசமாகப் பெற்றுள்ளார். குடும்பத்தினருடனும், சிறுவர்களுடனும் நன்கு பழகும் என்பதால் சூசனும் நாயை வீட்டில் வளர்க்க ஆரம்பித்தார்.

ஆனால் அவர்களுக்கு நாயைக் கையாளத் தெரியாததால் இறுதியில் இறப்பு எற்பட்டுள்ளது எனக் குடும்பத்தினர் ஒருவர் தெரிவித்தார். மேலும் நாயை முன்பு வளர்த்த உரிமையாளர் இந்த இறப்புக்கு பதில் சொல்லவேண்டும் என்றும் அவர் சமூக வலைத்தளத்தில் தெரிவித்தார்.

மதியம் ஒரு மணியளவில் நாய் சூசனைக் கடித்துக் குதறியது. நாயை விலக்கிவிடச் சென்றவரையும் நாய் தாக்கியது. சூசன் மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டபோதிலும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். நேற்று முன்தினம் விலங்குகள் காப்பாளர்கள் நாயை பிடித்துச் சென்றனர். (து-ரி4)



# சடங்கு வேளையில் உயிருடன் எழுந்த குழந்தை

.13

நாகத் தெரிவிக்கப்பட்ட
சடங்குகளின் போது
பவம் பெரும் பரபரப்பை
சீஜியாங் மாகாணத்தில்
ந்தச் சம்பவம் இடம் பெற்

நடைபெறுவதற்கு ஒரு
குழந்தை இறந்தது என
15 மணி நேரங்கள் மறை
வெப்பநிலையில் பிண

அறையில் குழந்தை வைக்கப்பட்டிருந்தது.

இறுதிச் சடங்குகளின்போது குழந்தை முனகுவதைப்பார்த்த தந்தை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார். குழந்தையைப் பரிசோதித்த மருத்துவர், வாழ்க்கையில் முதல் முறை இவ்வாறான தொரு அற்புதத்தை நேரடியாகப் பார்க்கிறேன் எனத் தெரிவித்தார். கடந்த ஜனவரி மாதம் [illegible] மாதப் பிரசவத்தில் குழந்தை பிறந்தது. [illegible] நாள்கள் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து பராமரிக்கப்பட்ட குழந்தை, பெற்றோரின் விருப்பத்துக்கு இணங்க புது வருடக் கொண்டாட்டத்துக்காக வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் மருத்துவமனைக்கு மீண்டும் கொண்டு வரும்போது குழந்தையின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது. கடந்த வியாழக்கிழமை இதயத்துடிப்பு நின்றமையால், குழந்தை இறந்ததாக மருத்துவரால் தெரிவிக்கப்பட்டது. இதன் பின்னர் குழந்தையின் தந்தையால் [illegible] பாதுகாப்பாகச் சுற்றி தடிப்பான பையில் வைத்து பிணவறையில் வைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (து-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிரந்த நியமனம் வழங்கப்படாத கிராமிய சுகாதாரத் தொண்டர்கள்

மல்லிகா அராலி

கிராமிய சுகாதாரத் தொண்டர்களாக (சமூக சுகாதாரத் தொண்டர்கள்) சுமார் 16 வருடங்களுக்கும் மேலாகப் பணியாற்றிய 22 பேருக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால், அவர்கள் மிகுந்த மன உளைச்சலில் உள்ளனர்.

இதேநேரம், குறுகிய காலம் பணிபுரிந்த 247 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நிரந்தர நியமனத்தைப் பெற்றுத் தராது தொடர்ந்தும் தம்மைப் புறக்கணித்து வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

1997 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை எந்தவித கொடுப்பனவுமின்றி சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய இவர்கள், அர்ப்பணிப்புணர்வுடன் சிறந்த சேவையாற்றியவர்கள். கிராமங்களில் வீட்டுத் தரிசிப்புச் செய்து கர்ப்பவதிகள், சிறுவர்கள், சுகவனிதையர்கள் (35 வயதுக்கு மேற்பட்டவர்கள்), முதியோர்கள் மற்றும் இளவயதுப் பெண்கள் தொடர்பான அனைத்து வேலைத்திட்டங்களையும் சலிக்காது செய்தவர்கள்.

இந்த நிலையில், 2006.06.01தொடக்கம் 2011.08.31 ஆம் திகதி வரை கிராமிய சுகாதாரத் தொண்டர்களாக 45 பேர் ஒரு மாதப் பயிற்சி பெற்று 3500- 5000 ரூபா வரையான வேதனத்துடன் பொதுச் சுகாதார மருத்துவ மாதர்களின் அனைத்து வேலைகளையும் செய்தனர். தொடர்ந்து கிராமிய சுகாதாரத் தொண்டர் கள் 45 பேரும் புதிதாக 17 பேரும் சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு, கர்ப்பவதிகள் மற் றும் குழந்தைகள் போசாக்கு நிலையை அதிகரித்தல், வீட்டுத் தோட்டம் அமைத்தல் முதலான செயற்பாடுகளை 6000 ரூபா வேதனத்துடன் அவர்கள் தெரிவுசெய்யப் பட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளான தெல்லிப்பழை, சாவகச்சேரி, பருத்தித்துறை, ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் கடமையாற்றினர். அக்கால கட்டத்தில், இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றன. மொத்தமாக 5 நேர்முகப் பரீட்சைகளில் தோற்றிய இவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்குவதற்குரிய ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் மிகுந்த மனவருத்தத்துடன் கூறுகின்றனர்.

> கிராமங்களில் வீட்டுத் தரிசிப்புச் செய்து கர்ப்பவதிகள், சிறுவர்கள், சுகவனிதையர்கள் (35 வயதுக்கு மேற்பட்டவர் கள்), முதியோர்கள் மற்றும் இளவயதுப் பெண்கள் தொடர்பான அனைத்து வேலைத்திட்டங்களையும் சலிக்காது செய்தவர்கள்.

இதேவேளை, உலக வங்கியின் அனுசரணையில் சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்களாகப் பணியாற்றிய இவர்களை, "குறித்த நிறுவனத்தின் சேவைக்காலம் முடிவடைந்துள்ளது. உங்களுக்கான நிரந்தர நியமனம் விரைவில் வழங்கப்படவுள்ளது, அதுவரை, தற்காலிகமாக நீங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளீர்கள்" என்று முன்னாள் யாழ். பிராந்திய சுகாதார வேவைகள் பணிப்பாளரும் தற்போது பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருப்பவருமான மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் உறுதிமொழியளித்ததாகவும் அதன் பேரில் இவர்களை வேறு திட்டத்தில் இணைக்காது இருந்ததாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில், கிராமிய சுகாதாரத் தொண்டர்கள் மற்றும் சமூக சுகாதார ஊக்குவிப்பாளர்களாகப் பணியாற்றிய மொத்தம் 62 பேருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. ஆயினும், இதில் 40 பேருக்கு மட்டுமே 2013 ஆம் ஆண்டுநிரந்தர நியமனம் வழங்கப்பட்டது. மிகுதி 22 பேரின் பெயர்கள் நியமனப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதைத்தொடர்ந்து, இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாது பாதிக்கப்பட்ட 22 பேரும் தமக்கான நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி பல தரப்பினரிடமும் கோரிக்கை மனு முன்வைத்தனர். அதேநேரம், மனித உரிமை ஆணைக்குழுவிலும் முறைப்பாடு செய்தனர். இருந்தபோதிலும், இவர்களுக்கான நியமனம் இன்னமும் வழங்கப்படவில்லை.

இதேவேளை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அமைய அடிப்படையில் கடமையாற்றும் 34 சுகாதாரத் தொண்டர்களுக்குமான நியமனமணங்களை உடனடியாக வழங்கவேண்டும் என்று தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலி. வடக்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும் குறித்த வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் செயலாளருமான சி.ஹரிகரன் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இதற்குக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாவை. சேனாதிராசா, நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரிடம் 700 சுகாதாரத் தொண்டர்களின் பெயர்ப் பட்டியல் உள்ளது. அவர்களுடன் சேர்த்து இவர்களுக்கும் நியமனம் வழங்கலாம் என்று தெரிவித்தார்.

இடையில் குறுக்கிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.சிவாஜிலிங்கம், பின்னர் மிகுதி ஆட்களுக்கான நியமனத்தை வழங்கட்டும். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள 34 சுகாதாரத் தொண்டர்களுக்கும் உடனடியாக நியமனம் வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுங்கள் என்றார். இதுதொடர்பில் கருத்துத் தெரிவித்த இணைத்தலைவர்களுள் ஒருவரான இ. அங்கஜனும் சிவாஜிலிங்கத்தின் கருத்தை ஆமோதித்தார். இந்தத் தீர்மானம் சபையால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில், தமக்கான நியமனம் வழங்காது தம்மைத் தொடர்ந்து அனைவரும் புறக்கணித்து வருவதாக அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். ஆதலால், தமக்கான நியமனத்தை இனியும் காலம் தாழ்த்தாது உடனடியாக வழங்குவதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆவனசெய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.




## கும்பம்

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் கும்ப ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றி நேற்றைய உதயனில் பார்த்தோம். கும்ப ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**மே**

மாத முற்பாதியில் 3-ல் சூரியன் சஞ்சரிப்பதும், 7-ல் குரு 18-ஆம் தேதி முதல் வக்ரநிவர்த்தி அடைவதும் அற்புதமான அமைப்பாகும். உங்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகள் அனைத்தும் விலகும். எடுக்கும் முயற்சிகளில் எதிர்நீச்சல் போட்டாவது வெற்றி பெற முடியும். குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடந்து கொண்டால் நற்பலனைப் பெறமுடியும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் சுமாரான லாபத்தை அடை வீர்கள். உத்தியோகத்தர்களின் திறமைகள் பாராட்டப்படும்.

**ஜூன்**

சுக ஸ்தானமான 4-ல் சுக்கிரனும், சமசப்தம ஸ்தானமான 7-ல் குருவும் சஞ்சாரம் செய்வதால், பணவரவுகள் சிறப்பாக இருக்கும். சுபகாரிய முயற்சிகளில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். உற்றார்- உறவினர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிக்கும். உங்களுக்கு இருந்துவந்த பிரச்சினைகள் ஓரளவுக்கு குறைந்து முன்னேற்றமான நிலைகள் ஏற்படும். பணவரவுகள் தேவைக்கேற்றபடி அமையும். எடுக்கும் காரியங்களில் முழு முயற்சியுடன் பாடுபட்டால் வெற்றிகளைப் பெறமுடியும். பணவிடயத்தில் பிறருக்கு உத்தரவாதம் கொடுப்பதைத் தவிர்ப்பது உத்தமம்.

**ஜூலை**

சமசப்தம ஸ்தானமான 7-ல் குரு சஞ்சாரம் செய்வதும், மாத பிற்பாதியில் 6-ல் சூரியன் சஞ்சாரம் செய்ய விருப்பதும் அனுகூலமான அமைப்பாகும். உற்றார்- உறவினர்களின் ஆதரவுகள் மகிழ்ச்சியளிக்கும். தாராள தனவரவுகள் ஏற்பட்டு பொருளாதார நிலை உயர்வது மட்டுமின்றி எதிலும் முன்னேற்றங்களும் உயர்வுகளும் உண்டாகும். கடன்களும் குறைவடையும். கணவன்- மனைவியிடையே இருந்த கருத்துவேறுபாடுகள் மறையும்.

**ஓகஸ்ட்**

மாத முற்பாதியில் 6-ல் சூரியனும், 10-ல் செவ்வாயும் சஞ்சாரம் செய்வதும் அற்புதமான அமைப்பாகும். எடுக்கும் காரியங்களில் தடைகளுக்குப்பின் வெற்றிகிட்டும். பொருளாதார நிலையானது ஓரளவுக்கு சிறப்பாக இருந்தாலும் கொடுக்கல்- வாங்கல் விடயங்களில் சற்றுக் கவனத்துமுடன் நடப்பது நல்லது. முடிந்தவரை பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதுடன், உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடக்க பழகிக்கொண்டால் நற்பலன்களை அடையமுடியும்.

**செப்ரெம்பர்**

மாதக்கோளான சூரியன் 7, 8-ல் சஞ்சரிப்பதும், அஷ்டம ஸ்தானமான 8-ல் குரு சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளை உண்டாக்கும். எடுக்கும் காரியங்களில் தடை, தாமதங்கள் உண்டாகும். எதிலும் எதிர்நீச்சல் போடவேண்டிய நிலை ஏற்படும். பணவரவுகளில் ஏற்ற இறக்கமான நிலையே இருக்கும். குடும்பத்தில் நிம்மதி குறையும். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகத்தர்களுக்கு உயர்வுகள் கிடைக்கப் பெற்றாலும் உயரதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். எதிலும் சிந்தித்துச் செயற்படுவது நல்லது.

**ஒக்ரோபர்**

அஷ்டம ஸ்தானமான 8-ல் குரு, சூரியன் சஞ்சரிப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனத்துடனிருப்பது நல்லது. நெருங்கியவர்களிடையே தேவையற்ற வாக்குவாதங்கள் உண்டாகி ஒற்றுமை குறைவடையும். பணவரவுகளில் நெருக்கடிகள் நிலவும் என்பதால் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக்கொள்வதன்மூலம் வீண்விரயங்களைத் தவிர்க்கமுடியும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் புதிய முயற்சிகளில் கவனமாக இருப்பது நல்லது.

**நவம்பர்**

மாதக்கோளான சூரியன் 9-ல் சஞ்சரிப்பதும், விரய ஸ்தானமான 12-ல் செவ்வாய் சஞ்சரிப்பதும் சாதகமற்ற அமைப்பாகும். நீங்கள் எதிலும் கவனத்துடன் நடந்துகொள்வது நல்லது. குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகி மனநிம்மதி குறையும். எதிர்பாராத வீண் விரயங்களும் அதிகரிக்கும். பண வரவுகளிலும் பற்றாக்குறை ஏற்படும்.

**டிசெம்பர்**

அஷ்டம ஸ்தானமான 8-ல் குரு சஞ்சரிப்பது அனுகூலமற்ற அமைப்பு என்றாலும், மாதக்கோளான சூரியன் சாதகமாக 10, 11-ல் சஞ்சரிப்பதால், எதையும் சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் பாதிப்புக்கள் உண்டாகி மருத்துவச் செலவுகளை ஏற்படுத்தும். நெருங்கியவர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது. தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு வரவேண்டிய வாய்ப்புகளில் தடையிருக்காது. போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி பெறமுடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூர்வீக நிலங்களில் கால்பதிக்க காத்திருக்கும் இடம்பெயர்ந்த மக்கள்

செ.உமாசுதன்

தமிழர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வருகின்ற வடமாகாணத்தின் வளம் கொழிக்கும் வரப் பிர(தேசம்)சாதம் வலிகாமம்.முப்பது ஆண்டுகளாக வன்முறைகளின் சிறைகளுக்குள் சிக்கி வலி சுமக்கிறது.நீண்ட பரந்த பிரதேசங்களின் நிலைத்திருப்பும் அங்கிருந்த வளங்களின் செழிப்பும் தமிழர் தாயகத்தின் பொருளாதார தன்னிறைவையும் தாண்டி தென்னிலங்கைக்கும் நிறைவு தந்தன.உழைப்பின் உருவம் தந்த செம்மண் தரைகளும்,உழைப்பின் ஆழம் தேடிய கடல் வளங்களும் அன்னியப்பட்டு நிற்கின்றன.ஆக்கிரமிப்பு என்ற கொடிய ஆலகால விசங்களின் கண்காணிப்பினுள்ளும்,நன்முறையற்ற வன்முறைகளின் சுற்றிவளைப்பினுள்ளும் அடைபட்டு அல்லற்படுகின்றன.

1986 ஆம் ஆண்டுவரை நலமாக,வளமாக, பொருண்மியத்தில் தன்னிறைவாக, சொந்தங்களோடு கூடியிருந்து களித்த தாய்நிலங்கள் தன்னிலையிழந்தன.உறவுகள் அனைத்தும் அகதி முகம் சுமந்து , ஊர் ஊராய் சுற்றி வந்தன.வாழ்வாதாரங்கள், சொத்துக்கள், உடைமைகள் என அனைத்தையும் இழந்து தவித்தன. இறுதியில் குடிசைகளைக் குடியிருந்த கோவிலாய் எண்ணி வாழ்ந்துவருகின்றன. தாய் நிலத்தின் விடியலைத் தேடி,விடுதலை நாடி உறவுகளோடு கூடியிருக்கின்றனர்.

இராணுவ ஆக்கிரமிப்பில் இன்னமும் 6000 ஏக்கர் காணி சிறைப்பட்டுக் கிடக்கின்றது. 15 கிலோ மீற்றர் நீளமான கடல் வலயம் தன் உறவுகளின் தாலாட்டை யும், வாய்தனில் அவர்கள் உச்சரிக்கும் அழகிய இசைக் கோலங்களையும் தேடித் தவித்திருக்கின்றது.மயிலிட்டி,பலாலி, தையிட்டி, ஊரணி,காங்கேசன்துறை என சூழ்ந்திருக்கும் கிராமங்களில் விளைகின்ற மரவள்ளி, குரக்கன், சாமை, வெங்காயம் என மரக்கறி வகைகள் அனைத்துக்கும் தனிமரியாதை இருந்தது.மீன் வளங்களின் தனிச் சிறப்பிடமாக, பிறப்பிடமாக விளங்கியது. பொன் விளையும் பூமிகளாய் மிளிர்ந்தன. வாழ்வாதாரங்களின் உயர்விலும் பொருண்மியத்தின் வளர்ச்சியிலும் பெரும்பங்கை உவந்தளித்தன.இன்று அத்தனையும் கொத்தடிமையாய் கொடிய படைகளின் காலடிகளில் வளம் குன்றி காடுகளாய், வனாந்தரமாய் புதர்மண்டிக் கிடக்கின்றன.

இந்தப் பிரதேசங்களைப் பூர்வீகமாகக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் அனைவரும் எந்தவித அடிப்படை வசதிகளும் அற்ற நலன்புரி நிலையங்களில் அகதிகளாய் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர்.மல்லாகம் கோணற்புலம் முகாம்,நீதிவான் முகாம்,சுன்னாகம் சபாபதிப் பிள்ளை முகாம் என தங்களின் சொந்த முகங்களைத் தொலைத்து அகதி முகம் சுமந்து வலம்வருகின்றனர்.

ஐ.நா ஆணையாளரின் வருகையை எதிர்பார்த்து காத்து நின்றபோது முதுமையின் தளர்வோடு முகத்தில் ஓர் எதிர்பார்ப்பின் ஏக்கங்களோடு ஒருவர். கையில் ஏதோ என்வலப் கவர்.அதற்குள் தன் தாய் நிலம் விடுதலை பெற வேண்டும் என்ற வார்த்தைகளின் கோரிக்கைகளும் அசைந்து காத்திருக்க அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டிருந்தார்.ஓர் எதிர்பார்போடு ஐயா நான் பத்திரிகையாளன் என அறிமுகம் செய்ய,அப்படியோ என்று கேட்டவர் அங்கு நின்ற பூவரச மர நிழலில் சாய்ந்து கொண்டு தன் ஆதங்கங்கள் அனைத்தையும், அனுபவங்களின் பகிர்தலாய்,உணர்வுகளின் துடிதுடிப்பாய் வார்த்தைகளில் உதிர்த்துப் பெருமூச்செறிந்தார்.

86 களில் தான் தனது தாய் நிலத்தில் 35 வயது இளைஞனாக உலவிய கதைகளையும்,அந்தப் புண்ணிய பூமியின் வளச் சிறப்புக்களையும் ஆதங்கமாய் சொல்லி நடந்தார். தற்போது 66 வயதோடு முதுமையாய் தவழ்ந்து வலம்வரும் மயிலிட்டியின் சுதேசி கே.எஸ் நடராசா.

> இடம்பெயர்ந்து வந்து பிறகு 87 யூலை மாதம் இந்தியன் ஆமி வந்த பிறகு சொந்த இடத்துக்கு போய் சிறிது காலம் இருந்தம். பிறகு திருப்பி 90 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி மீண்டும் இடம்பெயர்ந்து வந்து எல்லா இடமும் ஓடித் திரிஞ்சு அகதி முகாம்களிலும் உறவுகளின் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறம். 25 வருடங்களாய் காத்துக் கிடக்கிறம். சொந்தத்தாய் நிலத்துக்கு இன்னமும் போக முடியேல்லை. ஏன் இந்தத் தலைவிதி எங்களுக்கு மட்டும்..?

எங்கடை ஆரம்பப் பள்ளிக்கூடம் சித்தி விநாயகர்.பிறகு வசாவிளான் மத்திய கல்லூரியில் படிச்சனாங்கள். 1960 களில் பலாலிக்கு ஆமி வந்தது. அப்ப எந்த ஒரு பாதுகாப்பு வேலியும்போடேல்லை விமான ஓடுபாதையை குறொஸ் பண்ணித்தான் பள் ளிக்கூடம் போறனாங்கள். பிளேன் வருகுதெண்டால் அங்க நிக்கிற வாச்சர் கெதியாய் ஓடிப்போங்கோ எண்டு சொல்லுவார். அந்த ஓடு பாதை முழுக்க எங்கடை பட்டி மாடுகளும் ஆடுகளும் மேச்சலுக்கு நிக்கும்.1972 ஆம் ஆண்டுவரைக்கும் விமான நிலையத்துக்கு ஓர் எல்லை போடேல்லை. அதுக்குப் பிறகு தான் ஓடு பாதையிலை இருந்து சுற்றிவர 50 மீற்றருக்கு எல்லை போட்டவங்கள். அதோடை ஒட்டியதாக எங்கடை குடிமனைகளும் தோட்டக் காணிகளும் இருந்தன. ஓடு பாதை மூன்றரைக்கிலோ மீற்றர் நீளமும் , இரண்டரைக் கிலோ மீற்றர் அகலமும் வரும். நான் நினைக்கிறன்,1943 களிலை இரண்டாம் உலக மகாயுத்தம் நடக்கேக்கை பிரிட்டன்காரர் போட்ட ஓடுபாதைதான். இந்தப் பகுதி எங்கடை தாய் தகப்பன் காலத்திலை நட்ட ஈடு கொடுத்து சுவீகரிச்சதுதான்.

1986 மார்ச் மாதம் மூன்றாம் திகதி.அப்ப எனக்கு 35 வயது.கலியாணம் முடிச்சு ஆறு மாதக் கைக்குழந்தையோடை இருந்தனான்.இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் பதறுது. அந்தக் குடும்பத்திலை நாலு பிள்ளையள். மூத்த பிள்ளைக்கு 16 வயது. விமானப் படை கெலி வந்து அடிச்சான். அந்தப் பிள்ளை அந்த இடத்திலேயே செத்துப் போச்சு.அந்தப் பொடியைத் தூக்கிக் கொண்டு வேற வீட்டை கொண்டு போய் வைச்சு சடங்குகளை நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்க திரும்ப வந்தவன் அடிச்சான். எல்லாரும் அந்த இடத்திலையே சாவடைஞ்சினம்.பிறகும் பதினேழு சூடு குறித்த இடத்திலை விழுந்தது. நாங்கள் தெய்வாதீனமாய்த்தப்பினம்.இடம்பெயர்ந்து வந்து பிறகு 87 யூலை மாதம் இந்தியன் ஆமி வந்தாங்கள். சொந்த இடத்துக்கு போய் சிறிது காலம் இருந்தம்.பிறகு திருப்பி 90 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி மீண்டும் இடம்பெயர்ந்து வந்து எல்லா இடமும் ஓடித்திரிஞ்சு அகதி முகாம்களிலும்,உறவுகளின் வீடுகளிலும்,வாடகை வீடுகளிலும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறம். 25 வருடங்களாய் காத்துக்கிடக்கிறம். சொந்தத்தாய் நிலத்துக்கு இன்னமும் போக முடியேல்லை. ஏன் இந்தத் தலைவிதி எங்களுக்கு மட்டும்..?

எங்கடை தோட்டங்கள் பொன் விளையும் பூமி.மயிலிட்டி பலாலியிலை தோட்டங்களிலை 1500 தக்காளிக் கண்டுகள் நடுவம்.இறாத்தல் 3 சதம் அல்லது 5 சதம் விற்றாலும் எங்கட ஒரு வருச வாழ்வாதாரத்துக்கு அந்த இலாபம் காணும்.வெங்காயம்,உருளைக்கிழங்கு,பீற்றூட்,கோவா, பச்சைமிளகாய்,செத்தல்மிளகாய் எண்டு எங்கடை தேவையைத் தாண்டி சிங்களப் பிரதேசங்களுக்கு போனது. பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்கை கொடுத்தவை,எங்கடை மீன்பிடியும் தோட்டமும் தான். இலங்கையின் பொருளாதார வளர்ச்சியிலை பெரும் பங்காற்றினது.

பெரிய றோலர் வைச்சு மயிலிட்டியிலை மீன்பிடித் தொழில் செய்தனாங்கள்.மாரி காலத்திலை நீலன் காடு துறைமுகத்துக்கு போய் அங்கை இருந்து தொழில் செய்வம்.சொந்தமாய் றோலர் வைச்சிருந்தனாங் கள்.அந்த நேரம் 250 இற்கும் மேற்பட்ட றோலர்கள் நிண்டது. இலங்கையிலை எங்கடை கடல் தான் ஆழிக்கடல்.மற்றக் கடல் எல்லாம் பெட்டைக் கடல். நாங்கள் றோலரிலை போய் மூன்று நாள் நாலு நாள் எண்டு படுத்திருந்து மீன் பிடிச்சனாங்கள்.நாங்கள் மெல்லிய நைலோன் கயிறிலை இரும்புக் குண்டைக் கட்டி ஆழம் பார்த்தம் எண்டால் 50 பாகம்,60 பாகம், 80 பாகம் எண்டு நீளும். பல சமயம் ஆழம் கண்டு கொள்ளமுடியாது.அதி கூடிய மீன் வளம் நிறைந்த கடல் பிரதேசம்.இது எங்களுக்கு உரித்தான எங்கடை கடல்வளம்.

கே.வி.துரைச்சாமி ஐஸ் பக்டரி,என்.எஸ்.ஆர் எண்டு சொல்லுற என்.சிவஞானரட்ணத்தின்ரை ஐஸ் பக்டரி, இராமசாமி ஐஸ் பக்டரி எண்டு மூன்று இருந்தன.ஒவ்வொரு நாளும் பத்துப்பதினைந்து லொறிகளில் மீன் தென்னிலங்கைக்குப்போனது. அங்கை இருந்து ஐஸ் கொண்டு வந்து மீன்களை பதமாக அனுப்பினனாங்கள்.இலங்கையின்ரை எல்லாப்பாகத்தின்ரை மீன் வளத்தோடை ஒப்பிட்டாலும் எங்கடை கடல் வளத்துக்கு எதுவும் நிகராக முடியாது. எல்லாற்றை வீடுகளிலையும் மூன்று நாலு மாடுகள் எண்டு நிண்டது.இதுதவிர பல பேரிட்டை நாற்பது ஐம்பது மாடுகள் எண்டு பட்டியாய் நின்றது.இப்படி எங்கடை தாய் நிலத்தின்ரை வளச் சிறப்புக்களையும் அதாலை வந்த வாழ்வாதார,சிறப்புப் பொருளாதார முன்னேற்றங்கள் பற்றி சொல்லிக்கொண்டே போகலாம்.ஆனால் எங்கடை எல்லா வளங்களும் அழிஞ்சு போச்சுது.நாங்கள் அன்றாடம் வாழ்வாதாரத்துக்கு கஷ்டப்பட்டுக் கொண்டு குடிசை வீடுகளிலை தினம் தினம் அல்லாடிக் கொண்டு திரியிறம். எங்கடை பிள்ளைகளின் எதிர்காலமும் இருள் சூழ்ந்ததாக மாறிவிட்டது. எங்கடை வாழ்வுக்கு ஒளி தருவது யார்.?என்று தனது ஆதங்கத்தை அவர் கொட்டித்தீர்த்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசை பெருநட்டம்



கண்ணன் ஒரு ஏழை விவசாயி. அவனுக்குச் சிறிதளவே நிலம் இருந்தது. அதில் பாடுபட்டுப் பயிர் வளர்த்து தனது வாழ்க்கையை ஓட்டினான். அவன் மிகவும் நல்ல மனம் படைத்தவன். எதற்கும் பேராசைப்படாதவன். எந்த வம்பு தும்புக்கும் போகாதவன்.

ஒருநாள் நிலத்தை உழுது கொண்டிருந்தான் கண்ணன்.

அப்பொழுது அவன் எதிரே வானத்தில் பறந்து கொண்டிருந்த ஒரு கொக்கு தொப்பென்று நிலத்தில் விழுந்து துடித்தது.

அதைக் கண்டு பதறிப் போன கண்ணன் கலப்பையை அப்படியே போட்டு விட்டு அந்தக் கொக்கின் அருகில் ஓடினான்.

கொக்கின் உடல் முழுக்க இரத்தம். அதன் வயிற்றில் ஓர் அம்பு பாய்ந்திருந்தது.'

கண்ணன் நிலத்தில் செய்து கொண்டிருந்த வேலையை அப்படியே போட்டு விட்டு அந்தக் கொக்கை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

அவனும் அவன் மனைவி மதியும் அந்தக் கொக்கின் மேல் பாய்ந்திருந்த அப்பைப் பிடுங்கி எடுத்துவிட்டு இரத்தத்தைத் துடைத்து சுத்தம் செய்தனர். தங்களுக்குத் தெரிந்த சில மூலிகைச் செடிகளைப் பறித்து சாறெடுத்து அதன் காயத்தில் தடவிக் கட்டுப் போட்டனர்.

சிறு நேரத்தில் அந்தக் கொக்கு மயக்கம் நீங்கிப் புத்துணர்வு பெற்றது.

கண்ணன் அதற்கு சில கருவாடுகளை உணவாகக் கொடுத்தான். அவற்றை விரும்பிச் சாப்பிட்டது கொக்கு.

தொடர்ந்து வந்த நாள்களில் அதற்கு அவர்கள் சிகிச்சை செய்து உணவளித்து நல்லவிதமாகப் பராமரிக்க கொக்கு பூரண நலம்பெற்றது.

"கொக்கே! ஏதோ எங்களால் முடிந்த உதவிகளைச் செய்தோம். நீ இங்கு இருப்பதானாலும் இருக்கலாம். அல்லது உன் இனத்தோடு போய்ச்சேர்ந்து கொள்ள விரும்பினாலும் தாராளமாகச் செல்லலாம்!" என்றான் கண்ணன்.

கொக்கு கண்ணன் தம்பதியரை நன்றியுடன் நோக்கிவிட்டு அந்த இடத்தை விட்டுப் பறந்து சென்றது. தொடர்ந்துகண்ணன் தன் விவசாய வேலை யில் இறங்கினான்.

நிலத்தை நன்கு உழுதான். விதை விதைக்கும் தறுவாயில் அந்தக் கொக்கு மறுபடி அவனது நிலத்தின் மேல் பறந்து வந்தது. அவன் கண்முன்னே மூன்று விதைகளைப்போட்டு விட்டுத் தொடர்ந்து பறந்து சென்றது. கண்ணன் ஓடிச் சென்று அந்த விதைகளை எடுத்தான்.

"இவை நிச்சயம் நல்ல விதைகளாக இருக்கும். இவற்றை நிலத்தின் ஒரு மூலையில் விதைப்போம்" என்று நினைத்த கண்ணன் நிலத்தின் மூலையில் அந்த விதைகளை விதைத்தான்.

பின்னர் அவற்றுக்கு நீர் பாய்ச்சி மிகுந்த அக்கறையுடன் கவனித்து வந்தான்.

விதைகள் முளைத்துச் செழிப்பாக வளர்ந்தன. நாளடைவில் முலாம் பழங்கள் அந்த மரங்களில் காய்ந்துக் குலுங்கின.

கண்ணன் அவற்றில் மூன்று பெரிய முலாம் பழங்களை மட்டும் பறித்து மிகுந்த சிரமத்துடன் தூக்கிக்கொண்டுவீட்டுக்குப்போனான்.

அந்த மகிழ்ச்சியைக் கொண்டாட நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு கண்ணனும் மனைவியும் அழைப்பு விடுத்தனர்.

கொண்டாட்டத்தின்போது முதலில் முலாம் பழங்களை அறுத்து விருந்து படைக்க நினைத்தான். ஒரு கத்தியை எடுத்து ஒருபழத்தை அறுத்தான். அதன் தோல் மிகவும் கடினமாக இருந்ததால் அது அறுபடவில்லை.

"இதென்ன பழமோ? கத்தியால் ஓங்கி ஒரு போடு போடுங்கள்!" என்றாள் மனைவி மதி.

கண்ணன் தன் பலத்தையெல்லாம் ஒன்று திரட்டிகத்தியால்பழத்தை ஓங்கிவெட்டினான். ஒரே வெட்டில் பழம் இரண்டாகப் பிளக்க அதனுள்ளே சாறுக்குப் பதில் தங்க நாணயங்கள் குவிந்து இருந்தன.

கண்ணன் தம்பதியருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்துக்கு அளவே இல்லை.

அந்தத்தங்கநாணயங்களைத் தாங்கள் மட்டும் வைத்துக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை. விருந்துக்கு வந்திருந்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தனர்.

அவர்களது நல்ல மனதுக்கு முலாம்பழங்கள்நிறையவிளைய அவை அனைத்திலும் தங்கக் காசுகள் இருந் தன. இத னால் விரைவிலேயே மிகப் பெரிய கோடீஸ்வரர்களாகி விட்டனர்.

இதைப் பார்த்தான் பக்கத்து வீட்டு லட்சாதிபதியான சீலன்.

"நேற்று வரை பரதேசியாய் இருந்தகண்ணன் இன்று கோடீஸ்வரனாக ஆகிவிட்டானே. எப்படி? என எண்ணி ஒருநாள் கண்ணனிடம்சென்று அன்பொழுகப்பேசி கண்ணன் கோடீஸ்வரன் ஆன விடயத்தைக் கறந்துவிட்டான். அவன் பெரிய பேராசைக்காரன். வசதியில் தன்னை எவரும் மிஞ்சிவிடக்கூடாதுஎன்றுநினைப்பவன்.

அந்தக் கொக்கு வரும் நாளை நன்றாக கவனித்து கண்ணனின் நிலத்தின் அருகே இருக்கும் தனது நிலத்துக்குப் போனான்.

அப்போது அந்தக் கொக்கு பறந்து வருவதைக் கண்டான். உடனே கையோடு கொண்டு போயிருந்த வில்லை எடுத்து அவசரமாக அம்பைத் தொடுத்தான். கொக்கைக் குறிவைத்து அம்பை எய்தான்.

பறந்து சென்ற அம்பு கொக்கின் உடம்பைத் துளைக்க அது துடிதுடித்து அவனது நிலத்தில் விழுந்தது.

அதைத் தன் வீட்டுக்குக் கொண்டுவந்த சீலன் உயர்தர மருந்துகளை அதன் காயத்தில் வைத்துக் கட்டினான். அதன் காயம் குணமாகும் வரை அதை நன்கு கவனித்தான். கொக்குக்குப் பூரண குணமாயிற்று.

"கொக்கே! யாரோ ஒரு படுபாவி உன் மீது அம்மை எய்துவிட்டான். நல்ல வேளை நான் அன்று என் நிலத்தில் இருந்தேன். இல்லாவிட்டால் பாவம் நீ இறந்திருப்பாய். உன்னை அவசரமாய் இங்கு கொண்டு வந்து உயர்தர சிகிச்சை செய் தேன். இப்போது உடல்பூரண குணமடைந்துவிட்டது. நீ இங்கு இருந்தாலும் இருக்கலாம். அல்லது உன் இனத்தோடு போய்ச் சேர்வதானாலும் சேரலாம். உன் விருப்பம் எதுவோ அதன்படி செய்!" என்று கண் ணன் பேசியது போலவே கொக்கிடம் பேசினான்.

கொக்கு அவனை ஒரு பார்வை பார்த்து விட்டு 'விருட்'டென்று எழும்பிப் பறந்தது.

சீலன் தனது நிலத்தை அவசரமாய் உழுதான். விதை விதைக்கப் போகும் நாளில் கொக்கு வருகிறதா என்று வானத் தையே ஆவலுடன் பார்த்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே அந்தக் கொக்கு பறந்துவந்து மூன்று முலாம் பழவிதைகளைப் போட்டுவிட்டு அப்படியே பறந்து சென்றது. சீலன் அந்த விதைகளைத் தனது நிலத்தின் ஒரு மூலையில் விதைத்தான். அந்த விதைகளைப் பாதுகாத்தான்.

முலாம்பழக்கொடி படர்ந்து, வளர்ந்து முலாம் பழங்கள் விளைந்தன. பெரிதாக விளைந்த மூன்று பழங்களை மட்டும் எடுத்துக் கொண்டுவிட்டுக்குப்போனான். மனைவி மேனகா பேரானந்தம் கொண்டாள்.

பழங்களை உடனே வெட்டச் சொன்ன மனைவியிடம் "அவசரப்படாதே! நம் உறவினர்களையும் நண்பர்களையும் விருந்துக்கு அழைத்துத்தான் இந்தப் பழங்களைவெட்ட வேண்டும். ஒரு பழத்தில் இருக்கும் நாணயங்களை மட்டும் அவர்களுக்குப் பகிர்ந்துகொடுக்க வேண்டும். கண்ணன் இப்படித்தான் செய்துள்ளான்" என்றான்.

ஒரு பழத்தில் உள்ள அத்தனை தங்கக் காசுகளையும் தானம் பண்ணவா போகிறீர்கள்? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். முதலில் பழத்தை வெட்டுங்கள் என்று பரபரத்தாள் மேனகா.

'சரி' என்று சொன்ன சீலன் கத்தியை எடுத்துப் பழத்தை வெட்டினான்.

பழம் இரண்டாகப் பிளக்க உள்ளிருந்து ஏராளமான தேனீக்கள் குபீரென்று தாவிப் பறந்தன. "ஐயோ! இதென்ன கொடுமை! தங்க நாணயங்கள் இருக்கும் என்று பார்த்தால் தேனீக்கள் வருகின்றனவே எனச் சீலன் எண்ணினான் இதுபோகட்டும். மற்றப் பழத்தை வெட்டுங்கள்" என்று கத்தினாள் மேனகா. சீலன் இரண்டாவது பழத்தை வெட்ட அதிலிருந்தும்தேனீக்கள் தான் வெளிவந்தன. இறுதியில் மூன்றாவதுபழத்தையும்வெட்ட அதிலும்தேனீக்கள்.

மூன்று பழங்களிலிருந்தும் வெளிவந்த ஆயிரக் கணக்கான தேனீக்கள் விரட்டி விரட்டிக்கொட்ட அவர்கள் அலறி அடித்துக் கொண்டு வீட்டை விட்டுவெளியே ஓடினர். தேனீக்கள் அவர்களை விடவே இல்லை. விரட்டிவிரட்டிக்கொட்டின. இருவர் உடம்பிலும் விசம் பரவியது.

"ஐயோ பெரிய தவறு செய்து விட்டோம். இனிமேல் பேராசைப்பட்டு எந்தத் தவறையும்செய்யமாட்டோம். எங்களைவிட்டுவிடுங்கள்... எங்களை விட்டு விடுங்கள்!" என்று கதறியபடியே சீலனும் அவனது மனைவி மேனகாகவும் மயங்கி விழுந்தனர்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1322 - ஈலி மாதா கோவில் மைய கோபுரம் 12 -13ஆம் திகதி இரவு இடிந்து வீழ்ந்தது.
1462 - வெஸ்மினிஸ்டர் ஒப்பந்தம் இங்கிலாந்தின் நான்காம் எட்வேட் மற்றும் ஸ்கொட்லாந்து பிரவு ஐசில் ஆசியோரிடையே பூர்த்தி செய்யப்பட்டது.
1542 - எட்டாம் ஹென்றியின் ஐந்தாவது மனைவி கதரீன் ஹவார்ட், விபசாரக் குற்றச்சாட்டில் சாவுத் தண்டனைக்கு உள்ளானார்.
1689 - வில்லியம் மற்றும் மேரி இங்கிலாந்தின் இணைந்த ஆட்சியாளர்களாகத் தம்மை அதிகாரபூர்வமாக அறிவித்தனர்.
1880 - எடிசன் விளைவை, தோமஸ் அல்வா எடிசன் கண்டுபிடித்தார்.
1913 - 13 ஆவது தலாய்லாமா திபெத்துக்கான சுதந்திரத்தை அறிவித்தார்.
1920 - நீக்ரோ தேசிய சங்கம் உருவாக்கப்பட்டது.
1931 - பிரிட்டிஷ் ஆட்சியின் தலைநகரானது புதுடில்லி.
1934 - சோவியத் நீராவிக் கப்பல் செலிஸ்கின் ஆக்டிக் கடலில் மூழ்கியது.
1960 - 'ஜெர் பொய்ஸ் புளு" எனும் குறியீட்டுப் பெயருடனான வெற்றிகரமான அணுச்சோதனை மூலம் பிரான்ஸ் அணு ஆயுதம் கொண்ட நான்காவது நாடாகியது.
1967 - ஸ்பெயின் தேசிய நூலகத்தில் லியானார்டோ டாவின்சியின் 'மட்றிஸ் கொடைசெஸ்" படைப்பை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர்.
1971 - அமெரிக்காவின் ஆகாய மார்க்க மற்றும் ஆட்லறி தாக்குதல் உதவியுடன் தென் வியட்நாம் படைகள் லாவோஸில் உள் நுழைந்தன.
1983 - இத்தாலியில் சினிமா அரங்கு தீ விபத்தில் எரிந்து 64பேர் சாவு.
1984 - யூரி அன்ட்ரோபோவின் மரணத்தையடுத்து கொன்ஸ்ரணின் செர்னான்லோ சோவியத் ஒன்றிய பொதுச்செயலாளர் ஆனார்.
1990 - ஜேர்மன் மீள் இணைவு. ஜேர்மனியை ஒன்றிணைப்பதற்கான இரண்டு கட்ட ஒப்பந்தம் எட்டப்பட்டது.
2014 - [illegible]கைச் சுதந்திரச் சுட்டியில் 165 ஆவது இடத்தில் இலங்கை எனச் சுட்டிக்காட்டு.
2014 - பிரிட்டனும் பிரான்ஸும் தனது மகள்மார் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு.

## வர்ணம் தீட்டுவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.நற்குணலிங்கம், நெல்லியடி

# மதுவை ஒழிப்போம் மனித குலத்தைக் காப்போம்

எமது இளைஞர்கள் நவீன கலா சாரங்களால் மூளைச் சலவை செய்யப்பட்டுத் தமது பாரம்பரியகுடும்ப, சமூக, கலாசார விழுமியங்களை மறந்து வாழ முற்படுகிறார்கள். இவர்கள் ஒரே வீட்டில் இருக்கிறார்களே தவிர இரண்டு வாழ்க்கை வாழ்பவர்கள். இவர்கள் மது அருந்துவது, நண்பர்களுடன் குடித்துக் கும்மாளம் போடுவது போன்றவற்றை நாகரிகமாகக் கருதுகிறார்கள். நண்பர்களுடன் சேர்ந்து குடிப்பதைச் சிலர் பெருமையாகவும் எண்ணுகிறார்கள். சில நண்பர்களின் தூண்டுதல், சமவயதுக் குழுவினர்களின் அழுத்தம் காரணமாக மது அருந்த ஆரம்பிக்கிறார்கள்.

சமுதாயத்தின் முதுகெலும்பான இளைஞர்கள் இதன் விளைவாகத் தலைகீழாக நடக்கிறார்கள்.



மதுவைத் தொடாதே! அது பாரதூரமான விளைவுகளை தோற்றுவித்துக் கொண்டிருக்கும். மது ஆண், பெண் பேதமின்றி இருபாலாரையும் ஆட்கொள்ளக் கூடியது. அவர்களது நடவடிக்கைகள் வித்தியாசமாக இருக்கும். சோம்பியிருப்பார்கள், பசியிருக்காது. குற்றவுணர்வு முகத்தில் காட்சி தரும். எது வேண்டுமானாலும் செய்யத் துணிவார்கள், வீட்டிலே திருடுவார்கள், தெரிந்தவர்களிடம் கடன் கேட்பார்கள், மதுப் பாவனை தீய வழிகளில் செல்ல ஊக்குவிக்கும், மனச்சாட்சியை அழிக்கும், பார்வை மங்கும், தன்னால் எல்லாம் முடியும் என்று சவால் விடுதல், உச்சரிப்பில் தெளிவின்மை காணப்படும். மது அருந்துவதால் தாம் நேசிக்கும் மனைவி, பிள்ளைகளை மற்றும் பெற்றோரைத் துச்சமாகக் கருதுவார்கள். தமது உறவுகளை மறந்து சொத்துச் சுகங்களை இழந்து காணப்படுவர். பொதுவாக மதுபானம் அருந்தும் தவறான பழக்கத்தை உடையவர்களால் சமூகத்தில் இன்று பல்வேறு பிரச்சினைகள் தலைவிரித்து ஆடுவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

ஒருவன் அருந்தும் மதுவில் 10 வீதம் தான் சுவாசிப்பதன் மூலமும், வியர்வை மூலமும், சிறுநீர் கழிப்பதன் மூலமும் வெளியேற மிகுதி 90வீதமும் இரத்தத்துடன் இரண்டு மணித்தியாலத்துள் கலக்கின்றது. மதுபானம் மூலம் ஏற்படும் ஈரல் கரையும் "சிரோசிஸ்" எனும் நோய் ஏற்பட்டுப் பலர் இறக்கிறார்கள். பலர் மனநோய்க்கு உள்ளாகிறார்கள். மது அருந்துவதால் பல இழையங்கள், அங்கங்கள், உடல் தொழிற்பாடுகள் பாதிப்படைகின்றன. உணவுக் கால்வாய்த்தொகுதி, இதயச் சுற்றோட்டத் தொகுதி, நரம்புத் தொகுதி, சுவாசத் தொகுதி என்பவை பாதிப்படைவதுடன் உயர்குருதி அழுத்தம், வலிப்பு, வாந்தி, தலைவலி என்பனவும் ஏற்படுகின்றன. போதையற்ற வேளையில் இது பற்றி மனதில் பதியுங்கள். மனிதகுலம் சிறக்கும்.

யாழ்.மாவட்டத்தில் கல்வி பயிலும் மாணவர்கள்கூட அதிக எண்ணிக்கையில் பியர் பாவனையில் ஈடுபடுகின்றனர். பியரைப் பாவிப்பது ஒரு குடியல்ல. அதனால் பாதிப்பில்லை எனக்கருதிப் பலரும் குடிக்கின்றார்கள். அண்மைக்கால ஆய்வின்படி பியர் பாவிக்கத் தொடங்கி 20 வருடங்களின் பின்னர் பலர் நீரிழிவு நோயாளிகளாகக் காணப்படுவர் எனக் கூறப்படுகின்றது. எனவே இளைஞர்கள் இதனையும் தங்கள் கருத்தில் எடுப்பது நல்லது. இன்று இளம் பெண்களும் மதுப் பாவனையில் ஈடுபடுவதால் தாய்மையடையும் புனிதத் தன்மையையும் இழக்க நேரிடுகிறது.

மதுப்பாவனையால் எத்தனையோ குடும்பங்கள் நிம்மதியற்ற வாழ்க்கை வாழ்கின்றன. கணவன் வரப்போகிறார் எனில் அந்த நேரத்தை எவ்வாறு சமாளிப்பது என்பது பெரிய சவால். தன்னை மறந்த நிலையில் மனைவியை, பிள்ளைகளை சொல்லாலும் செயலாலும் தாக்குவது. இது குடும்பப் பிணக்கைத் தோற்றுவித்து குடும்ப வன்முறையில் முடியும். இவற்றின் இறுதி வடிவங்களாக குடும்பப் பிரிவு, பிள்ளைகள் கெடுவதற்கான சாத்தியங்கள், பிள்ளைகள் தந்தையைத் தாக்க முனைதல், பிள்ளைகளது கல்வி பாதிப்படைதல், தற்கொலை, கொலை என்பன தோற்றம் பெறும். இவை வாழ்க்கைக்கு தேவைதானா? நன்றாகச் சிந்தியுங்கள். சில வீடுகளுக்கு பிள்ளையின் போதை குறித்த பெற்றோர் கண்காணிப்பு அவசியம். சில வீடுகளில் தந்தையின் போதை குறித்தும் பிள்ளையின் கண்காணிப்பு அவசியம். சில வீடுகளில் தந்தையினதும் பிள்ளையினதும் போதை குறித்து தாயின் கண்காணிப்பு அவசியமாகின்றது. சில வீடுகளுக்கு இதுபோன்ற கண்காணிப்புக் கமரா தேவையற்றதாகும். இதில் எந்த வீட்டில் நீங்கள் வாழ்கிறீர்கள்? அது எந்த அளவுக்கு மகிழ்ச்சியை, சோகத்தைத் தருகின்றது எனச் சற்று எண்ணிப் பார்த்துத் திருந்துங்கள்-திருத் துங்கள்.

மதுப்பாவனையில் வடமாகாண மக்கள் எந்தளவுக்கு முன்னேறியுள்ளனர் என்பதை கடந்த வருடம் ஜனாதிபதியின் பேச்சிலிருந்து அறிய முடிகின்றது. மதுப்பாவனை மூலம் வடக்கிலிருந்தே அரசுக்கு அதிக வருமானம் கிடைத்ததாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இதனை இந்த வருடம் தக்கவைக்க எந்த முயற்சியிலும் ஈடுபட வேண்டாம். மனிதப் பண்புள்ள சமூகமொன்றை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது.

# பசித்தோருக்கு உணவு இடுங்கள்

"பசித்தோருக்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும், தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்துக்கு அழைத்து வருவதும், உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்கக்கொடுப்பதும், உங்கள் இனத்தாருக்கு உங்களை மறைத்துக் கொள்ளாதிருப்பது மன்றோ நான் விரும்பம் நோன்பு" (எசா 58;7)

உண்மையான நோன்பு அகம், புற மெனும் இரு தன்மையுடையதாக இருக்க வேண்டும். சொல்லும் செயலும் ஒருமித்துச் செல்வதாய் இருக்க வேண்டும். நானும் அடுத்தவரும் இணக்கப்படுவதாய் இருக்க வேண்டும்.




உண்ணாமல், குடிக்காமல், உடலை ஒடுக்கி, அனைத்துத் தவக்காலப் பக்தி முயற்சிகளையும் மேற்கொள்வதுடன் நின்றுவிட்டால், நோன்பு முழுமை பெறாது. இவற்றோடு கூட நல்ல சமாரியனைப் போல தேவையில் உள்ளவர்களை விரும்பித் தேடிச் சென்று இருப்பதைப் பகிர்வதில் தான் கடவுள் விரும்பும் நோன்பு அர்த்தம், ஆழம் பெறுகின்றது.

புனித அந்தோனியார் ஆலயம், வவுனியா

# நாடாளுமன்ற புனிதத் தன்மை அற்றுப்போகும் அவல நிலை

பொது எதிரணி என்ற அந்தஸ்துடன் நாடாளுமன்றத்தில் செயற்படுவதற்கு இடமளிக்குமாறும், அங்கீகாரம் வழங்குமாறும் மகிந்த அணி போராட்டங்களை முன்னெடுத்து வருகிறது. ஜனாதிபதிப் பதவிக்காகவும், பிரதமர் பதவிக்காகவும், எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்காகவும் இவர்கள் நடத்திய போராட்டங்கள் அனைத்தும் தோல்வியடைந்த நிலையில் தற்பொழுது பொது எதிரணி என்ற அந்தஸ்துடன் நாடாளுமன்றத்தில் செயற்படுவதற்கான அங்கீகாரத்தைக் கோரிப் போராட்டதை ஆரம்பித்திருக்கிறார்கள். இதிலும் இவர்கள் மண்கௌவுவார்கள் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், ஒரு நாடாளுமன்றத்தில் இரண்டு எதிர்க்கட்சிகள் இருக்கமுடியாது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெளிவுபடுத்தி விட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோட்டைவிட்டவர்கள் தற்பொழுது பொது எதிரணியாகச் செயற்படுவதற்கான அங்கீகாரத்தைக் கோருவதில் உள்நோக்கம் இருக்கலாம். சம்பந்தன் வகிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு இவர்கள் மீண்டும் உரிமைகோர முயலலாம். இதற்காக இவர்கள் தற்பொழுது கையிலெடுத்துள்ள ஆயுதம் படுகேவலமானது; மோசமானது. செங்கோலைத் தூக்கிச் சென்று நாடாளுமன்ற அமர்வைக் குழப்புவதற்கு இவர்கள் போட்ட திட்டம் கடந்த செவ்வாயன்று முறியடிக்கப்பட்டுள்ளது. எனினும், நாடாளுமன்ற அமர்வின்போது சபாபீடத்தைச் சூழ்ந்து கொண்டு கூச்சலிட்டும், ஊளையிட்டும் இவர்கள் நடத்திய அட்டகாசம் இந்த நாட்டு மக்கள் அனைவரையும் வெட்கித் தலைகுனிய வைக்கிறது. இவர்கள்தான் மக்கள் பிரதிநிதிகளா என்ற கேள்வியை எழுப்புகிறது.

நாட்டு மக்களுக்கு, எதிர்காலச் சந்ததிக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டியவர்கள் தமது நடத்தை மூலம் பயங்கரவாதிகள் போன்று செயற்பட்டுள்ளனர். இதில் குறிப்பிடத்தக்க விடயம், கடந்த காலங்களில் கண்ணியமான மனிதர்களாகக் கருதப்பட்ட பழம்பெரும் அரசியல்வாதிகளும் இந்தக் கூட்டத்தில் இணைந்து கொண்டு கூச்சலிட்டதுதான்.

இந்த விடயம் இத்துடன் முடிந்துபோன காரியம் அல்ல. அரசியலில் வங்குரோத்து நிலையில் உள்ளவர்களுக்கு இருக்கும் கடைசித் துரும்புகளில் ஒன்றுதான் சபை அமர்வுகளைக் குழப்புவது. நாடாளுமன்ற வரலாற்றில் இடம் பெற்றிராதவாறு இவர்கள் நடந்து கொண்டுள்ளனர். உண்மையில் இது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் உள்வீட்டு விவகாரம். மகிந்த அணியிலுள்ள 51 பேரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்களே. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிதான் தீர்மானிக்க வேண்டும். சபையில் போராட்டம் நடத்துவது பிரச்சினைக்குத் தீர்வாகாது.




ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக நிமல் சிறிபால டி சில்வா இருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இரு பிரிவுகள் இல்லை என்று அவர் விளக்கமளித்துள்ளார். ஆகவே, மகிந்த ஆதரவு அணியினர் தமது அடாவடித்தனங்களைக் கைவிட்டு பிரதமருடன் பேச்சு நடத்தி இணக்கம் ஒன்றுக்கு வர வேண்டும். நாட்டின் அதிஉயர்பீடமான நாடாளுமன்றத்தில் மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் அநாகரிகமாக நடந்துகொள்வது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகவே கிடைக்கும். சகோதர வகையில் மனத் தாங்கல் வரும். வியாபாரத்தில் பழைய வருமதிகளை நயமாகப் பேசி வசூலிக்கப் பாருங்கள்.

**இடபம்:** எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். மற்றவர்களுக்காகச் சில பொறுப்புக்களை ஏற்பீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும்.

**கடகம்:** உங்கள் பிடிவாதப்போக்கைக் கொஞ்சம் மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரத்தில் கூடுதல் இலாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவுக் கிட்டும். திடீர்த் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**சிங்கம்:** சந்திராஷ்டமம் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத் தூக்கும். முன்கோபத்தைத் தவிர்க்கப் பாருங்கள். புது முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைகழிக்கப்படுவீர்கள்.

**கன்னி:** சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. புதுமுகவர் பொறுப்பை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**விருச்சிகம்:** குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள். அக்கம்-பக்க வீட்டாரின் ஆதரவுப் பெருகும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் கைகூடும்.

**தனுசு:** பழைய பிரச்சினைக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். மகளுக்கு நல்லவரன் அமையும். பணப்பற்றாக்குறையைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள்.

**மகரம்:** தன்னிச்சையாக சில முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் உறவினர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாள்களை மாற்றுவீர்கள்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். தோற்றப் பொலிவு கூடும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. மனசாட்சியின் படி செயற்படும் நாள்.

**மீனம்:** ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது கொஞ்சம் பதற்றம் ஆவீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களால் மறைமுகப் பிரச்சினைகள் வரும்.

## அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால்...





இரண்டு தூக்கணாங்குருவிகள் ஒரு கூடு கட்டி, அதில் வசித்து வந்தன. ஒருநாள், இரை தேட அவை இரண்டும் வெளியே போயிருந்த சமயத்தில், ஒரு சிட்டுக்குருவி பறந்து வந்து தூக்கணாங்குருவியின் கூட்டுக்குள் நுழைந்து கொண்டது.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒரு தூக்கணாங்குருவி பறந்து வந்தது. கூட்டுக்குள் தலையை நுழைத்தது. கூட்டுக்குள் சிட்டுக்குருவி இருப்பதைப் பார்த்துவிட்டு, "குருவி அக்கா. எங்கள் வீட்டில் நுழைந்து எனக்கு இடமில்லாமல் பண்ணிவிட்டாயே. தயவு செய்து வெளியே போய்விடு" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டது.

"போடி போ. உன்னால் முடிந்ததை பார்த்துக்கொள். இனிமேல் இது எனது வீடு. நான் இதை விட்டுப் போகமாட்டேன்" என்று குருவி மறுத்து விட்டது.

தூக்கணாங்குருவி அங்கிருந்து வருத்தத்துடனும், யோசனையுடனும் பறந்து போனது.

சிட்டுக்குருவி, கூட்டில் மகிழ்ச்சியாக உட்கார்ந்து "அப்படிப்போடு..........அப்படிப் போடு" என்று ஜாலியாகக் பாடிக் கொண்டிருந்தது.

திடீரென்று தூக்கணாங்குருவிகளின் கூட்டம் பறந்து வந்தது. ஒவ்வொன்றும் ஈரமண்ணை அலகில் கொத்தி வந்து, கூட்டின் வாசலைக் கொஞ்சம் கொஞ்சமாக அடைத்துப் பூசின. கூட்டின் வாசல் குறுகிக் கொண்டே போனது.

முதலில் சிட்டுக்குருவியின் கழுத்து, அப்புறம் தலைமட்டும், கடைசியாக அலகு என்று தெரிந்துகொண்டே வந்து, கடைசியில் ஒன்றுமே தெரியவில்லை. தூக்கணாங்குருவிகள், சிட்டுக்குருவியைக் கூட்டுக்குள் வைத்து ஒரேயடியாக அடைத்துப் பூசிவிட்டுப் பறந்து போயின.

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்பட்டால் இதுதான் கதி. அப்போது தான் அதை உணர்ந்த சிட்டுக்குருவி, அந்தக் கூட்டுக்குள்ளேயே மூச்சடைத்து சாவடைந்தது.

பழகத்தில் பிடித்தது

## விஜய் ஜோடியானார் கீர்த்தி சுரேஷ்



"தெறி" படத்துக்குப் பிறகு விஜய் நடிக்கும் படத்தை விஜயா புரடெக்ஷன் தயாரிக்கிறது. இதை "அழகிய தமிழ்மகன்" பரதன் இயக்குகிறார். சந்தோஷ் நாராயணன் இசை அமைக் கிறார். இதில் விஜய் ஜோடியாக, காஜல் அகர்வால் நடிப்பார் என்று கூறப்பட்டது. விஜய்யுடன் அவர் மூன்றாவது முறையாக ஜோடி சேர்கிறார் என்றும் தகவல்கள் வெளியாகின. இப்போது அவருக்குப் பதில் கீர்த்தி சுரேஷ் ஒப்பந்தமாகியுள்ளார். படத்தில் ஒரு ஹீரோயின்தான் இருக்கிறார் என்றும் மே மாதம் படப்பிடிப்புத் தொடங்குகிறது என்றும் படக் குழு தெரிவித்தது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 4 | | | 6 | 7 |
| | | | | | 5 | 2 | | |
| 1 | 2 | | | 3 | | 8 | 4 | |
| 7 | | 2 | | | 9 | | | |
| 8 | | | | 5 | | | | 4 |
| | | | 4 | | | 9 | | 1 |
| | 8 | 1 | | 7 | | | 3 | 2 |
| | | 5 | 2 | | | | | |
| 2 | 3 | | | 9 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 8 | 6 | 7 | 2 | 9 | 1 | 3 | 4 |
| 9 | 4 | 2 | 3 | 6 | 1 | 8 | 7 | 5 |
| 7 | 1 | 3 | 5 | 4 | 8 | 2 | 9 | 6 |
| 6 | 3 | 8 | 4 | 7 | 2 | 9 | 5 | 1 |
| 2 | 7 | 1 | 9 | 5 | 6 | 3 | 4 | 8 |
| 4 | 5 | 9 | 8 | 1 | 3 | 7 | 6 | 2 |
| 3 | 9 | 4 | 1 | 8 | 5 | 6 | 2 | 7 |
| 8 | 2 | 5 | 6 | 3 | 7 | 4 | 1 | 9 |
| 1 | 6 | 7 | 2 | 9 | 4 | 5 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

அதீத கோபத்தில் அமைதியாக இருக்கத் தெரிந்தவர்கள் பாக்கியசாலிகள். ஏனையவர் மன்னிப்புக் கேட்க பழகிவிட்டால் நன்று.

புரிந்து கொள்ளக்கூடிய காதலனோ? காதலியோ? கிடைத்தவர்களுக்கு சொர்க்கம், அது அமையாதவர்களுக்கு வாழும் காலத்திலேயே நரகம்



பணம் சம்பாதிப்பது ரொம்ப கஷ்டம்
ஆனா அதை விட ரொம்ப கஷ்டம்.
சம்பாரிச்ச பணத்தை அடுத்தவன் கிட்ட ஏமாறாம காப்பாத்திக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சப்பாத்து கிரீம்கள்

சப்பாத்து கிரீம்கள் அறிமுக மாகியுள்ளன. கறுப்பு, வெள்ளை, மண்ணிறம் ஆகிய வர்ணங்களில் கிடைக்கும் இவை, சப்பாத்துக்குப் புதுப்பொலிவையும், தோற்றத்தையும் கொடுக்கும். இவை 500 ரூபா முதல் 800 ரூபா வரை விற்பனை செய்யப் படுகின்றன.

### நாளை

மாசி-02
ஞாயிற்றுக்கிழமை 14.02.2016
திதி: ஸப்தமி பி.இ.06.31
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப.09.46
ராகுகாலம்: 05.03-06.33 வரை
சுபநேரம்: 09.33-11.03 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 800 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | – |
| கணவாய் | 550 | 400 | 500 | 500 | 600 | 500 | 550 |
| பாரை | 450 | 500 | 500 | 600 | 500 | 800 | 370 |
| சுறா | 400 | 500 | 600 | 700 | 600 | 800 | – |
| சீலா | 250 | 350 | 400 | 500 | 400 | 1200 | 400 |
| விளை | 500 | 400 | 400 | 600 | 450 | 500 | 400 |
| முரல் | 300 | 350 | 350 | 400 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 300 | 300 | 500 | 500 | 400 | – |
| கிழாக்கன் | 500 | 800 | – | – | 500 | 400 | – |
| ஓரா | 300 | 300 | – | – | 400 | 400 | 650 |
| திரளி | 200 | 200 | 200 | 200 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 200 | – | 280 | 300 | 200 | 300 |
| சூடை | 100 | 150 | 100 | 150 | 300 | 150 | – |
| ஒட்டி | 250 | 200 | 150 | 200 | 250 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 250 | 300 | 150 |
| மதனம் | 100 | 200 | 180 | 350 | 250 | 200 | 300 |
| கொய் | 80 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 300 | 200 | 250 | 300 | 400 | 300 | – |
| வாழை | 100 | 150 | 200 | 400 | 300 | 100 | 200 |



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | 60 | 40 | 60 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 70 | 80 | 70–100 | 100 | 60 | 60 | 80 | 40 |
| கரட் | 200 | 240 | 240 | 180 | 200 | 280 | 190 | 250 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40 | 40 | 35 | 40 |
| பயிற்றை | 140 | 120 | 120 | 120 | 100 | 100 | 100 | 100 |
| பாகல் | 100 | 100 | 80 | 80 | 100 | 120 | 80 | 100 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 60 | 60 | 100 | 55 | 50 |
| பெ.வெங்காயம் | 60 | 60 | 70 | 60 | 60 | 80 | 50 | 50 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 60–100 | 80 | 80 | 120 | 65 | 70 |
| பூசணி | 60 | 80 | 60–100 | 100 | 100 | 120 | 40 | 80 |
| தக்காளி | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 60 | 45 |
| வாழைக்காய் | 70 | 60 | 40 | 60 | 60 | 120 | 90 | 40 |
| கீரை | 20 | 40 | 30 | 10 | 30 | 20 | 15 | 30 |
| பொன்னாங்கானி | 30 | 40 | 30 | 40 | 20 | 20 | 10 | 10 |
| பச்சை மிளகாய் | 200 | 240 | 240 | 200 | 140–150 | 250 | 200 | 250 |
| புடோல் | 60 | 80 | 70 | 40 | 60 | 60 | 40 | 65 |
| கோவா | 80 | 100 | 80 | 80 | 70 | 100 | 80 | 80 |
| வெண்டி | 120 | 120 | 100 | 100 | 140 | 100 | 70 | 120 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 120 | 100 | 120 | 50 | 110 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 | 80 | 160 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40 | 40 | 40 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 70 | 60 | 60 | 60 | 45 | 80–120 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 10 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 | 180 | 200 | 200 | 180 | 280 |
| இராசவள்ளி | 150 | 160 | 160 | 100 | 160 | 120 | 90 | 70 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 700 | 350 | 800 | 600 | 400 | 500 |



## கறிவேப்பிலைக் குழம்பு



**தேவையான பொருள்கள் :**

பச்சைக் கறிவேப்பிலை - 1 கப்
காய்ந்த மிளகாய் - 7
உ. பருப்பு - 1 மேசைக்கரண்டி
புளி - நெல்லிக்காய் அளவு
உப்பு - தேவையான அளவு
நல்லெண்ணெய் - வறுக்க, தாளிக்க தேவையான அளவு
கடுகு, உ.பருப்பு, பெருங்காயம் - தாளிக்க
வெந்தயம் - 1 தேக்கரண்டி

**செய்முறை :**

- ஒரு தேக்கரண்டி நல்லெண்ணெயைச் சட்டியில் விட்டுச் சூடாக்கி, காய்ந்த மிளகாய், உளுத்தம் பருப்பு என்பவற்றைச் சேர்த்து பொன்னிற மாக வறுக்கவும். பின்னர் அதனுடன் அலசி வைத்திருக்கும் கறிவேப்பிலை யைச் சேர்த்து ஒரு தடவை வதக்கி உடனே அடுப்பிலிருந்து இறக்கவும்.
- புளியைத் தண்ணீரில் ஊற வைத்துக் கரைசல் எடுத்துக் கொள்ளவும். பின்பு, வறுத்த பொருள்களுடன் உப்புச் சேர்த்து அரைத்துக் கொள்ள வும். சட்டியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு சூடானதும் கடுகு, உளுத் தம் பருப்பு பிறகு வெந்தயம், பெருங்காயம் சேர்த்துத் தாளிக்கவும்.
- பின்னர் புளிக் கரைசலை ஊற்றி அதில் அரைத்த விழுதைச் சேர்க் கவும். கெட்டியான குழம்புப் பதத்துக்குக் கொதிக்க வைக்கவும். இட்லி அல்லது தோசைக்குத் தொட்டுக் கொள்ளலாம். மேலும் சோற்றுடனும் பரிமாறலாம்.

## உணவுப் பொருள்களின் பாதுகாப்பு

- சில பொருள்களைப் பாதுகாப்பாகக் கையாளும் முறைகள் உண்டு. உதார ணமாக ஊறுகாய், நெய் போன்றவை. அவை போன்றவற்றைப் பராமரிப்பது எப்படி என்பதைப் பார்க்கலாம்.
- சுடு தண்ணீரில் சிறிது உப்பைப் போட்டு வையுங்கள். எப்போதும் இருக்கும் நேரத்தைவிட அதிக நேரம் சூடாக இருக்கும்.
- கடையிலிருந்து கோதுமை, கேழ்வரகு, மிளகாய் போன்றவைகளை வாங்கி வந்து அரைக்கக் கொடுப்பதற்கு முன்பு அதைச் சுத்தம் செய்து கல், தூசு போன்றவற்றை நீக்கி விடுங்கள்.
- பின்னர் சூரிய ஒளியில் காய வைத்து அரைக்கக் கொடுங்கள். கடைகளில் இதுபோன்று எதை வாங்கினாலும் வெயிலில் காய வைப்பது சுகாதார பூர்வமானது.
- வெண்ணெய் காய்ச்சும்போது சிறிது முருங்கை இலையைப் போடுவதால் நெய் வாசனை கெடாமல் இருக்கும்.
- நெய் காய்ச்சி சூடு ஆறியதும் அடியில், தங்கும் கசடை அகற்றிவிட வேண்டும்.
- சிறிதளவு புளியை உருட்டி கடலை எண்ணெயில் போட்டு வைத்தால் எண்ணெய் கெடாதிருக்கும்.
- தேங்காய்ப் பத்தை தயிரில் போட்டு வைத்தால் இரண்டு நாள்கள் தயிர் கெட்டுப் போகாமல் பாதுகாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்ற இந்த நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கம், சமாதான செயல்முறை இணையச் செயலகத்தின் சிவில் சமூகத்துக்கான குழுவின் இணைத் தலைவர் மனோரி முத்தெட்டுவேகம ஆகியோர் www.scrm.gov.lk என்ற இந்த இணையத் தளத்தை ஆரம்பித்து வைத்தனர்.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளை அமைப்பதாக அரசு வாக்குறுதி அளித்திருந்தது. இந்தப் பொறிமுறைகளை அமைப்பது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு, ஆலோசனைச் செயலணி ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மனோரி முத்தெட்டுவேகம தலைமையிலான 11 பேர் கொண்ட இந்த ஆலோசனைச் செயலணி நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. இந்த ஆலோசனைச் செயலணி, அடுத்த மூன்று மாதங்களுக்கு பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து, அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கும்.

இந்தச் செயலணியில், கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, காமினி வியாங்கொட, பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு, விசாகா தர்மதாச, தர்மசிறி பண்டாரநாயக்க, கலாநிதி பர்ஸானா ஹனீபா, சட்டவாளர் சாந்தா அபிமன்ன சிங்கம், மிராக் ரகீம், பேராசிரியர் தயா சோமசுந்தரம், கமீலா சமரசிங்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்த இணையத்தளத்தில் பொது மக்கள் நல்லிணக்கம் மற்றும் அரசியல் சீர்திருத்தம் குறித்த தமது கருத்துக்களைப் பதிவு செய்து கொள்ள முடியும். கருத்துக்களைப் பதிவு செய்து கொள்பவர்களின் தரவுகள் எவையும் வெளிப்படுத்தப்படமாட்டாது. குறித்த இணையத்தளம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுள்ளது. எனவே இதனை நிர்வகிப்பதற்கான செயலாளர் நாயகம் உருவாக்கப்பட்டு அவரூடாகச் செயற்படுத்தப்படும்.

இந்த நிகழ்வில், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, மாற்றுக்கொள்கைகள் அமைப்பின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கிழக்கு மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட அரச அதிபர் மற்றும் அரச அதிகாரிகள், பொது மக்கள், மகளிர் அமைப்பினர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஆயுதங்கள்

நேற்று மேற்கொள்ளப்பட்டது.

விசுவமடு, குமாரசாமிபுரம் பகுதியில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட பல மணி நேரத் தேடுதல் நடவடிக்கை, ஆயுதங்கள் எதுவும் கிடைக்கப் பெறாமையால் எதுவித பயனுமின்றி நிறுத்தப்பட்டது.

ஆயுதங்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டு, கொழும்பில் இருந்த வருகை தந்த குழுவினர் நேற்றுக் காலை 8.30 மணியளவில் குறித்த பகுதியைத் தோண்ட ஆரம்பித்தனர். இருப்பினும் பிற்பகல் 2 மணி வரை எதுவித ஆதாரமும் கிடைக்கப்பெறாத நிலையில், தமது பணியை இடைநிறுத்திச் சென்றுள்ளனர்.

குறித்த பகுதிக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் அங்கு வருகை தந்திருந்த பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த-வ-21,ரி3)

## மகிந்த

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இதில் கலந்து கொண்டார். இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குரிய முழு அதிகாரமும் ஒழுக்காற்று நடவடிக்கைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதியைக் கடுமையாக விமர்சித்த உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் உறுப்பினர்கள் பலருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. விளக்கமளிப்பதற்குத் தேவையான கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.(த-சி)

## தமிழரசுக்

ணத்துக்கு வருகை தந்த அமைச்சர் நேற்றுப் பிற்பகல் யாழ்.மாட்டீன் வீதியில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்துக்குச் சென்றிருந்தார்.

அங்கு அந்தக் கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எம்.ஏ. சுமந்திரன் மற்றும் கட்சியின் பிரமுகர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

(த-வ -10)

# விவசாயத் துறைக்கான ரயர்களை அறிமுகம் செய்துள்ளது யுனிகோர்ன்




2016 இல் யுனிகோர்ன் ரயர் ரிடிரெட் (பிரைவேட்) லிமிட்டெட், விவசாயத் துறையில் பயன்படுத்தக்கூடிய ரயர்களை மீள் நிரப்பும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. நிறுவனத்தின் நவீன வசதிகள் படைத்த ரீபில்டிங் பகுதிகளான பனலுவ, வடரேக தொழிற்பேட்டை வலயத்தில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிதாக 'ரீபில்ட்' செய்யப்படும் ரயர்கள் மேலதிக பிடிமானம் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆயுள் காலத்தையும் கொண்டுள்ளன. விசேட இறப்பர் சேர்மானத்தை பயன்படுத்தி இந்த 'ரீபில்டிங்' செயன்முறை முன்னெடுக்கப்படுவதுடன், விவசாயத்துறையில் மேலதிக பாதுகாப்பு மற்றும் அதிகளவு தூரம் பயணிக்கக்கூடிய திறனை வழங்கும் வகையில் அமைந்துள்ளன. யுனிகோர்ன் ரயர்கள் சந்தையில் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற சேவையுடன் சகாய விலையில் சிறந்த ரயரை பெற்றுக்கொடுப்பது எனும் தொனிப்பொருளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. யுனிகோர்ன் விவசாய ரீபில்ட் ரயர்களை நாடு முழுவதும் காணப்படும் ரயர் விற்பனை நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்ய முடியும்.

யுனிகோர்ன் ரயர் ரிடிரெட் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் அசங்க ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், யுனிகோர்ன் ரயர்களைப் பயன்படுத்தும் வாகன உரிமையாளர்களுக்கு, தாம் செலுத்தும் பணத்துக்கு அதிகளவு பெறுமதியை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்- என்றார்.

யுனிகோர்ன் கம்பனி புதிய வருடத்தில் இந்தப் புதிய ரக ரயர்களை அறிமுகம் செய்ததன் மூலம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.

குறிப்பாக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் பெருமளவான செலவீனங்களைக் குறைக்கும் வகையில் இந்த விவசாய பயன்பாட்டுக்கான ரயர் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நிறுவனம் எனும் வகையில், விவசாய செயற்பாடுகளில் ஈடுபடுவது என்பது தேசிய சேவை என நாம் கருதுகிறோம்.

இந்த கொள்கையுடன் 2016 ஆம் ஆண்டை ஆரம்பித்துள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமையடைகிறோம். 2014 இல் யுனிகோர்ன் கம்பனி தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது. படிப்படியாக தனது செயற்பாடுகளை மேம்படுத்தியிருந்தது. குறுகிய காலப்பகுதியில் இந்நிறுவனத்தின் செயற்பாடுகள் துறையின் முன்னோடிகளுடன் போட்டியை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்துள்ளது. எனவே நாம் மேலும் பல புத்தாக்கமான தயாரிப்புகளை எமது வாடிக்கையாளர்களுக்கு வழங்க ஊக்குவிக்கப்பட்டுள்ளோம் என்றார். யுனி கோர்ன் ரிடிரெட் ரயர் (பிரைவேட்) லிமிட்டெட்டை ஸ்தாபித்ததன் நோக்கம், உயர் தரம் வாய்ந்த மற்றும் நீடித்து உழைக்கும் தயாரிப்பை புதிய சர்வதேச தரங்களில் உள்நாட்டு வாகன பாவனையாளர்களுக்கு வழங்குவது ஆகும். மேலும், ரயர் விநியோகத்தர்களுக்கு சந்தையில் முதலாவது மாற்றுத்தயாரிப்புகளைவிநியோகிக்கக்கூடிய வாய்ப்பை வழங்குவதாகவும் அமைந்திருந்தது. (தி)

**வணிகம்**

# உயர்தரப் பரீட்சை சிறந்த பெறுபேறு; சிங்கர் நிறுவனத்தின் மடிக்கணினி



2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 21 மாணவர்களுக்கு தனது நவீன சிங்கர் எக்ஸ் சீரிஸ் மடிக்கணினிகளை சிங்கர் ஸ்ரீ லங்கா பீஎல்சி நிறுவனம் வழங்கியுள்ளது. இது தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து சிறப்பித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சிங்கர் எக்ஸ் சீரிஸ் மடிக்கணினிகளைத் தனது கரங்களால் மாணவர்களிடம் கையளித்தார்.

தேசிய மட்டத்தில் உச்ச ஸ்தானங்களைப் பெற்று மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்திய மாணவர்களைப் பாராட்டும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விசேட நிகழ்வில் சிங்கர் சிறிலங்கா பீஎல்சி நிறுவனத்தின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ், நிதிப் பணிப்பாளரான லலித் யட்டிவெல மற்றும் மனி தவளத் துறைப் பணிப்பாளரான நேமிந்த கருணாரட்ண ஆகியோரும் சமுகமளித்திருந்தனர். கல்வி அமைச்சு மற்றும் வர்த்தக சமூகத்தின் சார்பிலும் பல பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் கல்வியை மேம்படுத்துவதில் சிங்கர் நிறுவனம் எப்போதும் தனது ஊக்குவிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

டிஜிற்றல் ரீதியாக காணப்படுகின்ற இடைவெளிகளை நிரப்பி, இத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமாக மாணவர்களை தட்டிக்கொடுத்து, உச்ச இலக்கை அவர்கள் அடைந்து கொள்வதற்கு முயற்சிக்க உதவுவதில் நிறுவனம் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தி வந்துள்ளது.

இந்த ஆண்டு நிகழ்வின் மூலம் சிங்கர் எடுத்துள்ள நிலைப்பாடு தொடர்பாக கருத்துத் தெரிவித்த சிங்கர் ஸ்ரீலங்கா பீஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அசோக பீரிஸ், 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் அபிவிருத்தி செயற்திட்டங்களை முன்னெடுத்துச் சென்றுள்ள நாம், ஒரு வர்த்தக நிறுவனம் என்ற வகையில் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் வாழ்வில் உச்சத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டவர்களுக்கு கௌரவமான வழிமுறைகளை ஏற்படுத்தல் ஆகியவற்றின் மீது மகத்தான நம்பிக்கை கொண்டுள்ளதால், நவீன தொழில்நுட்பத்தின் மூலமாக கல்வித் தளத்திற்கு ஆதரவளித்து, எதிர்காலத் தலைமுறைகளை ஆளுமைப்படுத்தி, இலங்கையில் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதில் உறுதி பூண்டுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

நாடளாவிய ரீதியில் உச்ச ஸ்தானங்களைப் பெற்றுக் கொண்ட 21 மாணவர்களுக்கு சிங்கர் எக்ஸ் சீரிஸ் மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் சிங்கர் எக்ஸ் சீரிஸ் மடிகணினிகள் உச்ச பெறுபேற்றுத்திறன் கொண்ட 3டி/2டி கிராபிக் அக்சிலறேற்றர் உள்ளிணைப்புச் செய்யப்பட்ட ஸ்பீக்கர்கள் மற்றும் மைக்ரோபோன்கள் மற்றும் மென்மையான, இலேசான எடை கொண்ட வடிவமைப்புடன், மின்வலுவைச் சேமிக்கும் ஆற்றல்கள் போன்ற பண்புகளையும் கொண்டுள்ளன. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி புவனேஸ்வரி குலசிங்கம்

யாழ் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி குலசிங்கம் 08.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலசிங்கத்தின் பாசமிகு மனைவியும், சகிலா (பிரான்ஸ்), குலதீபன் (பிரான்ஸ்), குகதாசன் (சுவீடன்), சசிரேகா (பிரான்ஸ்), நாகலோஜினி (பிரான்ஸ்), கனகாம்பிகை (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும், விமலேஸ்வரன் (பிரான்ஸ்), தாரணி (பிரான்ஸ்), கஜேந்திரன் (பிரான்ஸ்), ஜெயசீலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், மங்கையர்க்கரசியின் பாசமிகு மைத்துனியும், அனோஜா, பானுஜா, அக்க்ஷயா, நிவீதன், அபிலாஸ், சுபிக்ஸா, ஆகாஷ், அபினாஷ், அல்கா, பிருந்தா, பிரதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நடராஜா-நாகரத்தினம், கமலபூபதி-நவரட்ணம், துரைசிங்கம்-மணி, செல்வநாயகம்-சுசி மற்றும் சற்குணதேவி (புனிதம்- பிரான்ஸ்), மகாதேவா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை No.34/3C1, mawbray lane Elie House Road, Colombo-15 என்னும் முகவரியில் நடைபெற்று, பின்னர் 162, E.W.Perera Mawatha, Punchi Borella, Colombo-08 எனும் முகவரியில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
தொடர்பு: 077 99 50094 (சுகிர்)

(68910)(10.17.18.20)

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி சிவசம்பு



யாழ்.காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சிவசம்பு 09.02.2016 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், சிவசம்புவின் (KVS) அன்பு மனைவியும், மங்களம்மா, காலஞ்சென்ற வர்களான சண்முகதாஸ், கிருஸ்ணதாஸ், நாகம்மா, நடராசா மற்றும் இராஜேஸ்வரி, சிவதாஸ், ஞானாம்பிகை ஆகியோரின் சகோதரியும், சிவராசா (லண்டன்), சிவகௌரி (ஆஸ்திரேலியா),சிவநேசராசா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகுமார், குணமாலா,அஜந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சகானா, கஜாளன், கஜலினி, விகிர்தன், தர்மேந்திரா, அனோஜா,அபிராமி, சாயுசன், சாத்வி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அல்லாரை வடக்கு, மீசாலையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எறியால்பிட்டி (கச்சாய்) மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**அல்லாரை வடக்கு,
மீசாலை.**

தகவல்:
**குடும்பத்தினர்.
(திருஞானசம்பந்தர் /சோதி)**

(68904)(11,17,18,20)

**தொடர்பு: 077796 4701**

## மரண அறிவித்தல்



பிறப்பு: 19.06.1953 இறப்பு: 09.02.2016

திருமதி
### இந்திராணி இராசேந்திரம்

யாழ். உடுவிலைப் பிறப்பிடமாகவும், பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி இராசேந்திரம் 09.02.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம்-முத்தம்மா தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசேந்திரத்தின் அன்பு மனைவியும், விஜிதா (பிரித் தானியா), சசிகரன் (கோபி-பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், தம்பித்துரை, யோகராணி, கௌசலிதேவி, சற்குணராசா, சகுந்தலாதேவி, வசந்தமாலா, மதியழகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானஅருள் (பாபா-பிரித்தானியா), ஜினிதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், பரமேஸ்வரி, இரத்தி னம், பாலசுப்பிரமணியம், உதயரஞ்சனி, தேவராசா, பாலரஞ் சன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மோகனச் சந்திரன், துசி, தங்கா, பிரவீன், அக்சலினா, அக்சனா, மெர்வின் ஆகியோரின் அன்பு மாமியும், சுபேந்தினி, பாலன், கஜி, சங்கர், தனு, கஜன், சஜித்தா, சிந்து, பார்த்தீபன், சதீஸ், லக்சன், சுரேனி, பறூனி, மிலேனி ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், மனிசா, அனிஸ், பபிஸ், அபிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 - 10.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
தொடர்பு: 021 3737 088, 077 6199672

(68920)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள்

கேயோ அவர்களுக்குத் தலைமைதாங்க நான் தயாராக இருக்கின்றேன்.

**இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற** உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

தனது அரசியல் பயணத்தின் தீர்க்கமான அடுத்தகட்ட நகர்வுகளை முன்னெடுக்கும் வகையில் நேற்று பத்தரமுல்லையில் பொதுசனத் தொடர்பு அலுவலகத்தைத் திறந்துவைத்த பின்னர் ஆற்றிய உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை இலக்குவைத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த ஆதரவாளர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில பங்காளிக் கட்சிகள் இணைந்து, புதிய முன்னணியொன்றை உருவாக்குவது தொடர்பில் பல யூகங்கள் எழுந்துள்ள நிலையில், இந்தப் புதிய அலு வலகம் திறக்கப்பட்டுள்ளது.

திறப்பு விழாவில் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான பொது எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான தினேஷ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, உதயகம்மன்பில, ரோஹித அபேகுணவர்த்தன, குமார வெல்கம, கீதா குமாரசிங்க, பவித்திரா வன்னியாராச்சி ஆகியோருடன் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சரத் என். சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் மகிந்தவுக்காக அண்மைக்காலமாக தீவிரமாகக் குரல்கொடுத்து வருகின்றவருமான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச இந்நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

2015 ஜனவரி 8ஆம் திகதி ஆட்சிமாற்றத்தின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் பொது எதிரணியினர் செய்தியாளர் மாநாடுகளை நாரஹேன்பிட்டிய அபயராம விகாரையில் முன்னெடுத்து வந்தனர். அபயராம விகாரையை அரசியல் நடவடிக்கைக்குப் பயன்படுத்தி வந்தமை தொடர்பில் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள நிலையிலேயே மகிந்தவின் புதிய அலுவலகம் நேற்று பத்தரமுல்லையில் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அலுவலகம் திறக்கப்பட்டதை அடுத்து உற்சாகத்துடன் கருத்துகளை மகிந்த முன்வைத்துப் பேசினார்.

வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் வைத்துள்ளதாகக் கூறப்படும் 18 பில்லியன் டொலர் பணத்தைத் தேடித் தரும் வரை தான் பார்த்துக்கொண்டிருப்பதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

18 பில்லியன் டொலர் பணத்தை முடியாவிட்டால் ஒரு பில்லியன் பணத்தையாவது தேடித் தருமாறு, தான் அரசிடம் கோரிக்கை விடுப்பதாகக் கூறினார்.

தனக்கு மாத்திரமன்றி, நாமல் ராஜபக்சவுக்கும் இது போன்று வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் பணம் வைத்துள்ளதாகக் கூறி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அத்துடன், நாட்டின் ஊடக சுதந்திரம் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாகக் கூறிய மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்றத்திலும் ஊடகவியலாளர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுவதாகத் தெரிவித்தார்.

2015 ஜனவரி 8ஆம் திகதியின் பின்னர் கட்சியின் தலைமைத்துவத்தையும் விட்டுக்கொடுத்ததாகக் கூறிய அவர், மக்கள் இன்னும் தன்னைத் தேடி வருவதாகவும், மக்கள் எங்கு இருக்கிறார்களோ அங்கு மகிந்த என்றும் கூறினார். (த-சி)

## மாவீரர்களை

துள்ளனர் முல்லைத்தீவு மாவட்ட மக்கள்.

புதிய அரசமைப்பு தொடர்பாக மக்கள் கருத்தறியும் குழுவினுடைய 2ஆவது அமர்வு நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்றது. முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற குறித்த கருத்தறியும் அமர்வில் கலந்துகொண்டு புதிய அரசமைப்பு தொடர்பாக, தங்களது கருத்துக்களை முன்வைக்கும்போதே முல்லைத்தீவு மக்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

குறித்த அமர்வில் கலந்துகொண்ட மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

1983ஆம் ஆண்டு இராணுவ முகாம்கள் எங்கெங்கே இருந்தனவோ மீண்டும் அங்கேயே இராணுவ முகாம்கள் அமைக்கப்படும் வகையில் புதிய அரசமைப்பில் இடம் பெறவேண்டும். தற்போது உள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறையிலான தேர்தல் முறை நீக்கி புதிய அரசமைப்பில் தொகுதி ரீதியான தேர்தல் முறை கொண்டு வரப்படவேண்டும்.

இலங்கையில் வாழ்ந்த ஓர் இனத்தை அழித்ததை பெருமைப்படுத்தி வெற்றி விழா எனக் கொண்டாடுவதை நிறுத்தும் வகையில் புதிய அரசமைப்பில் உள்வாங்கப்படவேண்டும். போரில் உயிர் நீத்த எங்களுடைய உறவுகளான போராளிகளையும் மக்களையும் நினைவு கூருவதற்கு எந்தவித தடைகளும் இன்றி அதற்கு அனுமதியளிக்க வேண்டும்.

அத்துடன், நடந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு தனித் தமிழீழம் தான் ஒரே தீர்வு எனவும் தெரிவித்தனர்.

மேலும், குறித்த புதிய அரசமைப்பு தொடர்பான மக்கள் கருத்தறியும் அமர்வுக்கு வருகை தந்தவர்களில் சிலர், வடக்கு- கிழக்கு இணைந்த சமஷ்டி முறையிலான அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும். அதில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்படவேண்டும். அவை அதிஉச்ச அதிகாரங்களைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கருத்துக்களை முன்வைத்தனர்.

அத்துடன் தகவல் அறியும் சட்டத்தினையும் நடைமுறைப்படுத்த வேண்டும். ஊடகங்கள் சுதந்திரமாகச் செயற்படக் கூடிய வகையில் இருக்கவேண்டும்.

அனைவருக்கும் பொதுவான இனங்களைப் பிரித்துக் காட்டாத தேசியக்கொடி வேண்டும். இது அமைதியையும் சமாதானத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் வன்முறையான சித்திரிப்புக்கள் அற்றதாவும் இருக்க வேண்டும் எனவும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை, நேற்றையதினம் இடம்பெற்ற குறித்த மக்கள் கருத்தறியும் அமர்வில் மாவட்டத்தை சேர்ந்த 50 பேர் வரையானோர் குழுக்களாகவும், தனியாகவும் சென்று தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருந்தனர். (த-வ-21-ரி7)

## யாக்கரு

ஒன்றுடன் ஒன்று மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் இரு இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி, யாக்கரு சந்தியில் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்தில் குடவத்தை துன்னாலையை சேர்ந்த செல்லத்தம்பி செல்வராஜா (வயது - 28) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

யாக்கரு சந்தியில், சாவகச்சேரி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் கொடிகாமத்தில் இருந்து கலிகை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கியெறியப்பட்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் குறித்த இளைஞன் உயிரிழந்ததாக விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், உயிரிழந்தவருக்கு பின்னால் இருந்து பயணித்த துன்னாலை குடவத்தைச் சேர்ந்த செல்லத்தம்பி செல்வரூபன் (வயது - 18) என்ற இளைஞனும் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த கரவெட்டி கிழக்கை சேர்ந்த இராசநாயகம் கோகுலன் (வயது - 29) என்ற இளைஞனும் படுகாயமடைந்துள்ளனர்.

குறித்த இரண்டு இளைஞர்களும் சிகிச்சைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை பதில் நீதிவான் சுப்பிரமணியம் விசாரணைகளை நடத்தினார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பொருட்டு பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(த-வ-109-173-422)

## என் வேலையை

பிறகு நான் காரமான கட்டச் சம்பலைத் தயாரித்து வழங்குவேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீறிப் பாய்ந்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது மகிந்த தரப்பினர் ஆரம்பிக்கவுள்ள புதிய கட்சி பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அவ் வேளையிலேயே கடும் சீற்றத்துடன் ஜனாதிபதி மேற்படி கருத்தை முன்வைத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தக் கருத்துக்குப் பாராட்டுத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, புதிய கட்சி உதயமானால் சு.கவின் பதிலடி கடுமையாக இருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம கடும் ஆட்சேபனையை வெளியிட்டார். தேசிய அரசுடன் இணைந்து செயற்படமுடியாது. இதற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. எனவே, சுயாதீனமாக செயற்படுவதற்கு சுதந்திரமளிக்கப்படவேண்டும் என்ற தர்க்கத்தை முன்வைத்தார்.

அவ்வாறு இல்லை. தேசிய அரசில் இணைந்து செயற்படுவதற்கு சு.கவின் மத்திய செயற்குழு ஒப்புதல் வழங்கியுள்ளதுதானே என்று வெல்கமவுக்கு பதிலடி கொடுத்தார் ரெஜினோல்ட் குரே. (த-சி)

## மரண அறிவித்தல்

### பொன்னையா ஐயாத்துரை



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா ஐயாத்துரை 09.02.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கனகம், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் சோதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், தயாளினி, சுமதி, சிவசீலன் (லண்டன்), குகதாசன் (சுவிஸ்), சிவசுந்தரகாந்தி (கண்ணன் - சுவிஸ்), சிவதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிராஜ், சபேசன், உமாகௌரி, தனுயா, ரவீந்திரக்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், கம்சனா, அபிநயா, கவிநயன், கரிஷன், ரச்சனா, பபிசன், கபில் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் இந்தன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி தெற்கு,**
**நீர்வேலி,**
**யாழ்ப்பாணம்.** (68887)(11,18,20)

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்பு: 077 714 9188

## மரண அறிவித்தல்

திருமதி
### நகுலேஸ்வரி சுப்பிரமணியம்



தோற்றம் 14.04.1931 — மறைவு 12.02.2016

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரி சுப்பிரமணியம் நேற்று (12.02.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா-சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் இராஜயோகேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரியும், கௌரிதேவி (ஆஸ்திரேலியா), சந்திரகுமார் (கொழும்பு), சுபதாசன் (ஆஸ்திரேலியா), சுமிதா (கோண்டாவில்), சுதர்சன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வள்ளிமணாளன், சித்திரா (ஆஸ்திரேலியா), விக்கினராஜா (கோண்டாவில்), மாலகுமாரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தக்சாயினி, காயத்திரி, புவனா, பிரகதீஸ், சுகாஸன், சுகானன், நிருஷா, பிரவீனா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், மகிபனா, மகிஜனா, சிகாஸ், சிராஸ்னா, சிராஸ், அபிஷா, நிகாஸ் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ந.விக்கினராஜா (விக்கா)**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**

தொடர்பு: 021 205 3967

(68914)
(10.17.18.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணச்

காரமும் அரசுக்கு இல்லை. அதனால் மேற்படி தரப்பினருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவதற்குப் பதிலாக காணாமற் போனதற்கான சான்றிதழ் இன்னும் இரு மாதங்களுக்குள் வழங்கப்படும் என்று உள்நாட்டு விவகார அமைச்சர் வஜிர அபேவர்தன நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

காணாமற்போனோர் என சான்றிதழ் வழங்கப்பட்டவர் மீண்டும் இனங்காணப்பட்டால் குறிப்பிட்ட காலப்பகுதியில் அனுபவிக்காத சிறப்புரிமைகள் அவர்களுக்கு மீள வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண கொண்டுவரப்பட்ட, வடக்கு–கிழக்கில் காணாமற்போனத் தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல், வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் போர் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான இறப்புச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டும் என்ற தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அமைச்சர் வஜிர அபேவர்தன மேற்கண்ட விடயத்தைக் குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் குறிப்பிட்ட அவர், காணாமற்போனோர் விவகாரம் வடக்கு–கிழக்கு மக்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட விடயம் அல்ல. இது முழு நாட்டுக்கும் உரிய பிரச்சினையாகும்.

காணாமற்போனோருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்கும் முறைமை ஐ.நாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன் றல்ல. அத்துடன், இலங்கைச் சட்டத்திலும் இதற்கு இடமில்லை. இறப்புச் சான்றிதழ் வழங்கும் அதிகாரமும் அரசுக்கு இல்லை. அதனால் நாம் இறப்புச் சான்றிதழ் வழங்கமாட்டோம்.

காணாமற்போனோர் இறந்துவிட்டனர் என்பதை அவர்களது உறவினர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இறப்புச் சான்றிதழ் வழங்கமுடியாது. அதனால் காணாமல் போனதற்கான சான்றிதழ் வழங்க நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இதற்கான அமைச்சரவை அனுமதிப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமைச்சரவை அனுமதி பெறப்பட்ட இந்தப் பத்திரம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. இரண்டு மாதங்களுக்குள் இந்தச் சான்றிதழ் வழங்க நாம் நடவடிக்கை எடுக்கவுள்ளோம். காணாமற்போனோர் மீள கண்டுபிடிக்கப்பட்டால், காணாமல்போனதற்கான சான்றிதழ் வழங்கப்படுவதனூடாக குறிப்பிட்ட நபர் காணாமற்போன காலத்தில் கிடைக்கப்பெறாத சிறப்புரிமைகள் அவருக்கு மீளக் கிடைக்கும்.

அரச சேவையாளர் எனில், அவருக்கு உரிய ஓய்வூதியம் உள்ளிட்ட ஏனைய சலுகைகள் வழங்கப்படும்–என்றார்.

(த–சி)

## இனவாதம்

மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில், நேற்று முற்பகல் 11மணிக்கு நடைபெற்றது. இதில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்றார். இதனைத் தொடர்ந்து சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை அமைச்சர் சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:– ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, பொறுப்புக்கூறலுக்கான பொறிமுறைகளை அமைப்பதாக இலங்கை அரசு வாக்குறுதி அளித்துள்ளது. இந்தப் பொறிமுறைகளை அமைப்பது தொடர்பான பொதுமக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு, ஆலோசனைச் செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மக்களால் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புரட்சிகர மாற்றத்தால் உருவாகிய அரசு மக்கள் அனைவருக்கும் கடமைப்பட்டுள்ளது.

நல்லிணக்கத்தின் நான்கு தூண்களை அதாவது நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மீள் அளித்தல், இழப்பீடு வழங்கல் என்பவற்றை இந்த அரசு சுமக்கின்றது. தற்போது நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், ஐ.நா. மனித உரிமைகள் சபையால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக நல்லிணக் கத்துக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தி வருகின்றனர்.

போர் முடிந்துள்ள நிலையில் நாட்டில் எற்பட்டுள்ள சமாதான நிலைகளைப் பயன்படுத்தி உரிமைகளைப் பாதுகாக்கவேண்டும். மக்கள் இணைந்து செயற்படாமல் இவற்றையும் நாட்டையும் முன்னேற்ற முடியாது. இந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி சர்வதேசத்துக்கு முன் தேசத்தின் கௌரவத்தைப் பாதுகாத்து இலக்கை அடைவதற்கு முயற்சிப்பது எம்முடைய கடமை.

நான்கு தூண்களையும் நிறைவேற்றுவதற்கு நாம் நல்லிணக்கம் தொடர்பாகக் கருத்திடவேண்டும். ஜெனிவாத் திர்மானம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து நல்லிணக்கத்துக்கான பொறுப்புக்கூறலை வலியுறுத்தியுள்ளன.

வடக்கு மற்றும் தெற்கில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் போர்க் காலப் பகுதியில் வெகுவாக ஆயுதப் பாதிப்புக்கு உட்பட்ட மக்கள் பலர் உள்ளனர். விடுதலைப் புலிகளால் பலவந்தமாக இளைஞர், யுவதிகள் படையில் இணைக்கப்பட்டனர். மறுத்தவர்கள் சுடப்பட்டனர். எல்லா வகையிலும் பாதிக்கப்பட்ட பெண்கள் பலர் உள்ளனர். 1999ஆம் ஆண்டு நான் அரசியலுக்கு வந்ததற்கு 1980 ஆம் ஆண்டுகளில் நிலவிய தேசப்பிரிய இயக்கமே காரணம். இதன் விளைவாக எனது சகாவான மகிந்த ராஜபக்சவுடன் இணைந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட அன்னையர்களை உள்ளடக்கிய அன்னையர் இயக்கத்தை உருவாக்கினோம். இன்றும் பாதிக்கப்பட்ட படைவீரர்களின் தாய்மார் பலர் உள்ளனர். தம்முடைய பிள்ளைகளைத் தேடுகின்றனர்.

நல்லாட்சி ஜனாதிபதியால் 60 ஆண்டு காலப் பகுதியில் முதல் தடவையாக இருமொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ் மக்களின் 3300 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும் விடுவிக்கப்படவுள்ளன.

சாதகமான மீளாய்வு நடவடிக்கைகளின் ஊடாக 260 நபர்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் மீதான தடைகள் நீக்கப்பட்டுள்ளன. காணாமற் போனோரில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவர்களின் விசாரணைகளைத் துரிதப்படுத்தும் வகையில் விசேட நீதிமன்றம் அமைப்பது தொடர்பிலும் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

முன்னைய காலம் போலன்றி தற்போது ஆயுதப் படையின் நல்ல பெயர் காப்பாற்றப்பட்டுள்ளது. தேசத்தின் நல்லிணக்க நடவடிக்கையைத் தொடங்கியுள்ளோம். ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நெகிழ்ச்சி காட்டவில்லை.

தற்போது எமது முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்குக் குறுகியகால திட்டங்கள் போதாது. எனவே நீண்டகால–நிலையான திட்டங்கள் தேவைப்படுகின்றன. எனவே நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான குழு சுயாதீனமாகப் புத்திஜீவிகளைக் கொண்டு சிவில் அமைப்பாக உருவாகியுள்ளது. இவர்களின் கருத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்துவார்கள். எனவே கருத்தறியும் செயலில் அனைவரும் ஒன்றிணைதல் வேண்டும்–என்றார்.

(த–ரீ5)

## வழங்கப்படும்

கோரிப் பொது[illegible] கையெழுத்திடும் போராட்டமும் பின்னர் அவற்றைக் கையளிக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. யாழ். இந்துக் கல்லூரியில் கையெழுத்திடும் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்கள் பேரணியாகச் சென்று யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி, வடக்கு மாகாண முதலமைச்சர், வடக்கு மாகாணப் போக்குவரத்து அமைச்சர், யாழ்.பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருக்கு மனுக்களைக் கையளித்தனர்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

திருநெல்வேலியில் இடம்பெற்ற விபத்தில் குறித்த சாரதிக்குத் தக்க தண்டனை வழங்குவதோடு இவரின் தண்டனையைப் பார்த்து மற்றைய சாரதிகளும் சரியான முறையில் சாரத்தியம் செய்ய வேண்டும். அதற்கு அமைய அதிகூடிய தண்டனை வழங்கவேண்டும். இது பஸ் சாரதிகளுக்கு மட்டும் இல்லாது ஏனைய சாரதிகளுக்கும் படிப்பினையாக இருக்க வேண்டும்.

குறிப்பாகச் சில பயிற்சிப் பாடசாலைகளில் சாரதி அனுமதிப்பத்திரம் எடுப்பது இலகு வாக உள்ளது. இது தவிர்க்கப்படவேண்டும்.

வாகன அனுமதிப் பத்திரம் வாகனத்தில் ஒட்டப்படுவது போல் கட்டாயம் பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கம், பஸ் சங்கத்தின் தொலைபேசி இலக்கம், வழித்தட அனுமதி இலக்கம், உரிமையாளர் பெயர் என் பன வாகனத்தில் பயணிகளுக்குத் தெரியும்படி ஒட்டப்பட வேண்டும். இந்த இலக்கங்கள் ஒட்டப்படாவிடின் உடன் பொலிஸாருக்குத் தெரிவித்துத் தண்டம் அறவிடப்பட வேண்டும். இது பயணிகளின் நன்மை கருதியே.

வேகக் கட்டுப்பாடு மாநகர எல்லைக் குள் 40 கிலோ மீற் றர் வேகத்திலும், பாடசாலை வீதிகளில் 30 கிலோமீற்றர் வேகத்திலும் செல்லுமாறு குறிப்பிடப்பட வேண்டும். பணத்துக்காக அதிக பயணிகளை ஏற்றும் பஸ் நடத்து நர்களுக்கு அபரா தம் விதிக்கப்பட வேண்டும். நடத்துநர் பயணிகளுடன் செல்லும்போது வெற்றிலை போட்டால் ஒரு நாள் சிறைத்தண்டனையும் வழங்கவேண்டும். ஒதுக்கப்பட்ட இடத்தில் பயணிகளை ஏற்றி இறக்கும் நடைமுறை கொண்டு வரப்படல் வேண்டும். வாகனங்களை மூன்று மாதத்துக்கு ஒரு தடவை பரிசோதனை செய்து அறிக்கை வழங்கப்படவேண்டும். வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தின் வயதெல்லை உயர்த்தப்பட வேண்டும்–என்றுள்ளது.

(த–4–101–ரி)


## கண்ணீர் அஞ்சலி



06.02.2016ஆம் திகதி இறைபதமடைந்த எமது செயலக வாழ்வெழுச்சி திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. கோ. கருணாகரன் அவர்களின் தந்தையார்

**சுந்தரப்பிள்ளை கோபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.
(C/29108) (10.17.20)
பிரதேச செயலரும்
உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்.

## துயர் பகிர்கின்றோம்



நாரந்தனை சைவ மகாசபையின் உப செயலாளரும் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளின் தொண்டரும், நாரந்தனை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க செயலாளருமாகிய திரு. கோபாலசிங்கம் இளங்கோவன் அவர்களின துும், சைவ மகாசபையின் முன்னாள் செயலாளரும், ஆலய தொண்டருமாகிய திரு. கோபாலசிங்கம் கருணாகரன் அவர்களினதும் தந்தையாருமாகிய

**சு.கோபாலசிங்கம்**

(தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய 2ஆம் திருவிழா பங்காளர்) அவர்கள் சிவபதமடைந்த செய்தி அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த துயரமும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
நாரந்தனை.
ஊர்காவற்றுறை.
(68907) (10.17.20)
பிரிவால் துயருறும்,
சைவ மகாசபையினரும்,
நாரந்தனை மக்களும்.

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

நிகழும் மன்மத வருஷம் தை மாதம் 03 ஆம் நாள் 17.01.2016 ஞாயிற்றுக்கிழமையன்று இறைபதமடைந்த எமது அன்பு மகள்

செல்வி

**ஸ்ரீ ரம்மியா ஜெயராம சர்மா**



அவர்களின் ஆத்மசாந்தி வழிபாடுகள் இன்று (13.02.2016) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அதில் தாங்களும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்தித்து தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை அம்மன் கோவிலடி,
மானிப்பாய்.
T.P: 077 2967 291
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்

தோற்றம்
01.05.1948
மறைவு
17.01.2016



அமரர்

**கந்தையா தங்கராசா**

(இலங்கை மின்சாரசபை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

கட்டுவனைப்பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா தங்கராசா அவர்களின் அந்தி யேட்டிக்கிரியைகள் நாளை (14.02.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் 16.02.2016 செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

அன்றைய தினம் தாங்களும் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] வடக்கு,
நீர்வேலி.
(68919)(15.17)
குடும்பத்தினர்.
தொ.பே: 077 2850 851


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிக்குச் சென்றது ஜெமினி அரேபியன்ஸ்




ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடை பெற்றுவரும் மாஸ்டர்ஸ் லீக் ரி-20 தொடரில் (முன்னாள் வீரர்கள் பங்குபற்றும் ரி-20 தொடர்) இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியுள்ளது ஜெமினி அரேபியன்ஸ் அணி.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த அரையிறுதி ஆட்டத்தில் சேவாக் தலைமையில் ஜெமினி அரேபியன்ஸ் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையில் ஸ்ரைக்கர் அணியும் பலப்பரீட்சை நடத்தின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜெமினி அரேபியன்ஸ் அணி 5 இலக்குகளை இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சேவாக் 83 ஓட்டங்களையும், சங்கக்கார 62 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஸ்ரைக்கர் அணியின் சார்பாக பெஸ்ட் 3 இலக்குகளையும், விக்டோரி, சன்டோகி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் கள்மிறங்கிய ஸ்ரைக்கர் இலக்கை எட்டக்கூடிய விதத்தில் விரட்டியபோதிலும்,மத்திய வரிசையில் ஏற்பட்ட வீழ்ச்சியால் அந்த அணி 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. அதிகபட்சமாக ஜெயவர்த்தன 65 ஓட்டங்களையும், முஸ்ராட் ஆட்டமிழக்காமல் 48 ஓட்டங்களையும், கமீட் 16 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)


# சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டு இலங்கையைப் பந்தாடியது இந்தியா



இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக்கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 69 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்தியா மூன்று ஆட்டங்களைக் கொண்ட தொடரை 1:1 என்று சமன் செய்துள்ளது. இதனால் இறுதி ஆட்டத்தில் வெற்றி பெறும் அணிக்கு கிண்ணம் தீர்மானமாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கையின் அணித்தலைவர் சந்திமல் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தார். இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கினர் தவானும் ரோகித் சர்மாவும். பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தார் ரோகித் சர்மா. கடந்த ஆட்டத்தில் அறிமுகமாகி இலங்கையின் வெற்றிக்கு வித்திட்ட ராஜிதவின் பந்துகளுக்கு நேற்று மரண அடி நடந்தது. இலக்குகள் இழப்பின்றி அரைச்சதம் கடந்தது இந்திய அணி. ரோகித்தைவிட தவான் அதிரடி காட்டினார். சிக்சர்கள் பெரிதாக இல்லாவிட்டாலும் பவுண்டரிகள் மாறிமாறிப் பாய்ந்து சென்றன. 7ஆவது பந்துப் பரிமாற்றத்திலேயே 75 ஓட்டங்களை எட்டியது இந்திய அணி. அதேபந்துப்பரிமாற்றத்தில் இலக்குச் சரிவும் இருந்தது. 51 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் தவான். ரகானேயின் ஆட்டத்தில் பெரிதான விளாசல்கள் இல்லாவிடினும் சராசரியை மாறாது பேணிக்கொண்டிருந்தார். ரகானே 25 ஓட்டங்களுடனும் ரோகித் 43 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பாண்டியா களமிறக்கப்பட்டார். அடுத்தடுத்து இரண்டு சிக்சர்களை விளாசினார். திடீர் ஏற்றம் கண்டது சராசரி. ரெய்னாவும் விடுவதாகஇல்லை. 18ஆவது பந்துப்பரிமாற்றத்தின் இறுதி மூன்று பந்துகளிலும் பாண்டியா, ரெய்னா, யுவராஜ் மூவரையும் அடுத்தடுத்து வெளியேற்றி ஹற்றிக் பதிவுசெய்தார் பெரேரா. முடிவில் இந்தியா 196-6. பந்துவீச்சில் இலங்கை சார்பாக பெரேரா மூன்று இலக்குகளையும், சமீர இரண்டு இலக்குகளையும், சேனநாயக்கா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். கடந்த ஆட்டத்தில் தனது பந்துவீச்சின் மூலம் இலங்கையின் வெற்றிக்கு வித்திட்ட ராஜித ஓர் இலக்கைத் தானும் வீழ்த்தவில்லை.

பதிலுக்கு களமிறங்கியது இலங்கை. முதல் பந்துப் பரிமாற்றத்தை அஸ்வினிடம் ஒப்படைத்தார் டோனி டக்குடன் வெளியேறினார் டில்சான். அடுத்த பந்துப்பரிமாற்றத்தில் நெகராவின் வேகத்தில் வீழ்ந்தார் குணதிலக. முதல் கோணல் முற்றும் கோணலாக அமைந்தது. இலக்கை எட்டக்கூடிய சராசரியும் இல்லை. கைவசம் சிறந்த இலக்குகளும் இல்லை. இலங்கையின் தோல்வி இன்னிங்ஸின் ஆரம்பத்திலேயே கிட்டத்தட்ட உறுதியானது. சந்திமல், கப்புக்கெதர இருவரும் நிலைத்து நின்றனர். ஆனாலும் இந்திய அணியில் பதட்டம் ஏற்படவில்லை. பந்துவீச்சாளர்களை குழப்பும்படியான தொடர்ச்சியான சிக்சர்களோ அல்லது பவுண்டரிகளோ இல்லாதமையே இதற்கு காரணம். இந்தியாவின் அத்தனை பந்து வீச்சாளர்களும் சிறப்பாக பந்துவீச படிப்படியாக அந்த அணியின் வெற்றி உறுதியானது. முடிவில் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் இலங்கையால் 127 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. ஆட்ட நாயகனாக தவான் தெரிவானார். (ம)

# துடுப்பாட்டத்தில் நியூசி. தடுமாற்றம் ஆஸி. ஆதிக்கம் செலுத்தும் நிலை



நியூசிலாந்து-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தின் முதலாவது நாளான நேற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 183 ஓட்டங் களுக்கு சகல இலக்கு களையும் இழந்ததுடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடி வரும் ஆஸ்திரேலியா நாள் முடிவில் 147-3 என்ற நிலையில் உள்ளது.

வெலிங்டன் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த ஆட்டத்தில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலியா முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து சகல இலக்குகளையும் இழந்து 183 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நியூசிலாந்தின் முன் வரிசை பலவீனமாக அமைந்தமையே இந்த சரிவுக்கு காரணமாகக் குறிப்பிடப்படுகின்றது. அதிலும் குறிப்பாக தனது நூறாவது டெஸ்ட்டில் களமிறங்கிய மக்கலம் ஓர் ஓட்டத்தைத் தானும் பெறாது ஆட்டமிழந்தார். அதிகபட்சமாக பின்வரிசை வீரரான கிறைக் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், அன்டர்சன் 38 ஓட்டங்களையும், போல்ட் 24 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஆஸ்திரேலியா சார்பாக கசில்வூட் 4 இலக்குகளையும், சிடில், லையன் இருவரும் தலா மூன்று இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஆஸ்திரேலியாவுக்கும் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. பத்து ஓட்டங்களை எட்டுவதற்குள்ளேயே ஆரம்ப வீரர்கள் இருவரும் ஆட்டமிழந்திருந்தனர். ஆரம்பம் தடுமாற்றம் கண்டாலும் சிமித், கவாயா இணையை பிரித்துவிட முடியவில்லை. மேலதிக இலக்குகள் இழப்பில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரேலியா. இருவரும் அரைச்சதம் கடந்தனர். 71 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார் சிமித். நாள் முடிவில் ஆஸ்திரேலியா 147-3. கவாயா 57 ஓட்டங்களுடனும், வோக்ஸ் 7 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக சவுத்தி 2 இலக்குகளை யும், கிறைக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்த டெஸ்ட்டில் விளையாடியதன் மூலம் அறிமுகமான டெஸ்ட்டிலிருந்து தொடர்ச்சியாக நூறு டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடியவர் என்ற பெருமையை மக்கலம் பெற்றுள்ளார். (ம)

# காலிறுதியில் வீனஸ்

தைவான் ரென்னிஸ் தொடரில் காலிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளார் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ்.

தைவானின் கவோசியுங் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் பெண்களுக்கான காலிறுதிக்கு முந்தைய சுற்றில் முன்னணி வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ், போலந்தின் ரட்வன்ஸ்காவை எதிர்கொண்டார். இதில் வீனஸ் வில்லியம்ஸ் 6:4, 6:2 என்ற நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கடந்த மாதம் ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடரில் வீனஸ் வில்லியம்ஸ் முதல் சுற்றிலேயே வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வீரர்களிடம் இலஞ்சம் கேட்ட குற்றச்சாட்டை முழுவதுமாக நிராகரித்துள்ளார் மவாங்கி

ஊக்கமருந்துப் பாவனைக்காகத் தடை செய்யப்பட்ட தடகள வீரர்கள் இருவரிடம் தான் இலஞ்சம் கேட்டதாக எழுந்த குற்றச்சாட்டை கென்ய தடகளச் சம்மேளனத்தின் பிரதம நிறை வேற்று அதிகாரி ஐசாக் மவாங்கி நிராகரித்துள்ளார்.

கென்ய தடகள வீரர்களான ஜோய் சகாரி, பிரான்சிஸ்கோ கொகி முனுங்கோ இருவரும் தங்களது நான்கு வருடத் தடையை இரண்டு வருடங்களாகக் குறைப்பதற்கு தங்களிடம் தலா 24 ஆயிரம் ஐக்கிய அமெரிக்க டொலர்களை ஐசாக் இலஞ்சமா கக் கேட்டதாகத் தெரிவித்திருந்தனர். எனினும், இக்குற்றச்சாட்டை மறுத்துள்ள ஐசாக், ஊக்கமருந்துப் பாவனை தொடர்பான தண்டனை, மிகவும் நியமமானது எனவும் அதில் மாற்றங்களை ஏற்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

ஐசாக் மேலும் தெரிவிக்கையில்; "இந்தக்குற்றச்சாட்டு, வெறும் புனைவே. ஏனெனில் ஊக்கமருந்து தொடர்பாக நீங்கள் அகப்பட்டால், அதற்கான தண்டனை மிகவும் நியமமானது.

தண்டனையைக் குறைப்பதற்காகப் பணம் கோரப்பட்டது எனச் சிலர் சொல்வது சுவாரசியமானது. ஏனெனில், ஒருவரது குற்றம் நிரூபணமான பின் அவருக் கான தண்டனையில் தேசிய தடகளச் சம்மேளனம் ஆதிக்கம் செலுத்த முடியாது" -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி சுடுதலில் நேற்று அதிக பதக்கங்கள் தெற்காசியக் களத்தில் இலங்கையும் ஆதிக்கம்




இந்தியாவின் குவாத்தி நகரில் நடைபெற்றுவரும் 12ஆவது தெற்காசிய போட்டிகளில் நேற்றைய பெறுபேறுகளின் அடிப்படையில் 157 பதக்கங்களுடன் இலங்கை இரண்டாம் இடத்தில் தொடர்கின்றது. இவற்றில் 25 தங்கப்பதக்கங்களும், 53 வெள்ளிப்பதக்கங்களும், 79 வெண்கலப்பதக்கங்களும் அடங்குகின்றன.

இதன்படி நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 25 மீற்றர் குழுநிலை துப்பாக்கி சுடுதலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.பெர்னாண்டோ, எம்.பதிரண, எல்.வல்கம மூவரும் வெண்கலப்பதக்கங் களைக் கைப்பற்றினர். பெண்களுக்கான மரதன் ஓட்டத்தில் சி.அனுரத்த வெள்ளிப்பதக்கத்தையும், பி.ராஜசேகர வெண்கலப்பதக்கத்தையும் கைப்பற்றினர். 400 மீற்றர் ஓட்டத்தில் கௌசல்யா வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் எல்.லக்மாலி வெண்கலப்பதக்கத்தைக் கைப்பற்றினார். 50 மீற்றர் குழுநிலைத் துப்பாக்கி சுடுதலில் எம்.சமரக்கோன், வை.கிரிசாந்த, டபிள்யு.கருணாரத்ன ஆகியோரைக் கொண்ட குழு வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றியது.

நேற்றுக்கிடைத்த பதக்கங்களுடன் ஒட்டு மொத்தமாக 157 பதக்கங்களுடன் இலங்கை இரண்டாம் இடத்தில் தொடர்கின்றது. இவற்றில் 25 தங்கப்பதக்கங்களும், 53 வெள்ளிப்பதக்கங்களும், 79 வெண்கலப்பதக்கங்களும் அடங்குகின்றன. 146 தங்கம், 79 வெள்ளி, 23 வெண்கலம் உட்பட மொத்தமாக 248 பதக்கங்களுடன் இந்தியா முதலிடத்தில் உள்ளது. 7 தங்கம், 23 வெள்ளி, 43 வெண்கலம் என ஒட்டு மொத்தமாக 73 பதக்கங்களுடன் பாகிஸ்தான் மூன்றாவது இடத்தில் உள்ளது. 57 பதக்கங்களுடன் பங்களாதேஷ் நான்காம் இடத்திலும், 33 பதக்கங்களுடன் நேபாளம் ஐந்தாம் இடத்திலும், 15 பதக்கங்களுடன் ஆப்கானிஸ்தான் ஆறாவது இடத்திலும், 5 பதக்கங்களுடன் பூட்டான் ஏழாவது இடத்திலும், மூன்று பதக்கங்களுடன் மாலைதீவு எட்டாவது இடத்திலும் உள்ளன.

தெற்காசிய களத்தில் இன்று நடைபெறும் போட்டிகளாக ஆண்களுக்கான கால்பந்து, ஆண்களுக்கான கைப்பந்து, பெண்களுக்கான கைப்பந்து, ஆண்களுக்கான கபடி, பெண்களுக்கான கபடி, ஆண்களுக்கான துப்பாக்கி சுடுதல், பெண்களுக்கான துப்பாக்கி சுடுதல், ஆண்களுக்கான கொக்கி, பெண்களுக்கான கொக்கி, ஆண்களுக்கான கராத்தே, பெண்களுக்கான கராத்தே ஆகியன நடைபெறவுள்ளன.

(ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 13

*றோயல் வி.கழகத் தொடர்*

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மின்னொளியில் இடம்பெறும் சுப்பர் 8 அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் மன்னார் சென். ஜோசப் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணி மோதவுள்ளது.

*குணபாலசிங்கம் ஞாபகார்த்த தொடர்*

யாழ். கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குணபாலசிங்கம் குடும்பத்தினர் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 7 வீரர்கள் பங்கு பற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய அணி மோதவுள்ளது.

*யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்*

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் அணியை எதிர்த்து சண்சையின் அணி மோதவுள்ளது.

*துடுப்பாட்டத் தொடர்*

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்குஇடையிலானஇருபாலருக்குமான 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென் பந்து துடுப்பாட்டத்தொடர் இன்று சனிக்கிழமை பச்சிலைப் பள்ளி பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

*கரப்பந்தாட்டத் தொடர்*

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான இருபாலருக்குமான கரப்பந்தாட்டத் தொடர் நாளை ஞாயிற்றுக் கிழமை பாரதிபுரம் ஆதவன் விளையாட்டு மைதானத்தில் காலை 8.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. (ம-23)

## இல்ல மெய்வன்மைப் போட்டிகள்

அச்சுவேலி, பெப். 13

*அச்சுவேலி சரஸ்வதி வித்தி.*

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்வார்.

*கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி*

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. கல்லூரியின் அதிபர் பி.செல்வநாயகத்தின் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

*புற்றளை மகா வித்தியாலயம்*

புற்றளை மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

*அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை*

அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையின் இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலையின் அதிபர் வே.குணசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினரும், விளையாட்டுத்துறை இணைப்பாளருமான இ.ஆனோல்ட் கலந்துகொள்ளவுள்ளார். (ம-11-422-108)

## அறிவொளி, வைகறை அணிகள் தாச்சித் தொடரில் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், பெப். 13

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுமதியுடன் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் அறிவொளி, வைகறை அணிகள் வெற்றி பெற்றுள்ளன. உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வரும் இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதிக் கொண்டது. இதில் பண்டத்தரிப்பு அறிவொளி அணி 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் கீரிமலை உதயதாரகை அணியை எதிர்த்து புதுமடம் வைகறை அணி மோதிக் கொண்டது. இதில் புதுமடம் வைகறை அணி 21:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (23)

## அன்ரனிஸிடம் வீழ்ந்தது றோயல்

யாழ்ப்பாணம், பெப். 13

கால்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் ஈ.கே.குமரையா ஞாபகார்த்த தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

அரியாலையில் அமைந்துள்ள கால்பந்தாட்ட பயிற்சி மைதானத்தில் மாலை4.15 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த தொடர்

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக்கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் அரையிறுதியாட்டத்தில் ஹாட்லியிற்ஸ் அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## ஏபிசி அணிக்கு வெற்றி

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 19ஆவது வருடமாக வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஏபிசி அணியை எதிர்த்து சக்தி அணி மோதிக் கொண்டது. இதில் ஏபிசி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைத் தாண்டிய உபெக்சிகா தெற்காசியாவில் வெண்கலம் வென்றார்






தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து பதக்கம் வென்ற வீராங்கனை உபெக்சிகா எகடவெ லவுக்கு பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.

குறித்த வீராங்கனை ஆசியப் போட்டிகளுக்கு தெரிவாகும் முன்னரே கர்ப்பமடைந்திருந்தார். எனினும் தனது விடாமுயற் சியால் துப்பாக்கி சுடுதலில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு தெரிவாகியிருந்தார். தெற்காசிய போட்டிகளுக்கு இலங்கை அணி புறப்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் அவருக்கு இரட்டைக் குழந்தைகள் பிறந்தன. போதிய கால அவகாசம் இல்லாமையால் அவரது குழந்தைகளுக்கு விசா கிடைக்கவில்லை. சிறுகுழந்தைகள் என்பதால் அவர்களுக்கு தாய்ப்பாலைத் தவிர வேறெந்த பாலையும் கொடுக்க முடியாது. இதனால் அவர் போட்டிகளில் பங்கேற்பது கேள்விக்குறியாக மாறியது. எனினும் பின்னர் விளையாட்டு அமைச்சின் தலையீட்டினால் அவர் குழந்தை களுடன் போட்டிகளுக்காக இந்தியா செல்ல முடிந்ததுடன், துப்பாக்கி சுடுதலில் வெண்கலப் பதக்கம் வென்றும் அசத்தினார். இவருக்கு இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி உட்பட பலரும் வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர். (ம)

## கிருஸ்ராரின் காலிறுதிகள்

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டங்களில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் அரசடி ஸ்போட்ஸ் விளையாட்டுக் கழகமும் யாழ். கொட்டடி விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. தொடர்ந்து இடம்பெறும் ஆட்டங்களில் நவிண்டில் செவின்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழகமும், பருத்தித்துறை இளம் கதிர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.கலையொளி விளையாட்டுக் கழகமும், கொம்மாந்தறை கழுகுகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ம-108)

**மொழி வகுப்புகள்**
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் -Deutsch, நெதெர்லாந்து - Dutch, French, Italian English வகுப்புகள் நடைபெறுகின்றன.
விவேகானந்தா அக்கடமி
221/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464

## இல்லமெய்வன்மைப் போட்டிகள்

கரவெட்டி, பெப். 13

கரவெட்டி கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ப.செல்வநாயகம் தலைமையில் நடை பெறவுள்ளன. நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமா காணக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ம-173)




## ரி-20 உலகக்கிண்ணத்துக்கான தென்னாபிரிக்க அணி அறிவிப்பு




ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்கும் தென்னாபிரிக்க அணியை அந்த நாட்டு கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வரும் வேகப்பந்துவீச்சாளர் ஸ்ரெயின் அணியில் இடம்பெற்றுள்ளார். அதேபோல் ரபடா, அபோட் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டதால் மோர்கல் அணியில் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்க அணியின் விவரம் - பிளாசிஸ் (தலைவர்), அம்லா, கொக், வில்லியர்ஸ், டுமினி, பெக்கார்டின், டேவிட் மில்லர், ரூசோ, இம்ரான் தாகீர், கிறிஸ் மோரிஸ், ஆரோன் பான்ஜியோ, அபோட், ஸ்ரெயின், டேவிட் வீஸ். (ம)

## துடுப்பாட்டத்தில் சிவப்பு அட்டை மெரிலெபோன் கழகம் பரிசீலிப்பு

இங்கிலாந்தின் பிரபல கிரிக்கெட் கழகமான மெரிலெபோன் கழகம் முறையற்ற போக்கினை கடைப்பிடிக்கும் வீரர்களை சிவப்பு அட்டை காண்பித்து வெளியேற்றும் முறையை அறிமுகப்படுத்த பரிசீலித்து வருகிறது.

கால்பந்தாட்டத்தின் போது தகராறு செய்யும் வீரர்களுக்கு, நடுவர்கள் மஞ்சள் அல்லது சிவப்பு அட்டை காட்டுவது வழக்கம். மஞ்சள் அட்டை வீரரை எச்சரிக்கை செய்யும் படியும், சிவப்பு அட்டை அவர்களை மைதானத்தை விட்டு வெளியேற்றுவதையும் குறிக்கும். தற்போது அதே பாணியில் கிரிக்கெட்டிலும் மஞ்சள் மற்றும் சிவப்பு அட்டை காண்பிக்கும் முறையை புகுத்த முடிவு செய்துள்ளது இங்கிலாந்தின் மெரிலெபோன் கிரிக்கெட் கழகம். ஒளிரும் இலக்குகள் போன்ற திட்டங்கள் கழகங்களில் இருந்தே ஐ.சி.சியிடம் வந்தன. இதனால் இந்த முறைமையும் ஐ.சி.சியிடம் வருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக கணிக்கப்படுகிறது. (ம)

## இமையாண மத்தியின் துடுப்பாட்டத் தொடர்

கரணவாய். பெப். 13

இமையாணன் மத்திய விளை யாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 8 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டத் தொடர் இன்று சனிக்கிழமை முதல் குறித்த கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் காலை 8.30மணிக்கு மைதானத்திற்கு வருகைதந்து பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.02.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.